La Chapelle இல்
மிகப் பிரமாண்டமான
பல்பொருள் அங்காடி
கோபால்
அன் கோ சுப்பர்மார்சே
66, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: 40 05 04 50
Fax: 40 05 09 90

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Suisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 2 05 - 11 செப்டெம்பர் 1996 முழக்கம் : 86

La Chapelle இல்
மிகப் பிரமாண்டமான
பல்பொருள் அங்காடி
KOPAL
& CO Super Marche
66, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: 40 05 04 50
Fax: 40 05 09 90

# வடக்கு கிழக்கில் நெருக்கடி
# பல இராணுவ முகாங்களை மூட முடிவு

சிறீலங்காப் படையினருக்கு தொடர்ச்சியான ஆட்பற்றாக்குறை, விநியோக வழிகள் இல்லாமை, அதிகரித்துவரும் புலிகளின் தொடர் தாக்குதல்கள் இவைகளால் வடக்கு கிழக்கில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வடக்கிலும் – கிழக்கிலும் தற்போது படைகளின்வசம் இருக்கும் நிலப்பரப்பை தக்கவைத்துக் கொள்ள குறைந்தபட்சம் மேலதிகமாக 50 ஆயிரம் படையினர் தேவைப்படுகின்றனர். இந்த நிலையில் பல மினி முகாங்களையும், காவல் நிலைகளையும் மூடிவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## கிழக்கில் புலிகளின் கை ஓங்குவதால் இராணுவ உயர்மட்டத்தில் பதற்றம்

கிழக்கு மாகாணத்தில் பரவலாக சிறீலங்கா துருப்பினர் மீது விடுதலைப்புலிகள் அண்மைக் காலமாக அடுத்தடுத்து வெற்றிகரமான தாக்குதல்களை நடத்திவருவது இராணுவ உயர் மட்டத்தில் பெரும் சலசலப்பினைக் கிளப்பியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்ட போது கிழக்கு இராணுவ முகாங்களின் பொறுப்பதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் தலைமைப் பீடத்திற்கு எதிராக தங்களது விசனத்தினை தெரிவித்துக் கொண்டதாக கூறப்படுகிறது.

சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு புலிகளின் கை ஓங்கியுள்ளதாக கருதப்படும் பகுதிகளில் புலிகளை தேடியழிக்கும் இராணுவ நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை இராணுவ முகாங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியபோதே இச் சர்ச்சை ஏற்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு பதில் கொடுத்த முகாம் பொறுப்பதிகாரிகள் இராணுவ முகாங்களை புலிகளிடமிருந்து பாதுகாக்கும் பணி கூட எமக்கு சிரமமாக இருக்கும் இவ்வேளையில், அவர்களைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் அது எமது தரப்பினருக்கே பெரும்



பாரிசில் 02-09-1996 அன்று நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில்

# குடப் பொக்குனவில் பொலிஸ் ரோந்து மீது புலிகள் தாக்குதல் - 28 பொலிசார் பலி

முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் காரணமாக புலிகள் பெருமளவு கொல்லப்பட்டதால் அவர்களது தாக்குதல்திறன் மந்தமடைந்துவிட்டது என சிறிலங்காவின் பாதுகாப்பு உயர்மட்டம் சர்வதேச ரீதியில் பிரச்சாரம் செய்து 24 மணி நேரம் ஆவதற்குள் பொலநறுவை மாவட்டத்திலுள்ள குடப்பொக்குன பொலிஸ் ரோந்து அணி மீது விடுதலைப் புலிகள் சாதுரியமாக மேற்கொண்ட அதிரடித் தாக்குதலால் அவ் ரோந்து அணி சிதறிடிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் 28 பொலிசார் கொல்லப்பட்டு பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களை தூக்கிக்கொண்டு ஏனையோர் காட்டுப் பகுதிக்குள் ஓடித் தப்பிக் கொண்டனர்.

கடந்த 29.08.96 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் ஊர் எல்லையினுள் புலிகள் ஊடுருவி உள்ளனரா என்பதை அறிவதற்காக பொலிஸ் ரோந்து அணியொன்று குடப்பொக்குன பொலிஸ் நிலையத்திலிருந்த ரோந்து சென்றது. இவ் ரோந்து அணி மீது பொலிஸ் நிலையத்திலிருந்து சில மீற்றர் தூரத்தில்வைத்து விடுதலைப்புலிகள் இவ் அதிரடித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலால் நிலைகுலைந்த பொலிசார் இறந்தவர்களையும் ஆயுதங்களையும் விட்டுவிட்டு காயமடைந்தவர்களை இழுத்துக் கொண்டு அருகிலிருந்த காட்டுப் பகுதிக்கு தப்பி ஓடியுள்ளனர். இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன் அகஸ்தியன் துஷ்யந்தன் என்ற பேராளி வீரமரணமடைந்துள்ளார். இத் தாக்குதலில் 26 T56 ரக தானியங்கித் துப்பாக்கிகள் உட்பட ஏராளமான இராணுவ தளபாடங்கள் (தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## 'சத்ஜய' துருப்பினர் இரு வாரங்களாக நகர முடியாமல் பரந்தனிலாம்

முல்லைத்தீவு இராணுவ தளத் தோல்வியை மூடிமறைக்க கடந்த 22, 26–ம் திகதி சிறீலங்கா இராணுவத்தால் பெரும் எடுப்புடன் ஆரம்பிக்கப்பட்ட சத்ஜய தோல்வியைத் தழுவியுள்ளதாக இராணுவ அதிகாரிகள் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனையிறவு முகாமின் தென் பகுதியில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் கனரக, விமானத் தாக்குதலின் உதவியுடன் பரந்தனை அடைந்தனர். அப் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி நகர முற்பட்ட படையினரை புலிகள் தமது உக்கிரமான தாக்குதல்களின் மூலம் தடுத்து நிறுத்தினர். ஆனாலும் அரச செய்தி தாபனங்கள் மூலமாக தாம் கிளிநொச்சியை அண்மித்து விட்டோம், வெளிப் புறங்களைப் பிடித்துவிட்டோம் என்று கூறிய இராணுவம் இப்போது வேறுவிதமான தகவல்களைக் (தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## பாரிசில் சிறீலங்கா அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்ட ஒன்றுகூடல்

பாரிஸ் நகரத்தில் சிறீலங்கா தூதரகத்தை அண்மித்திருக்கும் PLACE ST. AUGUSTIN பகுதியில் சிறீலங்கா அரசின் இனப் படுகொலையைக் கண்டித்தும், தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரியும் தமிழீழ மக்கள் அடையாள ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை 02.09.96 திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் ஆறு மணிவரை நடாத்தினார்கள். பாரிஸ் நகரத்தின் பரபரப்பான வேலைநேரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டு சுலோக அட்டைகளைத் தாங்கிப் பிடித்தவாறும் கோசங்களை எழுப்பியவாறும் தமது அடையாள எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

சிறீலங்கா தூதரகம் அமைந்திருக்கும் பகுதியாகையால் மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே கூடுவதற்கு அனுமதி வழங்கப்பட் (தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## தமிழ்கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் காப்பாற்றப்படாததோடு, தமது சட்டவிரோத கைது தடுத்து வைப்பு என்பனவற்றை நியாயப்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளால் கழுத்துறை மற்றும் மகசீன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள் மீண்டும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். (தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## பேசாலை அகதி முகாமை யூ.என்.எச். சி.ஆர். பொறுப்பேற்றது

சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டில் இருந்த மன்னார் மாவட்டத்தில் உள்ள பேசாலை அகதிகள் முகாம் உரிய முறையில் பராமரிக்கப்படாததாலும், அடிக்கடி சிறீலங்கா பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாகி வந்ததாலும் கடந்த சில நாட்களாக இந்த முகாமிலிருந்து மக்கள் குடும்பம் குடும்பமாக தமிழ்நாட்டுக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

இந்த விவகாரம் தமிழக அரசுக்கும், இந்திய மத்திய அரசுக்கும் அரசியல் ரீதியிலான பிரச்சனைகளை உருவாக்கியதால் இந்திய அரசு அகதிகள் தமிழ்நாட்டுக்கு வருவதற்கான சூழ்நிலைகள் உருவாகி வருவதை தடுக்கும்படி சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்தது.

இதனால் இந்த முகாமை தற்போது அகதிகளுக்கான ஐ.நா. ஸ்தானிகராலயம் (UNHCR) பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது. 1983 இற்குப் பின் நடைபெற்ற (தொடர்ச்சி 2-ம் பக்கம்)

தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
K. Kesenthiran

**Impression:**
IMPRIMERIE MEAULLE

*நிர்வாகி:*
*ப. வேலுப்பிள்ளை*
*ஆசிரியர்:*
*க. கஜேந்திரன்*

தபால் தொடர்புகளுக்கு:
**EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris,**
**France**

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 40 37 63 63
Fax: 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374
நேசன் - 077 696592

லண்டன்:
ஜெயந்தன்:
Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து:
தாணுவர்த்தன்
Tel: 0223 680462

## விற்பனைக்கு

PEUGOT
405 GRD
டீசல் (ஆண்டு 90)
விலை 22000 FF
தொடர்புகளுக்கு:
48 48 39 64

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சத்ஜய...

கூறத் தொடங்கியுள்ளது. பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் இடையே உள்ள ஒரு பாலத்தருகே நின்ற இராணுவம் இப்போது மீண்டும் பரந்தனுக்கு தமது நிலைகளை பலப்படுத்துவதாகவும், கடந்த இரண்டு வாரங்களாக தமது படையினர் எந்தவித படை நகர்த்தல்களாயும் மேற்கொள்ளவில்லை எனவும் கூறுகின்றது. இது விடயமாக கடந்த சில நாட்களுக்கு முன் தமது பாதுகாப்பு நிலைகளுக்குள் ஊடுருவ முயன்ற இரு விடுதலைப் புலிகளை தாம் சுட்டுக் கொன்றுள்ளதாக ஒரு இராணுவ அதிகாரி கூறுவதாகச் சொல்லும் ஐலண்ட் பத்திரிகை, இராணுவத்தின் இந்த மாறுதல்கள் புலிகளின் உக்கிரமான தாக்குதல்களாலேயே ஏற்பட்டன என்பதை தணிக்கைகளின் காரணமாக கூறமுடியாதுள்ளதையும் தெரிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் கைதிகள்...

கடந்த 23.06.96 தொடக்கம் 29.06.96 வரை ஏழு நாட்கள் உண்ணாவிரதம் இருந்த இவர்களை சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி எஸ்.ஏச். ஜினசேன சந்தித்து விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற அவர்களது கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்வதாகவும், விரைவில் அதை நடைமுறைப்படுத்தும் என்றும் உறுதியளித்திருந்தார்.

ஆனால் அந்த உறுதிமொழிகள் இரண்டு மாதங்கள் கடந்தும் இன்னும் நிறைவேற்றப்படாமல் பெயருக்கு விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரை மட்டும் விடுதலை செய்ததால் தாம் மீண்டும் இம்முறை சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்திருப்பதாகவும் மலையகத் தமிழ் இளைஞர்கள் தெரிவித்தனர்.

கடந்த முறைபோல் இந்தத் தடவை, வாய்ச்சொல் உறுதிமொழிகள் எதற்கும் தாம் கட்டுப்பட்டு விடப் போவதில்லை என்றும் தங்களை விடுதலை செய்யாவிட்டால் நிச்சயமாக தாங்கள் சிறையில் உயிரைவிடத் தயாராகிவிட்டோம் என்றும், எதிர்காலம் பற்றி எதுவுமே தெரியாமல் இருண்ட சிறைக்குள் அடைபட்டுக் கிடப்பதைவிட சாவதே மேல் என்று முடிவுக்குத் தாம் வந்துவிட்டதாகவும் இந்த இளைஞர்கள் பத்திரிகையாளர்களுக்கு அறிவித்துள்ளனர்.

## பாரிசில்...

டிருந்த போதிலும் அந்தத் தொகைக்கு மேல் மக்கள் வந்து கூடினர். இந்த ஒன்றுகூடலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் சர்வதேசச் செயலகப் பொறுப்பாளருமான திரு.லோறன்ஸ் திலகர், விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளைப் பொறுப்பாளர் திரு. வேலும் மயிலும் மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வடக்கு...

குடாநாட்டிலும், கிழக்கு மாகாணத்திலும் புலிகள் ஒரே நேரத்தில் தொடர் தாக்குதல் நடத்தக்கூடியதாக இருப்பதால் அதை சமாளிக்கும் விதத்தில் பலாலி, ஆனையிறவு, பூநகரி, தாண்டிக்குளம் முகாங்களைப்போல் குறிப்பிட்ட அளவு பாரிய இராணுவ முகாங்களை அமைத்து அப் பிரதேசங்களை கட்டுப்படுத்த சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் தீர்மானித்துள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சிறீலங்கா அரசு எதிர்பார்த்த வகையில் சிங்கள இளைஞர்கள் பெருமளவுக்கு படையில் சேர முன்வராததால் மேற்குலக நாடுகளைப் போல் கட்டாய இராணுவச் சேவையை அமுல்படுத்தி இராணுவத் துணைப்படைக்கு ஆள்திரட்ட அரசு புதிய திட்டமொன்றை வகுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் பூநகரி முகாம் தாக்கப்பட்ட போது இழப்பு ஏற்பட்டாலும் அதை மீளக் கைப்பற்றும் நிலை இருந்ததாகவும், இந்த ஆட்சியில் முல்லை முகாம் தாக்கப்பட்ட போது அதை மீளக் கைப்பற்ற முடியாத நிலையில் இராணுவம் இருப்பது பலத்த விமர்சனத்திற்குள்ளானதால் முல்லை நிலை எதிர்காலத்தில் மற்ற முகாங்களுக்கு வராமல் தடுக்க சிறிய முகாங்களை இல்லாமல் செய்து அதிக ஆள் ஆயுத பலத்துடன் பாரிய இராணுவத் தளங்களை வடக்கு - கிழக்கில் நிறுவ அரசு தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## குடபொக்குனவில்..

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இத் தாக்குதலிலிருந்து தப்பிச் சென்ற பொலிசாரை மீட்பதற்காக சில மணி நேரத்தின் பின்னரே மீட்புக்குழு இவ் விடத்திற்கு அனுப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கிழக்கில்...

இழப்பினைத்தரும் எனவும் எச்சரித்துள்ளனர்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளோ இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளவற்கான இராணுவ தளபாடங்கள் தயாராக இருப்பதாகவும், படையினரை நகர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் சூடாகப் பதிலளித்துள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில் புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காகும் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி ஒருவர் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை நோக்கி கொழும்பில் இருந்த கொண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பேசாலை....

இராணுவப் படுகொலைகளினால் தமிழ்நாட்டுக்குச் சென்று மண்டபம் முகாமில் UNHCR இன் அனுசரணையுடன் தங்கியிருந்த இந்த அகதிகள் கடந்த வருடமும் அதற்கு முன் வருடமும் பேசாலைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

உத்தரவுகளை பிறப்பித்துவிட்டு கதிரைகளுக்கு பாரமாக இருக்காமல் எமது முகாங்களில் வந்து ஓரிரு இரவுகள் தங்கிப் பாருங்கள் அப்போதுதான் உண்மை புரியும் என கூறியதற்கு ஏனைய முகாம் பொறுப்பதிகாரிகளும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## பரதநாட்டிய அரங்கேற்றம்



எமது அன்பு மகளும் அர்ச்சனா கலைக் கல்லூரி
நடன ஆசிரியை **திருமதி.கௌசலா ஆனந்தராஜா**
அவர்களது மாணவியுமான **செல்வி.ஷார்மினி**
**குணபாலசிங்கம்** அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம்
எதிர்வரும் ஆவணித் திங்கள் 22ஆம் நாள் (07.09.96) சனிக்கிழமை
பிற்பகல் 6.30 மணியளவில் நடைபெற இருப்பதால் உறவினர்கள்,
நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து விழாவினைச்
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
அரங்கேற்ற மண்டபம்: Espace AMORC
199 bis Rue St.Martin,75003 Paris (Metro: Etienne Marcel)

திரு.திருமதி.குணபாலசிங்கம்

## 5ம் நினைவாஞ்சலி



வீரஜனனம் 18.09.1971 வீரதியாகம் 08.09.1991

### லெப்டினன்ட் "மதுரா" (வடிவாம்பாள் பரமு)

மணலாற்றிலே வீரதியாகத்தைப் புரிந்த–மதுராவே
மண் மீதினிலே வீர வரலாறு புரிந்த சகோதரர்களே
உங்கட்கு எமது தாகங்கள் சமர்பணம்
உங்கள் கால்கள் தேடிய எல்லையை அடையும் வரை
உங்கள் கரங்கள் ஏந்திய துப்பாக்கி பார்த்த குறியை நோக்கி
உங்கள் இதயம் சுமந்த இலட்சிய தாகத்தை சுமந்து
உங்கள் உதடுகள் சொல்லத் துடித்த தேசிய கீதத்தைச் சொல்வதற்காய்
நீங்கள் சுவாசிக்க நினைத்த சுதந்திரக் காற்றைத் தேடிக் கொண்டு
உங்கள் கண்கள் கண்ட கனவுகளை நினைவாக்க
நாங்களும் உங்களை நோக்கித் தான்!
உங்களது ஆத்ம சாந்திக்காய் நாங்கள்
சமர்பிக்கத் துடிப்பது வீர வணக்கங்கள் மட்டுமல்ல
தமிழீழத்தின் விடுதலையையும் சேர்த்துத் தான்

வீரதியாகமான ஐந்தாவது ஆண்டினை நினைவு கூரும்
முருகமூர்த்தி குடும்பம், குமாரி துரை குடும்பம் – சுவிஸ்
அப்பா,அம்மா,சகோதரி, தமிழீழம்
உற்றார் உறவினர் நண்பர்கள்.

லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Fax: 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

Tél: 42 09 70 00

*à partire de*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. | Londres | - | 650 Frs. |
| Delhi | - | 3,900 Frs. | New york | - | 2,400 Frs. |
| Bangkok | - | 3,350 Frs. | Montreal | - | 2,400 Frs. |
| Colombo | - | 4,150 Frs. | Oslo | - | 2,010 Frs. |
| Singapour | - | 3,350 Frs. | Toronto | - | 2,700 Frs. |
| Kualalumpur | - | 3,400 Frs. | Nepal | - | 4,820 Frs. |
| Madras | - | 4,750 Frs. | | | |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கிரனைட் தாக்குதல் புளொட்டும் இராணுவமும் இணைந்து பாரியதேடுதல்

(வவுனியா)

வவுனியா நகரத்தில் புளொட் குழுவினரும், சிறீலங்காப் பொலிசாரும் இணைந்து லாண்றோவர் வண்டியொன்றில் ரோந்து சென்றுகொண்டிருந்த போது இனந்தெரியாத இருவர் நடத்திய கிரனைட் தாக்குதலில் அதில் பயணம் செய்த ஒரு பொலிசாரும், புளொட் உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

கடந்த 27.08.96 செவ்வாய்க் கிழமை நடந்த இநதச் சம்பவத்தையடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த பொலிசார் அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாகச் சுட்டதில் ஏராளமான பொது மக்கள் காயமடைந்தனர். இதில் ஐவர் கவலைக்கிடமான நிலையில் உடனடியாக அனுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதனையடுத்து வவுனியா நகரில் திடீர் ஊரடங்கு உத்தரவை அறிவித்த இராணுவத்தினர் நகர்ப்பகுதி முழுவதையும் சுற்றிவளைத்து புளொட் குழுவினரின் உதவியோடு வீதி வீதியாக சோதனையிட்டனர். வவுனியா நகர்ப்பகுதியில் இருந்த மக்கள் அனைவரும் பஸ்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு தீவிரமாக சோதனையிடப்பட்டனர். 15 வயதிற்கும், 40 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் புளொட் குழுவினரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டனர்.

பகல் 11.30 மணிக்கு கொழும்பிலிருந்து யாழ்தேவி ரயிலில் வந்த பயணிகளும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர சோதனை செய்யப்பட்டனர்:

இது தொடர்பாக கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு செய்திவெளியிட்ட சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் வவுனியா நகரில் உள்ள மணிக்கூட்டு கோபுரமருகில் 27.08.96 காலை 10 மணியளவில் புலிகள் கிரனைட் ஒன்றை வெடிக்க வைத்தாகவும் இதில் ஒரு பொலிஸ்காரரும், ஒரு புளொட் உறுப்பினரும், ஒரு சிவிலியனும் பலியானதாகவும், இரண்டு இராணுவத்தினர் மூன்று ஊர்காவல் படையினர் உட்பட 14 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

# மா, பாண் விலை மீண்டும் உயர்வு எதிர்க்கட்சி அரசு மீது கண்டனம்

தாம் ஆட்சிக்கு வந்தால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பொருட்களின் விலையைக் குறைக்கப் போவதாக கூறி ஆட்சிக்கு வந்த சிறீலங்காவின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிக்கு மாறாக கடந்தவாரம் மீண்டும் கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகளை உயர்த்தியுள்ளது.

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை மூன்று ரூபாவாலும், ஒரு இறாத்தல் பாணின் விலையை ஒரு ரூபாவாலும் அதிகரித்த அரசின் நடவடிக்கைக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவந்துள்ளன.

ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நிதி அமைச்சருமான ரொனி டீ மெல் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் நான் 11 வருடங்கள் நிதி அமைச்சராக இருந்தேன். ஐந்து வருடங்கள் யுத்தம் ஒன்று நடைபெற்ற சூழ்நிலையிலும் அந்தப் பணியைத் தொடர்ந்தேன். ஆனால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வறிய மற்றும் நடுத்தர மக்களின் வயிற்றிலடிக்கக் கூடிய விதத்தில் நான் நடந்துகொள்ளவில்லை. அத்தியாவசியப் பொருட்களான பால்மா, அரிசி, சீனி, கோதுமைமா, பாண், பருப்பு உட்பட முக்கியமான அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயராத வகையில் அவற்றிற்குரிய மானியங்களில் கைவைக்காது நடந்து கொண்டேன்.

ஆனால், இந்த அரசாங்கம் ஏனைய துறைகளைப் புறக்கணித்துவிட்டு, யுத்தத்தை மட்டுமே கருத்தில்கொண்டு செயற்பட்டு வருகிறது. வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்தி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி செய்யப் போவதாக மக்களுக்கு வாக்குறுதி கொடுத்த ஒரு அரசாங்கம் செய்யக்கூடிய செயலல்ல இது என்று கூறினார்.

அரசின் இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் மட்டுமல்லாது ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மல்பேரிக்குழுவைச் சேர்ந்தவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# இராணுவம் மீது இராணுவம் தாக்குதல் இருவர் பலி

(கொழும்பு)

இராணுவத்தினர் மீதே இராணுவத்தினர் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் சிறீலங்காப் படையினர் மத்தியில் அதிகரித்துவருகின்றது.

கடந்தவாரம் இரவு நேரத்தில் தென்மராட்சி நுணாவில் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் வேட்டையொன்றை மேற்கொண்டபோது, ஏற்கனவே அங்கு பதுங்கியிருந்த இன்னுமொரு குழுவினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் ஒரு இராணுவ அதிகாரியும் படைவீரர் ஒருவரும் கொல்லப்பட்டதாக பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

இதேபோல் வடக்கில் சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் பல சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன. விடுதலைப் புலிகள் எந்த நேரத்திலும் தம்மைத் தாக்கலாம் என உசார்நிலையில் இருக்கும் படையினர், அவசரத்தில் தமது சகாக்களையே புலிகள் என நினைத்து சுட்டுத் தள்ளுவதுடன், உயரதிகாரிகளின் கடுமையான போக்கினால் மனம்நொந்து விரக்தியடைந்து அவர்களாகவே சுட்டுக் கொல்லும் சம்பவங்களும் பல இடங்களில் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவை கொல்ல உளவு பார்த்த வாலிபர் மீது வழக்கு

(கொழும்பு)

சிறீலங்கா ஜனதிபாதி சந்திரிகாவைக் கொல்வதற்கு உளவு பார்த்தாக வதிரி கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்துரை முகுந்தன் என்ற 26 வயது வாலிபர்மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

23.08.96 ல் தயாரிக்கப்பட்ட குற்றப் பத்திகை நிமால் திசாநாயக்கா முன்னிலையில் கடந்த வாரம் முகுந்தனிடம் கையளிக்கப்பட்டது.

01.01.95க்கும், 27.06.95க்கும் இடைப்பட்ட காலத்தில் சந்திரிகாவை கொல்வதற்காக அவரது நடமாட்டங்களை உளவு பார்த்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குற்றத்தின் தடையப் பொருளாக முகுந்தன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது.

ஒக்டோபர் மாதம் 25ம் திகதிக்கு முகுந்தனின் வழக்கை ஒத்திவைத்த நீதிபதி அதுவரை அவரை மகசீன் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

# கிளி அரச அதிபர் கொழும்புக்கு அறிக்கை

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு தில்லை நடராஜா, சத்ஜய இராணுவ நடவடிக்கையில் கிளிநொச்சிப் பகுதியில் ஏற்பட்ட அழிவுகள், சேதவிபரங்கள் குறித்து விரிவான அறிக்கை ஒன்றை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

அவ் அறிக்கையில், பரந்துபட்ட உயிரிழப்பு, தனியார் அரச கட்டிடங்களுக்குண்டான சேத விபரங்கள் '(விமானத் தாக்குதலையும், எறிகணை வீச்சுக்களாலும் ஏற்பட்டவை), காடுகளில் தஞ்சம் புகுந்துள்ள மக்களின் இன்றைய அவல நிலை, நெருக்கடியை எற்படுத்தியுள்ள உணவுப் பற்றாக்குறை போன்ற விபரங்கள் விரிவாக அனுப்பப்பட்டுள்ளன. எனினும் அரசு இது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி ஊழியர்களுக்கு சம்பள முற்பணம்

கிளிநொச்சி செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மூன்றுமாத சம்பளத்தை முற்பணமாகச் செலுத்துவதற்கு கிளிநொச்சி அரச அதிபர் முடிவு செய்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

முற்பணமாக செலுத்தீப்படும் இப் பணத்தை மாதந்தோறும் சிறு தொகையாக மீளளிப்பு செய்வதற்கான வசதிகளையும் அவர் செய்யத் தீர்மானித்துள்ளார். தனது இந்த விதந்துரைகளை உள்நாட்டமைச்சின் அங்கீகாரத்துக்கென அனுப்பிவைத்துள்ளார்.

சத்ஜய இராணுவ நடவடிக்கையினால் பாதிப்படைந்த ஊழியர்களின் புனர்வாழ்வுக்கு இது அவசியம் எனவும் அவர் அனுப்பிய குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

# குருநகரில் கர்ப்பிணிப் பெண் கைது

குருநகர் டேவிட் வீதியில் வைத்து யோகி சுகந்தினி எனப்படும் 22 வயதுடைய கர்பிணிப் பெண் கடந்த 21.08.96 அன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது கைதிற்கான காரத்தை இராணுவத்தினர் வெளியிடவில்லை. நான்கு மாத கர்ப்பிணியான இவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்பதும் அறிவிக்கப்படவில்லை. இதேபோல் யாழ் குடாநாட்டில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள பல பகுதிகளில் கைதுகள் தொடர்ந்தவண்ணமிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


KBM கே.பீ.எம் நகை மாளிகை KBM


அனைத்து நாடுகளுக்கான குறைந்த விலை தொலை பேசிச் சேவை

Telephone Cabine

53410863 53410865
53410864 53410855

தொலை பேசிச் சேவைத் தொடர்புகளுக்கு


தொலை பேசி: 42.59.31.74

5, Rue Labat, 75018 Paris
Métro: Marcadet Poissonniers



KBM நகை மாளிகை

உங்கள் விருப்பம் போல் தங்க நகைகளை வடிவமைத்துத் தருபவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த தமிழர் மீது 'தினகரனின்' கோபம் !

சிறீலங்கா அரசாங்கத்தின் ஊதுகுழலாக எப்போதும் இருந்துகொண்டிருப்பவை ஏரிக் கரைப் பத்திரிகைகளே என்பது பலருக்கும் தெரிந்ததுதான். இந்த ஏரிக்கரை நிறுவனத்தின் தமிழ்ப்பதிப்பான 'தினகரன்' மட்டுமே தற்போது யாழ் குடா நாட்டில் இராணுவப் பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப் படுகின்றன.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக சித்தரிப்பதில் சிங்களத் தேசியத் தினசரிகளைவிட ஒருபடி மேலாகவே இப் பத்திரிகை செயலாற்றிவருகின்றது. உதாரணமாக கடந்த 26.08.96 அன்றைய தினகரனில் 'பயங்கரவாதிகளை ஊக்குவித்தால் ஆபத்து' என்ற தலைப்பின் கீழ் வெளியான ஆசிரியர் கருத்தில்,

"இலங்கையிலிருந்த வெளிநாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரிச் செல்வோரில் 99 சதவீதமானவர்கள் அகதிகளேயல்லர். பொருளாதார சுபீட்சத்தைத் தேடி செல்லும் போலி அகதிகள் அவர்கள். இவர்கள் இந்த நாட்டில் ஓர் ஆயுதப் போராட்டம் இடம்பெறுவதை விரும்புகிறார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒடுக்கு முறைகள் நிகழ்வதாக எடுத்துக்காட்டி, விடுதலைப் போராட்டம் நடைபெறுவதாக கதையளந்தால் மட்டுமே மேற்குநாடுகள் இந்த அகதிகளுக்கு பிச்சை போடும் என்பது அவர்களுக்கு தெரிந்த விடயம். இதனைத்தான் அந்நிய அரசுகளின் நிவாரண உதவிகளில் தங்கிவாழும் அகதிகள் இலங்கையில் ஆயுதப் போராட்டத்தை முன்கொண்டு செல்வதற்காக தாம் பெறும் பிச்சைச் சம்பளத்தில் ஒரு தொகையைப் புலிகளுக்கு வழங்குகிறார்கள். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதை அப்பட்டமாக எதிர்க்கிறார்கள்" எனத் தெரிவிக்கிறது.

# வன்னி அகதிகளுக்கு உதவ தொண்டர் நிறுவனங்கள் முயற்சி

(கொழும்பு)

சிறீலங்கா அரசு சமீபத்தில் கிளிநொச்சிப் பகுதியை நோக்கி மேற்கொண்ட சத்ஜய இராணுவ நடவடிக்கையை அடுத்து வன்னிக் காடுகளுக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக முயற்சி எடுத்து வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

வன்னிக் காடுகளுக்குள்ளும், அங்குள்ள சிறு கிராமங்களுக்குள்ளும் தஞ்சமடைந்துள்ள இந்த அகதிகள் உணவு, மருந்து, குடிநீர், தரிப்பிடம் முதலான எந்த அடிப்பபடை வசதிகள் இன்றியும் மிகவும் கஷ்டப்படுவதாகவும் சிறீலங்கா அரசாங்கம் இந்த மக்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்கு இழுத்தடிப்புச் செய்துவருவதாகவும் சொல்லப்படுகிறது.

தற்போது இந்தப் பகுதியில் உள்ள அகதிகளுக்கு உதவுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைமட்டும் சிறீலங்கா அரசாங்கம் அனுமதித்துள்ளது. மல்லாவியில் தனது அலுவலகத்தை அமைத்துள்ள செஞ்சிலுச்சங்கம் வன்னிப்பகுதியில் தஞ்சமடைந்துள்ள மக்களின் வைத்திய தேவைகளை கருதி நடமாடும் வைத்திய சாலைகளை நடத்திவருகிறது. எல்லைகளற்ற பிரெஞ்சு மருத்துவர் குழு மால்லாவி வைத்தியசாலையில் இருந்து செயற்பட்டுவருகிறது. U.N.H.C.R, ஒக்பாம், ரெட்பானா, கெபரூட், எஸ்.சி. எப். முதலான அரச சார்பற்ற நிறுவனங்களை நடமாடும் சேவைகளை நடத்துவதற்கு சிறீலங்கா அரசு தடைவிதித்துள்ளது.

இந் நிலையில் இந் நிறுவனங்கள் சமீபகாலமாக பெய்து வரும் மழையினால் மிக அதிக அளவுக்கு கஷ்டங்களை அனுபவித்து வரும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளை செய்வதற்கு தமக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தீர்மானித்துள்ளதாக மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில்

சிறீலங்கா குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படுவதாக கடந்த 23.08.96 வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் உள்நாட்டு அமைச்சுக் கட்டுப்பாடின் கீழ் இருந்த இத் திணைக்களத்தின் புதிய பொறுப்பதிகாரியாக பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த ஆர்.ஏ.ஏ.றணவீர கடமையேற்றுள்ளார்.

# பசியால் வாடுபவர்களுக்கு பாம்பும் பூரானும் கூடத் தொல்லை

கிளிநொச்சியிலிருந்து சத்ஜய இரர்ணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வன்னிக் காடுகளில் வாழும் மக்கள் போதிய உணவு கிடைக்காமலும், குடிநீர் கிடைக்காமலும் பசியோடும் பட்டினியோடும் அல்லல்படுகின்ற அதே நேரத்தில் காடுகளுக்குள் இருக்கும் பாம்புகளும், பூரான்களும் கூட அவர்களை தொல்லைப் படுத்தி வருகின்றன.

வன்னிப்பகுதிக் காடுகளில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மக்கள் தங்கியிருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. இவர்களில் அநேகர் மரநிழல்களின் கீழும் காட்டை அண்டிய தற்காலிக கொட்டில்கள், கூடாரங்கள் கீழும் வாழ்ந்து வருகின்றனர். தற்போது அப்பகுதியில் பருவ மழை தொடங்கிவிட்டதால் காடுகளுக்குள் இருக்கும் விசப் பாம்புகளும், பூரான், தேள் முதலான விசப் பூச்சிகளும் இவர்களது உடமைகளுக்குள்ளும், இருப்பிடங்களுக்குள்ளும் புகுந்து வருவதால் இந்த மக்கள் பெரும் கஷ்டத்துடனேயே இரவைக் கழித்து வருகிறார்கள். கடந்த ஒருவார காலமாக பாம்புக்கடி மற்றும் தேள் கடிகளுக்கு அதிகளவு மக்கள் உள்ளாகியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சிங்கப்பூரில் இருந்து கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் கைது

சிங்கப்பூரில் இருந்து கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

ஜேர்மனிக்குச் செல்லும் நோக்கில் சிங்கப்பூர் சென்றிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெகநாதன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணிய சர்மா ஆகிய இருவருமே கடந்த 19.08.96 திங்கட்கிழமை நீர்கொழும்பு நீதிபதியின் உத்தரவின் பேரில் சிறைவைக்கப்பட்டுள்ளதாக அச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களைச் சந்தேகத்தின் பேரில் சிறைவைக்குமாறு பொலிசார் கோரியதற்கிணங்கவே நீதிபதி இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சிறீலங்காவில் போதை வஸ்துக் கடத்தல்; 30 வெளிநாட்டவர்கள் கைது

சிறீலங்காவில் போதை வஸ்துக் கடத்தல் தொடர்பாக 30 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பிரெஞ்சுப் பிரசை, 7 ஜேர்மன் பிரசைகள், ஒரு இத்தாலியப் பிரசை, 5 இந்தியப் பிரசைகள், 3 ஜப்பானியர்கள், 8 பாகிஸ்தானியர்கள், ஒரு ஸ்பானியர் அடங்குவர் என அச் செய்தி அறிக்கை தெரிவிக்கின்றது.




Electronica
King Star Video Movies
Accessoire GSM
Téléphone - Fax - Répondeur
மிக மலிவு விலையில் இலகுவான முறையில் உங்கள் கரங்களில் ரெலிபோன்
கிங் ☆ ஸ்டார் வாடிக்கையாளர்களுக்கு கடனுதவி வழங்கப்படும்
141, Rue Ordener - 75018 Paris. Tel: 42 59 06 06
Mobil: 07 10 63 02 - M°: Jules Joffrin (N°: 12)

Neuss ORIENTAL SHOPPING CENTRE ம்
Dussel dorf INDO - CEYLON HOUSE ம்
இணைந்து வழங்கும்
காலவரையறையற்ற மாபெரும் மலிவு விற்பனை
தரமான பொருட்களை குறைவான விலையில் பெற்றுக்கொள்ள முந்துங்கள்.
இதோ மலிவிற்கு இங்கே உதாரணங்கள் சில....

* 100g கடுகு 0.49Pf,100g வெந்தயம் 49Pf, 100g பெ.சீரகம் 0.59Pf, 100g சி.சீரகம் 0.59Pf, 100g மிளகு 99Pf, 200g மல்லி 99Pf 454g புளி (தாய்லாந்து) 99Pf, 500 கிராம் மைசூர் பருப்பு 1.25Dm, 500g கிராம் கடலைப் பருப்பு 1.25Dm, 5Kg பசுமதி அரிசி (No1) 22.50 Dm மட்டும். 500g உ.பருப்பு 1.25 Dm இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உடன் றோஸ் பாண், பணிஸ் வகைகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* வீடியோ வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக வெளிவந்த அனைத்து வீடியோ பிரதிகளும் அரைக் கட்டண வாடகைக்கு (1Dm) வழங்கப்படும். அத்துடன் நீங்கள் விரும்பும் படத்தின் வீடியோப் பிரதிகளும் மலிவு விலையில் தரப்படும். சிறைச்சாலை, தேவராகம், எஜமான், மன்னன், குருதிப்புனல் பிரதி 6.90Dm மட்டுமே.
* ORIENTAL PARTY SERVICE அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் நீங்கள் விரும்பிய உணவு (சைவ, அசைவ) வகைகளை தயார் செய்து நிகழ்ச்சி நடைபெறும் மண்டபம்வரை விநியோகம் செய்யப்படும். அத்துடன் உணவு பரிமாறுவதற்கான எவர் சில்வர் பாத்திரங்கள் (சில்வர் கோப்பை, ரம்ளர், ஐஸ்கிரீம் கப்) போன்றவை குறைந்த வாடகையில் தரப்படும்.
* உங்களது எந்தவிதமான கொண்டாட்டங்களுக்கும் தேவையான சமையல் பொருட்கள் அனைத்தையும் எம்மிடம் வாங்கினால் காஸ் அடுப்புக்கள், பெரிய RICE COOKER, சமையல் பாத்திரங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
* எமது விஷேட சேவைகள்: உலகின் எப்பகுதிக்கும் குறைந்தவிலையில் விமான பயணச் சீட்டு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.(அவசர பயணம் மேற்கொள்வோரின் நலன் கருதி விமான நிலையத்திலும் ரிக்கற்றுகள் விநியோகம் செய்யப்படும்)
* பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றிற்கான அழகான அழைப்பிதழ்கள், மண்டப சோடனைகள், மாலை வகைகள், ஐயர், வீடியோ, புகைப்பட பிடிப்பு அனைத்தும் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

ORIENTAL SHOPPING CENTRE
Meerer Hof-L 11.12, 4146[illegible] Neuss.
Tel: 02131/278157 - Fax: 02131/278[illegible]

INDO - CEYLON HOUSE
[illegible]ringer Str-107, 40210 Dussel Dorf.
Tel: 0211/365317 - Fax: 0211/1649382

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை வழங்கிய அதிகாரியை சுட்டுக் கொன்ற பொலிஸ்காரர்

மொனறாகலை மாவட்டத்திலுள்ள சியம்பலாண்டுவ விசேட அதிரடிப்படை முகாமில் கடமையாற்றிய பொலிஸ்காரர் ஒருவர் தனக்கு தண்டனை வழங்கிய பொறுப்பதிகாரியை தனது 56 ரக துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் சமீபத்தில் நடைபெற்றுள்ளது.

மேற்படி பொலிஸ் அதிரடிப்படை முகாமில் கடமை பார்த்த உதயகுமார என்னும் பொலிஸ் கான்ஸ்டபிள் தனது கடமை நேரத்தில் நித்திரை செய்துவிட்டார். அதை கண்டுபிடித்த அந்த முகாம் பொறுப்பதிகாரியான கே.எல். குணரத்தினா அதற்குரிய தண்டனையாக அவரை 12 மணிநேரம் தொடர்ந்து கடமையில் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதை கேட்டு ஆத்திரமடைந்த உதயகுமார தனது T56 ரக துப்பாக்கியால் குணரத்தினாவை சுட்டுக் கொன்றுவிட்டார். இது தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் அந்த அதிரடிப்படை முகாமின் துணைப் பொறுப்பதிகாரியான ஹேமசிறீ சாட்சியமளிக்கையில், "சேர் என்னால் 12 மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்ய முடியாது என்று சொல்லிக்கொண்டு உதயகுமார ஓ.ஐ.சி (பொறுப்பதிகாரி) குணரத்தினாவை நோக்கிச் சென்றார்.

இல்லை நீர் எனது கட்டளைப்படி வேலை செய்யத்தான் வேண்டும் என்று குணரத்தினா கண்டிப்பாகச் சொல்ல உதயகுமார தனது கழுத்தில் தொங்கிய துப்பாக்கியை எடு-த்து அவரை நோக்கி நீட்டினார். இதைக் கண்டதும் திடுக்கிட்டுப்போன குணரத்தினா விளக்கமறியல் கைதிகள் இருக்கும் கூண்டுப் பக்கம் ஓடினார். அதற்குள் உதயகுமார அவரை நோக்கி தானியக்க முறையில் தனது துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார். என்ன நடக்கிறது என்று நான் ஓடிவந்த போது அவர் என்னை நோக்கியும் குறிவைத்தார். நான் ஓடி ஒழிந்து கொண்டேன்.

சற்று நேரத்தின் பின் சக பொலிஸ்காரர்களோடு நான் அங்கு வந்து பார்த்த போது ஓ.ஐ.சி குணசேகர இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்தார். நாங்கள் அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம். வழியில் அவரது உயிர் பிரிந்து விட்டது" என்று கூறினார். தற்போது உதயகுமார தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளார்.

## நாட்டைப்பிரிக்க அனுமதியோம் ரணில் விக்கிரமசிங்கா அறிவிப்பு

நாட்டின் இனப்பிரச்சினைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் வைத்திருக்கின்ற தீர்வு நாட்டைப் பிரிப்பதற்கு வழி செய்யக் கூடாது. ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைப் பிரிக்க ஒரு போதும் இடமளிக்காது. நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள பிரச்சினைக்கு எல்லாரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை அரசாங்கம் முன்வைக்குமாக இருந்தால் அதை நாம் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம். என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் மத்துகமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று சிறீலங்காவில் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று யுத்தம், மற்றது பொருளாதாரப் பிரச்சினை 1994 எமது கட்சி ஆட்சியை பொதுசன ஐக்கிய முன்னணியிடம் ஒப்படைத்த போது நாட்டின் நிதிநிலைமை சிறப்பாக இருந்தது. யாழ்ப்பாணம் புலிகள்வசம் இருந்தாலும் வடக்கு கிழக்கின் ஏனைய பகுதிகள் எமது கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. எமது ஆட்சியில் பூநகரிபோல் சில முகாங்கள் தாக்கப் பட்டாலும் அவை மீளக் கைப்பற்றும் வல்லமையில் பாதுகாப்புப் படையினர் இருந்தனர்.

இன்று யாழ்ப்பாணத்தை பிடித்துவிட்டோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளப் படுகிறது ஆனால் சமீபத்தில் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டு ஏராளமான இராணுவத்தினர் கொல்லப்பட்டு விட்டனர். ஏராளமான ஆயுதங்களை புலிகள் எடுத்துச் சென்றுவிட்டனர். எமது படையினரால் அந்த முகாமை மீளக் கைப்பற்ற முடியவில்லை. இன்றுவரை அரசாங்கம் அங்குள்ள உண்மை நிலையை வெளியிடவேயில்லை என்று கூறினார்.

## கிளிநொச்சி செயலக ஊழியர் வேலைக்குத்திரும்ப கோரிக்கை

கிளிநொச்சி செயலகத்தின் ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி நோக்கிய சத்ஜய இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மக்களுடன் கிளிநொச்சி செயலக ஊழியர்களும் இடம் பெயர்ந்துள்ளனர். சத்ஜய இராணுவ நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஸ்கந்தபுரம் செயலகத்துக்கு பணிக்காக வருமாறு அரச அதிபரால் கேட்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலையில் செயலக ஊழியர்களின் சேவை அவசியமாக உள்ளதாக கிளிநொச்சி அரச அதிபரின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

## யாழ்ப்பாணம் மருத்துவமனையில் மருந்து இன்றி சிறுமி மரணம்

யாழ் மருத்துவமனையில் சிகிச்சைக்காகத் தங்கியிருந்த நான்கு வயதுச் சிறுமி ஒருத்தி தேவையான மருந்து கிடைக்காத காரணத்தால் 31.08.96 சனிக்கிழமை அன்று மரணமடைந்துள்ளார்.

மல்லாகத்தைச் சேர்ந்த றொபின்தா செல்வராஜா என்ற சிறுமியே 'பொஸ்யோடின்' மருந்து இல்லாத நிலையிலேயே மரணமானார். இம் மருந்து வைத்தியசாலையில் இல்லாத காரணத்தால் வெளியில் இருந்து வாங்கிவரும்படி வைத்தியர்களால் பணிக்கப்பட்டது. எனினும் எங்கும் இம் மருந்தை அவர்களால் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் இம் மரணம் சம்பவித்துள்ளது. இதேவேளை, பென்டோலின், பிறிடொன், இன்டோசில், புறூபோன், வலியம், விட்டமின் B போன்றவையும் கையிருப்பில் இல்லை. இது பற்றி யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் யாழ் மருத்துவமனை கோரிக்கை விடுத்திருந்தும் இது வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிய வருகிறது.

இலங்கை மகளிர் சங்கம் நடாத்தும்

**கலை விழா - 96**

செல்வி வைஷ்ணவி சீதாபதியின் வீணையிசை, சசி வீடியோ விஷன் ஆதரவில் பாரிஸ் இளையநிலாவின் இசைத் தென்றல், ஞானம் சென்ரர் ஆதரவில் திருமதி பவானி இராஜசிங்கத்தின் மாணவிகளின் நடனநிகழ்ச்சி, கபறினா BOUCHERIE, ஆதரவில் பிரான்ஸ் தமிழ்க் கலைஞர் ஒன்றியம் வழங்கும் ப.தயாநிதியின், "பொழுது புலரும் வரை" (நாடகம்)

**காலம்: 15.09.1996ஞாயிற்றுக்கிழமை 5 மணிக்கு**
**மண்டபம்: 8 Rue Ville L'Eveque, 75008 Paris.**
நுழைவிதழ் 50 பிராங்குகள்
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**

(ADV)

டோட்முண்டில்

**செந்தூராஸ்**

*Super Market Asian*

**மொத்த சில்லறை விற்பனை நிலையம்**

*Johanna Melzer str. 4, 44137 Dortmund - Tel: 0231/ 881337*
*Fax: 0231/8280301* PVT. Tel: / Fax: 02304 / 789287

**23.08.96 முதல்**

| | | | |
|---|---|---|---|
| பெரும் சீரகம் | 100g 0.50 | குத்தரிசி | 3.20 |
| வெந்தயம் | 100g 0.50 | புட்டு அரிசிமா | 3.65 |
| கடுகு | 100g 0.50 | இடியப்ப அரிசிமா | 2.75 |
| USA அரிசி | 5Kg 9.90 | உழுத்தம்மா | 500கி 3.50 |
| மிளகாய்த் தூள் | 500g 5.00 | பயத்தம்மா | 500கி 3.50 |
| நல்எண்ணை | 350ml 4.75 | உழுத்தம் பருப்பு 500கி | 1.30 |
| சுப்பர் சோயா | 100g 1.35 | கடலைப் பருப்பு 500கி | 1.30 |
| தோசை மிக்ஸ் | 400g 2.75 | மைசூர் பருப்பு 500கி | 1.30 |
| அப்ப மிக்ஸ் | 400g 2.75 | கட்டாச் சம்பல் | 5.90 |
| Nikado பப்படம் | 100g 1.00 | கித்துள் சக்கரை | 5.00 |
| Nikado Noodles | 400g 2.30 | குரக்கன்மா | 2.75 |
| Harischandra Noodles | 400g 2.30 | இட்டலி செற் Size2 | 22.50 |
| ரசம் மிக்ஸ் | pkt 1.75 | புட்டுக் குழல் செற் | 18.50 |
| நெல்லிக்கிரஸ் | btl 6.55 | இரும்பு உரல் | 32.50 |
| தீட்டிய சிவப்பு அரிசி | 3.20 - 3.65 | கோபால் பற்பொடி | 4.50 |
| சிவப்பு அரிசி | 1 kg 3.20 | Baby Eau-de-Cologne | 6.50 - 7.50 |
| சம்பா அரிசி | 3.20 - 3.45 | | |

வெள்ளைப்பாரை, செவ்விளை, சீலா, அறக்குளா - 1Kg 6.80, 10Kg 59.00, கணவாய் 2.27 Kg 10.50, சுறா 5Kg 35DM

கனடா, சிங்கப்பூர், பாங்கொக் லண்டன், கொழும்பு, வவுனியா உண்டியல் சேவை

**குறிப்பு: 100DM கொள்வனவிற்கு 1Kg மீன் இலவசம்!!**

**வர்த்தக பெருமக்களுக்கு விசேட விலையில்**

Audio 3.50 முதல் C.D. புதியன 12.50 முதல். London விலையில் சிறுவர் சிறுமியருக்கு உடுபுடவைகள், பஞ்சாபிகள்,

*Sennthutas, Am Schulpfad 6,*
*58239 Schwerte-Ergste - * Tel: 02304 / 74503*

(ADV)

**லிங்கம்ஸ் ஆசியன் மாக்கற்**

**மலிவு விற்பனை 01.09.96 தொடக்கம் 31.09.96 வரை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணத்து கறிப்பவுடர் 500g பெட்டி | 3.99DM | சம்பா அரிசி 1Kg | 2.60DM | பசுமதி அரிசி உடைசல் 20Kg | 24.90DM |
| அமெரிக்கன் அரிசி 10Kg | 22.50DM | யாழ்ப்பாணத்து அரிசிமா 1Kg | 2.60DM | பலாப்பழ ரின் | 1.99DM |

இன்னும் எத்தனையோ பொருட்கள் மலிவு விலையில்

LINKAMS ASIAN MARKT - *Adle Str-5, 44137 Dortmund*

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வயதுக்கு மேல் கட்டாய இராணுவ சேவை

கொழும்பிலிருந்து தமிழரசன்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் கட்டாய இராணுவ சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான தீர்மானத்தை சிறிலங்கா அரசாங்கம் எடுத்திருக்கின்றது. முப்படைகளிலும், பொலிசிலும் சேர்ந்து கொள்வதற்கு இளைஞர்கள் முன்வரத் தயங்குவதை அடுத்தே இந்த கட்



டாய இராணுவசேவை அமுல் செய்யப்பட இருக்கின்றது. இந்த கட்டாய இராணுவ சேவைகள் வெளிநாடுகளில் எப்படி மேற்கொள்கின்றார்கள் என்பதையும் அதன் நடைமுறைகள் குறி-த்தும் அறிந்து கொள்வதில் உயர் இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள். கடந்த வாரத்தில் உயர் இராணுவ அதிகாரிகள் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரக உயர் அதிகாரிகளைச் சந்தித்து சுவிஸ் நாட்டிலுள்ள நிரந்தரப் படைக்குப் புறம்பாக எவ்வாறு வெளியிலிருந்து படைகளுக்கு கட்டாய இராணுவ சேவைக்கு ஆட்சேர்க்கின்றார்கள் என்பதையும் அதன் பெறுபேறுகளையும் கேட்டு அறிந்து கொண்டிருப்பதாக

இருப்பதாக தெரியவருகின்றது. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நாற்பத்தைந்து வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் இருபாலாரையும் எப்படியாவது கட்டாய இராணுவ சேவையில் சேர்த்துக் கொள்ள அவசரகால சட்ட விதிகளை பயன்படுத்தப் போவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. திருமணம் செய்தவர்களும் இக் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கடந்த பத்தாண்டு காலத்தில் இராணுவத்தில் இருந்து இருபத்தியோராயிரம் பேர் தப்பி ஓடி தலைமறைவாகித் திரிகின்றனர். பொது மன்னிப்பு அளித்தும் கூட ஐநூறுக்கும் சற்று அதிகமானோரே திரும்பி வந்துள்ளனர். முல்லைத்தீவு இராணுவ முகாம் நிர்மூலம் செய்யப்பட்ட பின்னர் இரா

ணுவத்தில் பலத்த ஆட் தட்டுப்பாடு நிலவுகிறது. இராணுவத்திற்கு எவரும் விரும்பி வந்து சேர்ந்து கொள்கிறார்கள் இல்லை. இதனால் கட்டாய இராணுவ சேவையை அமுல் படுத்துவது தவிர்க்க முடியாதது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதற்கிடையில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறிய அளவிலான படை முகாம்கள், சிறிய பொலிஸ் நிலையங்கள்,

## மேற்குலக நாடுகளின் முன் மாதிரியை கடைப்பிடிக்க முடிவு

செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல் எதிர்காலத்தில் கொழும்பில் உள்ள அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, இந்தியா, சீனா பாகிஸ்தான், தூதரக அதிகாரிகளையும் இந்த இராணுவ உயர் மட்டக்குழு சந்தித்து விபரங்களை அறிய

காவலரண்கள் ஆகியவற்றை மூடி விடுவதற்கு பாதுகாப்பு அமைச்சுத் தீர்மானித்திருக்கின்றது. சிறிய முகாம்கள் கட்டாய தேவை எனக் கருதும் பட்சத்தில் ஆட் பலத்தை அதிகரித்து தொடர்ந்து தக்க வைக்கும்படி இராணுவத் தளபதி ஜெனரல்

ரொஹான் தளுவத்தை வடக்குக் கிழக்கு பிராந்திய கமாண்டர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண எல்லைகளை பாதுகாப்பதற்காக நூற்றுக்கணக்கான மினி பொலிஸ், இராணுவ முகாம்கள்

## திருமணமானவர்களுக்கும் விதிவிலக்கு இல்லை

அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வெகு விரைவில் மூடப்பட்டு விடும் என கொழும்பில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இருபத்தொன்பதாம் திகதி பொலநறுவை மாவட்டத்தில் வெலிக்கந்தை-க்கு வடக்கே குடா பொக்கன காவலரணைத் தாக்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் மூன்று இன்-ஸ்பெக்டர்கள் உட்பட இருபத்தைந்து பொலிசாரைக் கொன்றனர். சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட பதினொரு பொலிசார் காயமடைந்தனர். ஊர்காவற் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அங்கிருந்து அனைத்து ஆயுதங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்து சென்று விட்டார்கள். இந்த தாக்குதலின் பின்னர் சிறிய பொலிஸ் காவலரண்களை வைத்திருப்பது பயனில்லை என பொலிஸ் தலைமையகம் கருதுகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணயுத்த நிலைகள் தொடர்

## கொழும்பில் மீண்டும் மர்ம நிர்மூழ்கிக் கப்பல்

-ந்து கொண்டிருக்க இலங்கை கடற்படையை பயமுறுத்தி வரும் நீர் மூழ்கி யாருடையது என்பது பெரும் கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது. கடந்த இருபத்தி ஆறாம் திகதி கொழும்புத் துறைமுகத்திற்கு மிகவும் அண்மையில் இந்த வெள்ளை நிறத்திலான நீர்மூழ்கிக் கப்பல் கடலின் மேற்பரப்பிற்கு வந்து சில நிமிடங்கள் இருந்துவிட்டு கடலுக்கு சென்று விட்டதை சிலர் கண்டுள்ளனர். இந்த நீர் மூழ்கி கப்பல் தென்பட்டதை அடுத்து கொழும்புத் துறைமுக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக படையினரும் வரவழைக்கப்பட்டுள்ளனர். நீர் மூழ்கியைக் கண்டு பிடிக்க கடற்படையினர் ஈடுபடுத்தப்படுத்தப்பட்ட போதிலும் அது அகப்படவில்லை. எங்கோ சென்று விட்டது.

அண்மைக் காலமாகவே இந்த நீர் மூழ்கி கப்பலின் மர்ம நடமாட்டத்தை பலர் கண்டுள்ளார்கள். இந்த நீர் மூழ்கி கப்பல் பற்றிய உண்மையை கண்டு பிடிக்க இந்திய கடற்படையின் உதவியை நாடப்போவதாக இலங்கைக் கடற்படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இலங்கை கடற்படையினரிடம் நீர் மூழ்கிகளைக் கண்டுபிடிக்க உபகரணங்களோ அதனை அழிக்க ஆயுதங்களோ இல்லை என, அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும், நீர் பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், ஜெனரல் அநுரத்த ரத்வத்தைக்கும், இடையிலான மோதல் உக்கிரமடைந்து வருகின்றது. தனது குடும்பத்தைப் பற்றி ஜெனரல் அநுரத்த ரத்வத்தை இனிமேல் பேசினால் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். கட்சி அங்கத்தவர் ஒருவரை விலக்குவதற்கு பூரண அதிகாரம் இருப்பதாகவும் பிரதமர் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டன் வெளிவிவகார அமைச்சரும், பொதுநல விவகார அமைச்சருமான மல்கம் றிஃப் கின்ட், பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த சட்டத்தில் வழியே இல்லை எனவும், அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும் எனவும் கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதுவர், தூதரக இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். யுத்தத்தினால் இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது எனவும், அரசியல் தீர்வே உகந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கள வைபவங்களுக்கும், ஊர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;



நித்தி

Tel: 43 03 07 08 / 48 05 02 14 / 49 23 97 32 - பிரயாண வசதி கருதி: 07 34 80 51

(ADV)

ஸ்பெஷல் குரு பீடா

பாரிசில் பிரபல்யமான கடைகளில் கிடைக்கும்!

உங்கள் தேவைக்கு என்றும் கேட்டு வாங்குங்கள்

தொடர்புகளுக்கு:

அம்பாள் வீடியோ -
26, Rue Perdonnet, 75010
Paris. Mº: La Chapelle
Tel: 42 09 33 81

(ADV)

உ
சிவமயம்
மாணிக்க விநாயகர் துணை

திருமணத்திருமுகம்

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சர்வ மங்களமிகு தாத்ரு வருடம் ஆவணி மாதம் 24 ஆம் நாள் (09.09.96) திங்கட்கிழமை காலை 10 மணி முதல் 11.45 வரையுள்ள துலா லக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது த்விதீய புத்திரன்
சிரஞ்சீவி
சிவசண்முகநாத சர்மாவிற்கு

எமது ஜ்யேஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
தாரணியை

இஷ்ட குல தெய்வங்களின் அனுக்கிரகத்துடன் கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்து வைப்பதாய் குரு அருளும் நிறையப் பெற்று சூரிச் அருள் மிகு சிவன் ஆலயத்தில் (Wenthalerstr, 293, 8046 Zurich Tel: 01.371.02.42) முகூர்த்த வைபவம் நடைபெற இருப்பதால் அத்தருணம் நண்பர்களையும், உறவினர்களையும் மித்திர குடும்ப சகிதம் வந்திருந்து நடத்தி மகிழ்வித்தேகுமாறு வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ ச.இராமநாதக் குருக்கள் தம்பதிகள்
கலாபவனம், காரவெட்டி

பிரம்மஸ்ரீ ந.சிவானந்த ராஜசர்மா தம்பதிகள் (நயினாதீவு)
மடிப்பாக்கம், இந்தியா

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

# தமிழக அரசின் தார்மீகக் கடமை

யாழ் குடாநாட்டில் சிறீலங்கா அரசபடைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு தேவையான அனைத்து தேவைகளையும் தாம் பூர்த்தி செய்திருப்பதாக அரசு கூறிக்கொண்டிருக்கிறது. ஆனால் இவ்வாரம் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி யாழ் போதனா வைத்தியசாலையில் நோய்க்கான மருந்து இன்றி ஒரு சிறுமி ஒருத்தி மரணமாகியுள்ளார். தொழுநோயாளி ஒருவர் போதிய மருத்துவ வசதி இன்றி தற்கொலை புரிந்துள்ளார். போதிய உணவின்றி பட்டினிச்சாவு தோன்றும் அபாயம் உருவாகியுள்ளது. கைதுகள், பாலியல் வன்முறைகள் கொலைகள் என இராணுவ அடாவடித்தனங்கள் மலிந்து போயுள்ள ஒரு சுடுகாடாக யாழ்ப்பாணத்தை மாற்றிவிட அரசும், அதனது படைகளும் முயன்றுவருகின்றன. ஆனால் வெளிஉலகுக்கு அதற்கு நேர்மாறான தகவல்களையே சிறீலங்கா அரசு தொடர்ந்து பிரச்சாரம் செய்துவருகின்றது.

இந் நிலையில், இந்த இராணுவக் கொடுமைகளிலிருந்தும், சிறீலங்கா அரசின் திட்டமிட்ட இருட் சிறையிலிருந்தும் மக்கள் வன்னிப்பகுதிக்கு தப்பிச்செல்லலும், இந்தியாவுக்கு படகுகளில் செல்வதும் தொடர்கிறது.

தமிழ்நாட்டுக்கு படகுகளில் அகதிகளாகச் செல்பவர்கள் பலவிதமான ஆபத்துக்களினூடே உயிரைப் பணயம் வைத்தே செல்கின்றனர். இராணுவத்திற்கு தெரியாமல் புறப்படும் அகதிகள் கடலிலும் சிறீலங்கா கடற்படையின் கண்ணில்படாமல், கடல்காற்று போன்றவற்றை எதிர்த்து தாண்டி தமிழகக் கரையை அடைவது என்பது இன்னொரு பிறப்பெடுத்தலுக்கு சமனானது.

இந் நிலையில் அங்கு செல்லும் அகதிகளை விசாரணை செய்யும் பொலிசார் அவர்களைத் திரும்பி போகுமாறு கோருவதாக தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்ற நிலையில் உயிரைப் பணயம் வைத்து தமிழகக் கரையை அடையும் அகதிகளை நல்லமுறையில் ஆதரிக்கவேண்டியதும், அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதும் தமிழக அரசின் கடமையே. ஏனெனில் அண்மைக்காலத்தில் தமிழகத்தில் ஈழத்தமிழர்கள் மீதான கெடுபிடிகள் மிக மோசமாக இருந்ததால் அகதிகள் அங்கு செல்வது குறைந்துவிட்டது. தற்போது கலைஞர் கருணாநிதி தலைமையிலான அரசானது அகதிகள் விடயத்தில் இளகிய தன்மையுடன் நடந்து கொள்ளும் என்ற எதிர்பார்ப்புடனேயே அவர்கள் அங்கு செல்கிறார்கள். தி.மு.க ஆட்சியும் தமிழகத்தில் ஈழத்தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்கான கல்விக்கும் இருந்த தடையை நீக்கியது போல் அகதிகள்பற்றிய பிற விடயங்களிலும் நடந்து கொள்வதற்கு தமிழக அரசுக்கு வேண்டுகோள்விடுக்க வேண்டிய கடமை புகலிடங்களில் வாழும் எம் மக்களின் கடமை.

சிறீலங்கா அரசு தமிழீழத்தில் மேற்கொள்ளும் உணவுத் தடை, மருந்துத்தடை, குண்டுவீச்சு போன்றவற்றிற்கு எதிராகவும், இனப்படுகொலையை நிறுத்தவும் தமிழக அரசு குரல் கொடுக்க வேண்டும். அதற்கு தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கும், பிற அமைச்சர்களுக்கும், அரசியல் அமைப்புக்களுக்கும் உண்மைத் தகவல்களை தெரிவித்து கடிதங்கள் எழுதவேண்டிய கடமை, இனப்பிரச்சினையைக் காரணம்காட்டி மேற்கு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரினதும் முக்கிய கடமை.

# புலிகள் யார்? பொதுமக்கள் யார்?

## யாழ்ப்பாணத்தில் இராணுவம் எதிர்கொள்ளும் புதிய சிக்கல்களும் நெருக்கடிகளும்

**யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் புதிய நெருக்கடிகளைச் சந்திக்கின்றார்கள். இது பற்றி சென்ற வாரம் வெளியான கொழும்புப் பத்திரிகைக் கட்டுரை ஒன்றிலிருந்து:**

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் தற்போது புதியதொரு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இராணுவ வீரர்கள் யார், புலி வீரர்கள் யார் என பகுத்தறிந்து சரியாக அடையாளங்காண முடியாத சிக்கல் நிலை அவர்களுக்குத் தோன்றியுள்ளது. இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள யாழ் குடாநாட்டில், இராணுவத்தினர் மத்தியில் சாதாரண பொதுமக்கள் காணப்படுகின்றனர். இந்த பொது மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் மிகச் சாதாரணமாகக் காணப்படுகின்றனர். இதனால் பொதுமக்கள் மத்தியிலிருந்து புலிகளைப் பிரித்தறிய முடியாத இக்கட்டான நிலைமை இராணுவத்துக்கு இருந்துவருகின்றது. இந் நிலை புதிதாகத் தோன்றியதொன்றல்ல, அன்றிலிருந்தே இந் நிலை உள்ளது. இருப்பினும் இன்று இராணுவ வீரர்களே புலிவீரர்கள் போல் இராணுவத்திற்கு தோற்றம் தருவது, இராணுவத்திற்கு ஆரோக்கியமான நிலைமையாகக் கூற முடியாது.

அப்படியானதொரு ஆபத்தான நிலையை யாழ்ப்பாணத்தில் உள்ள அரச பாதுகாப்புப் படையினர் கடந்த வாரம் சந்தித்துள்ளனர். தென்மராட்சிப் பகுதியில் இரவு நேர தேடுதல் நடவடிக்கையில் ஒரு பகுதி இராணுவத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், இன்னொரு பகுதி இராணுவத்தினரைப் புலி என நினைத்துத் தாக்குதல் நடத்தியதில் அதிகாரி ஒருவரும் படை வீரர் ஒருவரும் கொல்லப்பட்ட சம்பவமானது இதற்கு உதாரணமாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் மத்தியில் புலிவீரர்கள் இருப்பது இராணுவத்தினருக்கு தெரிந்த விடயம்தான். பொது மக்களுக்கும் தம்மிடையே புலிகள் இருப்பது நன்கு தெரியும். இருந்தும் புலிகள் பற்றிய தகவல்களை அவர்கள் இராணுவத்திற்குத் தெரிவிப்பதை தவிர்த்தே வருகின்றனர். இதற்கு அப்பொது மக்களிற்கு புலிகள் மீதான பயம்தான் காரணம் என்பதை விட அவர்கள் மீதான அன்பும் விசுவாசமுமே காரணமாக இருக்கலாம். எப்படி இருப்பினும் 'சூரியக்கதிர்' நடவடிக்கையின் மூலம் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஆரம்ப காலத்தில் பொதுமக்களிடமிருந்த சிறு அளவிலான ஒத்துழைப்புக் கூட தற்போது இராணுவத்தினருக்குக் கிடைப்பதில்லை என இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

இராணுவத்தினர் குடாநாட்டைக் கைப்பற்றி நிலைகொண்டாலும், அங்குள்ள மக்களுக்கு, இராணுவத்தினர் மீதும்- அவர்களின் நடவடிக்கைகள் மீதும் படிப்படியாக வெறுப்பு ஏற்படும் என புலிகள் நினைத்தது போல் இப்போது நடந்து கொண்டிருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்துக்குள் வந்தபோது கூட, இதேபோன்று அதிகம் எதிர்ப்பில்லாத அமைதியான ஒரு நிலையே தோன்றி, பின்னர் அதே மக்களே அவர்கள் மீது வெறுப்புற்று இந்திய இராணுவத்துக்கு ஒட்டுமொத்தமாக எதிர்ப்புத் தெரிவித்தனர். இது போன்ற சந்தர்ப்பங்களை விடுதலைப் புலிகள் தோற்றுவித்து அதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம்.

இன்றைய நிலையில், விடுதலைப் புலிகள் மீண்டும் யாழ் குடாநாட்டை தம்வசப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதை இராணுவத்தினர் அறிந்து கொண்டிருந்தாலும், எதையுமே செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அதிலும் புலிகளிடமிருந்து மட்டுமல்ல, தமது சகோதர படை வீரர்களிடமிருந்து வரக்கூடிய துப்பாக்கிப் பிரயோகங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ற முறையில் யுத்தத்தை நடத்தவேண்டிய சூழ்நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள்.

இன்று இந்த யுத்தம் மட்டுமல்ல, முப்படைகளுமே அரசியல்வாதிகளின் கீழ் மண்டியிட்டுள்ளன. ஐக்கியதேசியக் கட்சியின் காலத்தை விட இன்றைய நிலைமை மிகவும் கடினமானதாக இருப்பதாக பாதுகாப்புப் படை அதிகாரிகள் கூறுகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவ அதிகாரி ஒருவர்



கொழும்புக்கு வந்திருந்த வேளையில் அவரைச் சந்தித்த போது, இன்றைய யுத்தத்தைத் தலைமைதாங்கி நடத்துவது இராணுவ தளபதிகள் அல்ல. அரசியல்வாதிகளே யுத்தத்தை நடத்துகின்றனர். யுத்தத்தினால் இறப்பது படைவீரர்களாக இருக்கும் அதேவேளை, அரசியல்வாதிகள்தான் அதன்மூலம் இலாபமடைகின்றனர்.

இன்றைய யுத்தமானது, யுத்த விதிகளுக்கு ஏற்ற விதத்தில் நடைபெறாமல் - அரசியல் விதிமுறைகளுக்கு ஏற்பவே நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த அரசியல்வாதிகளுக்கு ஏற்ற விதத்தில் யுத்தத்தை நடத்த



முடியாது. அதைச் சுட்டிக் காட்டினால் அந்த இராணுவ அதிகாரியை ஐக்கிய தேசியக் கட்சி லேபல் ஒட்டி, சதிகாரப் பட்டம் கட்டி, இடமாற்றம் கொடுத்து வேறு இலாகாவுக்கு மாற்றிவிடுவார்கள். இறுதியில் இந்த அரசியல்வாதிகளின் விளையாட்டால் அப்பாவி இராணுவ வீரர்களின் உயிர்களே விலையாகக் கொடுக்கப்படுகிறன.

இன்னுமொரு உதாரணமாக, கடந்த 27.08.96 அன்று ஆரம்பித்த 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையானது முற்றுமுழுதாக அரசியல்வாதிகளின் தேவை கருதியே நடாத்தப்பட்டது. இன்று அதனால் ஏற்பட்டுள்ள தோல்விகளை ஒரு பிறிகேடியரின் தோளிலும், ஒரு லெப்டினன் கேணலின் முதுகிலும் சுமத்திவிட்டார்கள். ஆனால் உண்மையில் அவ் இரு அதிகாரிகளும் 'சத்ஜய'வினை நடாத்துவதில் உள்ள அசாத்திய நிலைமையினை முன்னரே தெரிவித்த காரணத்தால்தான் அவர்கள் மீது இந்தப் பழிவாங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது, இன்றைய யுத்தத்தின் நிலைமையை இதன் மூலம் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம் என அவ்வதிகாரி கூறுகிறார்.

இந்த அதிகாரியின் கூற்றானது, இராணுவம் எந்த அளவுக்கு அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டிற்குள் கட்டுண்டு கிடக்கிறது என்பதை உணர்த்துகின்றது. இவைகளைச் சுட்டிக்காட்டினால், களத்திலுள்ள படையினரின் மனோநிலையை பத்திரிகைகள் பலவீனமாக்க முயற்சிக்கின்றன என்று பத்திரிகைகள் மீதே அரசு குற்றச்சாட்டை முன்வைக்கின்றது. ஆனால், இந்த யுத்தத்தின் முழு நிலவரமும் இராணுவத்திற்கு நன்கு புரியும். ஆகையால் பத்திரிகைகளால் அவர்களது மனோபலம் குன்றிவிடுவதென்பது சாத்தியமற்றது.

மக்களின் பணத்தில் நடைபெறும் யுத்தத்தின் உண்மை நிலையை மக்களுக்குத் தெரிய வைப்பதுதான் பத்திரிகைகளின் நோக்கமே தவிர இராணுவத்தினரின் மனோநிலையை சிதைப்பது அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜன் கூலுக்கும்-மனோரஞ்சனுக்கும் முகத்தில் கரிபூசிய அரசு

திரு. லூசியன் ராஜ கருணாநாயகர என்பவர் சர்வதேசப் பத்திரிகையாளரிடையே நன்கு அறிமுகமான ஒரு சிறந்த பத்திரிகையாளரும் விமர்சகரும் ஆவார். இருந்தும் ஏனைய சிங்களப் பேரினவாதப் பத்திரிகையாளர்கள் போல் இவரும் சிங்களப் பேரினவாதத்துக்கு வக்காலத்து வாங்கத் தயங்குவதில்லை. விடுதலைப் புலிகளை கண்டன விமர்சனம் செய்வதில் அவருக்கு தனியான விருப்பம். இருந்தும் சில சமயங்களில் மனச்சாட்டியின் உந்துதலாலோ என்னவோ சில உண்மைகளை வெளியிட்டு விடுவார். முன்பொரு தடவை "இது வெல்ல முடியாத போர் – விடுதலைப் புலிகளை வெல்லவே முடியாது" என எழுதியதால் சக பத்திரிகையாளர்களின் கண்டனத்துக்கு உள்ளானவர். இனி கடந்த வாரம் 'சண்டே லீடர்' பத்திரிகையில் அவர் எழுதியுள்ளதைப் பார்ப்போம். நாட்டைப் பிரிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தம் வழியில் போராடுகிறார்கள். ஆனால் அவர்கள் போராடாமலே அவர்களுக்குத் தமிழீழத்தை தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தர சில தென்னிலங்கைச் சக்திகள் முயல்கின்றன. இரு இனங்களுக்கும் இடையில் பெரிய இடைவெளியை உண்டாக்குகின்றன. புலிகளின் முயற்சி இல்லாமலேயே இவர்கள் நாட்டைத் துண்டாடிவிடுவார்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இயக்கத்தை நடாத்தும் கலாநிதி ராஜன் கூல், பல்கலைகழக ஆசிரியர் மனித உரிமை அமைப்பொன்றை நடாத்தி, புலிகளின் பயங்கரவாதத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுபவர் அவர். அவரும் அவரது சகாக்களும் சேர்ந்து 'முறிந்த பனைமரம்' என்ற நூலை வெளியிட்டதன் மூலம் புலிகளின் பயங்கரவாதத்தை உலகிற்கு வெளியிட்டது தெரிந்ததே. கடந்த வாரம் கலாநிதி கூலின் சகோதரியான யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியையும், ஒரு பெரிய நிறுவனத்தில் கணக்காளராக இருக்கும் அவரது கணவரும் புறக்கோட்டைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட கணவனும் மனைவியும் பொலிஸ் நிலையத்தில் நிர்வாணமாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். தாம் யார், தமது அந்தஸ்து என்ன என்பதையும் தமக்குத் தெரிந்த உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்களை கொடுத்து தம்மைப் பற்றி விசாரிக்கும்படி கூறியும் பொலிசார் அதை செவிமடுக்கவில்லை. நிர்வாண நிலையில் தாக்கப்பட்டனர். பின்பு இவர்கள் நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டு எவ்வித குற்றச்சாட்டும் இல்லாமல் வெறும் சந்தேகத்தின் பேரிலேயே சிறைக்கு அனுப்பப்பட்டனர். இரண்டு நாள் கழித்தே அவர்கள் சிறையிலடைக்கப்பட்டது பற்றி அவரது குடும்பத்தினருக்குத் தெரியும். பின்பு அவரது குடும்பத்தினரின் முயற்சியால் பிரதிப் பொலிஸ் மாத அதிபரின் கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டு, அவர் உத்தரவிட்ட பின்பும், நீண்ட தாமதத்தின் பின்பு விடுதலை செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகளின் முழு எதிரியும் விமர்சகருமான ராஜன் கூலின் சகோதரியான பேராசிரியர் ஒருவருக்கும், கொழும்பிலேயே பலகாலம் வாழ்ந்து வரும் கணக்காளரான அவர் கணவருக்கும் இந்த நிலை என்றால், சாதாரண தமிழர்களின் நிலை என்ன? விடுதலைப் புலிகளின் மீது அனுதாபமோ, தொடர்போ இல்லாத தமிழர்கள் இவ்விதமான அரசாங்கத்தின் கொடுமையான நடவடிக்கைகள் மூலம் புலிகளின் கைகளில் போய் விழுந்துவிட மாட்டார்களா? கைதுசெய்து காவலில் வைத்திருப்போர் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்ற ஜனாதிபதியின் கட்டளைகளை மீறும் பொலிசாரால் தமிழ் ஈழம் தானகவே பிரிந்துவிடும். பிரபாகரன் கஷ்டப்படத்தேவையில்லை.

அடுத்து 'யுக்திய' சிங்களப் பத்திரிகைக்கு கட்டுரை எழுதும் தமிழ் பத்திரிகையாளர் மனோரஞ்சன் பற்றியது. மக்கள் முன்னணி அரசு பதவிக்கு வருமுன்பு தேர்தல் மேடைகளில் தமிழீழ விடுதலைப் புளிகள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஏன் வந்தனர், காலம் காலமாக தமிழ் மக்கள் எப்படி ஏமாற்றப்பட்டனர், அவர்களின் குறைபாடுகள் என்ன என்பதைசிங்கள மக்களுக்கு விளக்கி, அவர்களிடம் இருந்து பெரும் ஆதரவை சந்திரிகா அரசுகுத் தேடித்தந்தவர். அப்படிப்பட்டவரின் வீடு பலமுறை இராணுவத்தாலும் பொலிசாராலும் சோதனையிடப்பட்டு அலங்கோலப்படுத்தப்பட்டது. இதுபற்றி பல தடவை உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். அவரது தாயார் 1983-ம் ஆண்டு கலவரத்தில் ஏற்பட்ட தாக்கத்தினால் பாரிசவாத நோயினால் படுத்த படுக்கையாக இருக்கின்றார். மக்கள் முன்னணி அரசின் ஆதரவாளரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்பவருமான இவருக்கே தொடர்ந்து இப்படித் தொல்லைகள் என்றால் சாதாரண தமிழ் மக்கள் என்ன செய்வது? சாதாரண தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரிடம் என்ன எதிர்பார்க்க முடியும்? ஒரு தமிழனைக் காவலில் வைக்க உத்தரவிடும் முன்பு, அவர் மீதுள்ள சந்தேகம் என்ன? அவரைக் காவலில் வைக்க தேவையான ஆதாரம் உண்டா என்று சிந்திக்காமல் காவலில் வைக்க ஒரு நீதிபதி உத்தரவிடுகின்றார் என்றால் இயற்கை நீதி எங்கே? விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடுபவர்களுக்கே நீதி மறுக்கப்படும் போது, சாதாரண தமிழர்களின் நிலைதான் என்ன? மற்றத் தமிழர்கள் அரசிடம் என்ன எதிர்பார்க்க முடியும்? எல்லாத் தமிழர்களையும் புலிகளின் கைகளில் போய் விழும்படி செய்வதற்காகவா இவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன? இதன் மூலம் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்புத் தேவை என்றால், அது தனிநாட்டில்தான் கிடைக்கும் என்ற அவர்களை எண்ணத் தூண்டுவதா இந்நடவடிக்கைகளின் நோக்கம்? குறைந்தபட்சம் அரசு தனது சுயலாபத்துக்காகவது இந் நடவடிக்கைகளை நிறுத்தக்கூடாதா? வெளியுறத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாடுகளில் போய் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரச்சாரத்தை மேற்கொண்டு இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதில்லை என உருவாக்கிய அபிப்பிராயத்தை இந்நடவடிக்கைகள் பொடிப்பொடியாக்கி அவர் முகத்தில் கரிபூசுவதற்கு உதவுகிற தென்பதையாவது அரசு உணரக்கூடாதா? இலங்கையில் மனித உரிமை மீறல் குறைந்துள்ளது என்ற கருத்தை சர்வதேச மன்னிப்புச்சபை முன் சொன்னது. இப்போ அதற்கு எதிராகக் கண்டனம் செய்ய மன்னிப்புச்சபைக்கு சந்தர்ப்பம் கொடுப்பதுதான் இச்சக்திகளின் நோக்கமா?

இவ்வாறு விமர்சகர் லூசியான் கருணா நாணயக்காரா சொல்கிறார்.

மக்கள் முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது ஈழமக்கள் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா அன்று வெளியான சிங்களப் பத்திரிகை ஒன்றில் முழுப் பக்க விளம்பரமாக "துட்டகாமுனுவின் பரம்பரையினரே, நாட்டைக் காக்க படையில் சேருங்கள்" என விளம்பரப்படுத்தியதைச் சுட்டிக் காட்டி, இதன் நோக்கம் என்ன? ஒரு தனிச்சிங்கள முப்படைக்ளை அமைப்பதுதானா? எனக் கேள்வி எழுப்பினார் எனவும், அப்போது ஜனாதிபதி சந்திரிகா இது தவறாக நடந்துவிட்டது எனவும், தாங்கள் சிறுபான்மையினரின் ஆதரவிலே அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருப்பதுதான் உண்மை, அவர்களைப் புண்படுத்தும் விதமாக இப்படி நடந்தது வருத்தப்பட வேண்டியதே. வருங்காலத்தில் இப்படி நடக்காது என தேவானந்தாவிற்கு உறுதியளித்ததாக 'சண்டே லீடர்' அரசியல் விமர்சகர் சுரணிமால எழுதியுள்ளார். இதே பத்திரிகையில், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் மிகவும் காரமான வாதத்தை எழுப்பி கட்டுரை வரைந்துள்ளார். சிங்களப்பத்திரிகையில் துட்டகை முனுவின் வாரிசுகளே நாட்டைக் காக்க படையில் சேருங்கள் என்று [illegible]றீர்கள். ஆங்கிலப் பத்திரிகையில் வேறுவிதமாக விளம்பரம். படையில் தமிழர்களும், முஸ்லீம்களும் சேருங்கள் என ஜனாதிபதியும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையும் கோரிக்கை விடுக்கிறார்கள். ஆனால், எந்தத் தமிழ்ப் பத்திரிகையிலும் தமிழர்களும் முஸ்லீம்களும் சேருங்கள் என விளம்பரம் செய்யப்படவில்லை. துட்டகைமுனு எல்லாளனை யுத்தத்தில் வென்றது போல் 'சத்ஜய' போரிலும் சிங்களவரே வெல்வோம் என சிங்கள இளைஞர்களை அரசு விளம்பரம் மூலம் கூவி அழைக்கும் போது, அரசுக்கு ஆதரவளிக்கும் இரண்டுங்கெட்டான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூடியுள்ளனர். யாழ்ப்பாண வளத்தை அழிக்கும் வரையில் அங்குள்ள பனை மரங்களை எல்லாம் இராணுவம் வெட்டி வீழ்த்துகிறது! தமது கனரகவாகனங்கள் போக அகண்ட பாதை வேண்டும் என்பதற்காக வீடுகளைத் தரைமட்டமாக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இது கூட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாதா என திரு. பொன்னம்பலம் தமது கட்டுரையில் சாடியுள்ளார்.

இதே 'சண்டே லீடர்' பத்திரிகையில் இன்னொரு ஆர்வமான கட்டுரை வந்துள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழுவில் கடமையாற்றும், ஜனாதிபதி மற்றும் உயர்மட்ட வட்டாரங்களின் நண்பரெனப்படும் சூரியகுமாரன் என்ற தமிழர் யார்? அவருடைய அதிகாரங்கள் என்ன? அவர் ஒரு விடுதலைப் புலியா? அல்லது புலிகளின் ஆதரவாளரா? அல்லது அவர்களின் புலனாய்வுத் துறையைச் சார்ந்தவரா? ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சரத் கொகனகே நாடாளுமன்றத்தில் பேசும் போது, சூரியகுமாரன் ஒரு புலிகள் பிரதிநிதி என்று குறிப்பிட்டார். இதேவேளை பிறிதொரு கட்டுரையில் வேறொரு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. முல்லைத்தீவு முகாமை விடுதலைப் புலிகள் தாக்குவதற்கு முதல்நாள், ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க வேண்டும் என முல்லைத்தீவு இராணுவ முகாம் பொறுப்பாளரை கொழும்புக்கு வரும்படி உத்தரவிடும்படி இராணுவத் தளபதி றோகன் தலுவத்தையை சூரியகுமாரன் வற்புறுத்தினார். இந்த வற்புறுத்தலுக்கிணங்கி முல்லைத்தீவு இராணுவப் பொறுப்பதிகாரியை கொழும்பு வரும்படி றோகன் தலுவத்தை உத்தரவிட்டார். அவரும் கொழும்பு வந்து இரு நாட்கள் சும்மா இருந்த வேளையில்தான், கட்டளையிட பொறுப்பதிகாரி இல்லாத நிலையில் புலிகளின் தாக்குதலில் முல்லைத்தீவி இராணுவ முகாம் வீழ்ச்சியடைந்தது என்று அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டுக்கள் வந்தும் பொலிஸ் அல்லாத, பொலிசுக்கு உதபுவர் என்ற பெயரில் விடுதலைப் புலிகளின் ஏவலராக செயல்படும் சூரியகுமாரன் மேல் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு அவர் ஜனாதிபதியின் நண்பர் என்பதுதான் காரணமா எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# சந்திக்கு வந்த சந்திரிகா வீட்டு இரகசியங்கள்

பிரபலமான 'ஏசியா வீக்' என்ற பத்திரிக்கைக்கு ஜனாதிபதி சந்திரிகா கொடுத்த பேட்டியில் பல ருசிகரமான தகவல்கள் வெளிவந்துள்ளன. சந்திரிகா தனது பேட்டியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார். "தற்பொழுது கொழும்பில் அடிபடும் பேச்சு இதுதான். நான் இரகசியமாக திருமணம் செய்துகொண்டுள்ளேன். அதனால்தான் குறிப்பிட்ட நேரங்களில் நான் எனது கடமைளைச் செய்ய வருவதில்லை. பொது வைபவங்களுக்கு நேரத்துக்குச் செல்வதில்லை. இரகசியமாக மதுபான விருந்துகளுக்குச் செல்கிறேன். பாலியல் ரீதியாக நான் பலவீனமானவள். தினமும், பலருடன் படுக்கையைப் பகிரிந்துகொள்கிறேன். மது அருந்தி குடிபோதையில் எப்பொழுதும் மிதக்கிறேன் என்று சொல்கிறார்கள்; பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். ஒரு பத்திரிகை, நான் ஒரு பிரமச்சாரியின் பிறந்ததின விழாவுக்கு நள்ளிரவு 12.30 மணிக்கு கொல்லைப்புற வழியாக சென்று அங்கு அதிகாலை 2.30 மணி வரை தங்கியிருந்தேன் என்று எழுதியிருக்கிறது என்று ஆதங்கப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமாக வேறொரு பத்திரிகைக்கு சந்திரிகாவின் தம்பி அனுரா பண்டாரநாயக்கா தெரிவிக்கையில், இரு பொருள்பட, சந்திரிகா சிறுவயதில் இருந்தே அதிக நேரம் தூங்குவதில் இன்பம் காண்பவர். ஒழுங்கு கட்டுப்பாடான வாழ்க்கைமுறை அவருக்குத் தெரியாது என்று குறிப்பிட்டார். இதேவேளை அனுரா பண்டாரநாயக்காவின் மாமனும் சந்திரிகாவின் வலதுகரமானவருமான பிரதிப் பாதுகாப்பமைச்சர் அநுருத்த ரத்வத்தை, அனுராவின் பிறப்பில் தனக்கு இருக்கும் சந்தேகத்தை வெளிப்படுத்தி, இவர் பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேர்ந்தவரா என்ற கேள்வி எழுப்பியதுடன், நான் விவாகரத்து செய்த பெண்ணை மணந்ததைப் பற்றி அனுராவைக் கிண்டல் செய்கிறார். எப்படியாயினும் நான் பெண்களைத்தான் திருமணம் செய்கிறேன். அனுரா யாரைத் திருமணம் செய்து வாழ்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும் எனக் கூறினார். ஆக பண்டாரநாயக்கா குடும்ப மானம் சந்திக்கு வந்து, இன்று அதுவே கொழும்பில் பேசப்படும் பிரதான கதையாக உள்ளது. இத்தனைக்கும் மத்தியில் தனது மாமன் ரத்வத்தை மீது அனுரா பண்டாரநாயக்கா ஐந்து கோடி ரூபாவுக்கு மானநஷ்ட வழக்குப் போட்டுள்ளார். அவருக்கா வழக்கு நடத்தப் போகிறவர் ரத்வத்தையின் இந்நாள் மனைவியின் முன்னாள் கணவர் கனகேஸ்ரவன் என்ற யாழ்ப்பாணத் தமிழர் என்பதும், பிரதான சாட்சி ரத்வத்தையின் முன்னாள் மனைவி என்பதும் மிகவும் ருசிகரமான விடயங்களே!

**தொகுப்பு: சர்க்கரவர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பமோதல் மேலும் வலுக்கிறது... ரத்வத்தையை கண்டித்து சிறீமாவோ கடிதம்!

(கொழும்பு)

சமீபகாலமாக சிறீமாவோ பண்டாரநாயக்காவின் குடும்பத்திற்குள் புகைத்துக் கொண்டிருந்த பூசல் தற்போது வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்துள்ளது. சிறீமாவோ அம்மையார் குடும்



பத்தில் அவரது மகளான சந்திரிகாவும், சகோதரரான ரத்வத்தையும் ஒரு அணியாகவும், சிறீமாவோ அம்மையாரும் அவரது மகன் அனுராவும் மறு அணியாகவும் பிரிந்து நின்று மோதி வருகின்றனர்.

சிறீமாவோவின் மறைவுக்குப்பின் பிரதமர் பதவியை அடைவதற்கு ரத்வத்தை திட்டமிட்டு வருகிறார். ஆனால் சிறீமாவோ தனக்குப்பின் தன் மகனான அனுராவை மீண்டும் சுதந்திரக் கட்சிக்குள் கொண்டு வந்து பிரதமராக்க விரும்புகிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவோ தனது தம்பியான அனுரா மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு திரும்பிவருவதை விரும்பவில்லை. சந்திரிகாவாலேயே தான் சுதந்திரக் கட்சியைவிட்டு விலக நேர்ந்ததென்றும் சந்திரிகா ஒழுக்கமற்றவர் என்றும் அனுரா கூறி வருகின்றார்.

இந் நிலையில் சமீபத்தில் இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய ரத்வத்தை அனுராவின் பிறப்பில் சந்தேகம் இருப்பதாகவும், அவர் வேறு யாருக்கோ பிறந்த குழந்தை என்றும் ஆஸ்பத்திரியில் அவரை தாங்கள் மாறித் தூக்கி வந்துவிட்டதாகவும் கூறியது அனுராவுக்கு மட்டுமல்லாமல் சிறீமாவுக்கும் பெரும் கோபத்தை உண்டாக்கிவிட்டது. உடனடியாகவே அவர் ரத்வத்தையை தொலைபேசியில் கூப்பிட்டு வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டதாக சொல்லப்படுகிறது.

இதன் காரணமாக சந்திரிகா வெளிநாட்டுக்குச் சென்றிருந்த நேரத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்ற ரத்வத்தை முறைப்படி சிறீமாவோவின் முன்னிலையில் பதவி ஏற்காமல் நீதிபதி ஒருவரின் முன்னிலையில் பதவியேற்றார்.

தற்போது ரத்வத்தைக்கு எதிராக அனுரா மானநஷ்ட வழக்கு தொடர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் தனது குடும்பத்தை அவமதிக்க வேண்டாம் எனக்கோரி சிறீமாவோ தனது சகோதரர் ரத்வத்தைக்கு கடிதம் ஒன்றை எழுதியதுடன் அதை பிரசாரத்துக்கென பத்திரிகைகளுக்கும் அனுப்



பியுள்ளார் அக்கடிதத்தின் விபரம் வருமாறு..

*25 ஆகஸ்ட் 1996*

*அன்புள்ள ரத்வத்தைக்கு*

*எனது குடும்பம் தொடர்பாக நீங்கள் வெளியிட்டுள்ள இழிவான பகிரங்கக் கூற்றுக்கள் எனக்கு மிகுந்த மனவேதனையை அளித்துள்ள காரணத்தால் அது தொடர்பாக உங்களுக்கு நான் கடிதம் எழுத நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளேன்.*

*சுனேத்ரா, சந்திரிகா, அநுரா ஆகியோர் காலஞ்சென்ற எனது கணவர் பண்டாரநாயக்காவினதும், எனதும் பிள்ளைகளாகும். நீங்கள் குறிப்பிட்டதைப் போல் அவர்கள் எந்த வைத்தியசாலையிலும் பிறக்கவில்லை அவர்கள் கில்போட் கிறெசென்ட் மற்றும் ரொஸ்மிட் பிளேசில் உள்ள எமது சொந்த வீடுகளில் பிறந்தவர்கள். டாக்டர் நிக்கலஸ் ஆட்டிக்கல அவ் வேளையில் பிள்ளைப்பேறுகளை கவனித்தார்.*

*அவர்கள் வைத்தியசாலையில் மாறிவிட்ட பிள்ளைகள் (Mix up) என்ற உங்களின் தற்போதைய மனத்தடுமாற்றத்தை நீங்கள் மாற்றிக் கொண்டுவிடுங்கள்.*

*எதிர்காலத்தில் நீங்கள் எனது குடும்ப அங்கத்தவர்களைப் பற்றியும், என்னைப் பற்றியும், அவமரியாதையாகப் பேசாமல், பொறுப்பாக பேச முயற்சிக்க வேண்டும்.*

*உங்களது பேச்சுக்கள் நன்கு பகிரங்கப் படுத்தக் பட்டு இருந்தமையால், இக்கடிதத்தை பத்திரிகைகளில் வெளியிட அனுப்பியுள்ளேன்.*

*தங்கள் உண்மையுள்ள*
*சிறீமாவோ*
*ஆர்.டி.பண்டாரநாயக்கா*
*பிரதம மந்திரி.*

# அகதிகளாக ஆனோர்க்கு கரடியும் தொல்லை

(மட்டக்களப்பு)

அகதிகளாக காட்டுப்பகுதியில் முகாம்களில் கஷ்டமான வாழ்க்கையை எதிர்கொள்பவர்களை அரசு மட்டுமல்ல, காட்டுக் கரடிகளும் தொல்லை கொடுப்பதுடன் கொலையும் செய்து வருகின்றன.

அண்மையில் வாழைச்சேனையிலுள்ள பேய்த்தாழை என்னுமிடத்திலுள்ள அகதிமுகாமில் வசித்து வந்துள்ள கணபதிப்பிள்ளை (70) என்பவர் கரடியால் தாக்கப்பட்டு மரணமாகியுள்ளார். எட்டுப் பிள்ளைகளின் தந்தையான இவர் தனது குடும்பச் சுமை காரணமாக குளத்தில் மீன்பிடித்தும், காட்டுப் பகுதிகளில் சென்று தேன் சேகரித்து விற்பனை செய்தும் வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்தார். கடந்தவாரம் தேன் சேகரிக்கச் சென்றபோது கரடி தாக்கியதால் மரணமடைந்துள்ளார். இதேவேளை, அப்பகுதியில் இதுவரை 12 பேர் கரடியால் தாக்கப்பட்டு பலியாகி உள்ளனர் எனத் தெரியவருகிறது.


மன நிறைவுடன் - மலிவு விலையில் கொள்வனவு செய்ய வாருங்கள்..



பிள்ளையார் றேடேர்ஸ்

எம்மிடம் சகல விதமான ஆசிய நாட்டு உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், எவர்சில்வர் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர்களுக்கு ஏற்ற ரெடிமேட் ஆடைகள், சாறி வகைகள், அசல் 22 கரட் தங்க நகைகள் போன்ற அனைத்தையும் ஒரே இடத்தில் மனநிறைவுடன் மலிவு விலையில் கொள்வனவு செய்ய நாடுங்கள்

எமது புதிய வாடிக்கையாளர்களுக்கு பிள்ளையார் றேடேர்ஸ் ஸ்தாபனத்தாரின் புதிய சலுகை 250 DM பெறுமதியான மளிகைச் சாமான்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு அவற்றை இலவசமாக உங்கள் வீட்டில் கொண்டு வந்து கொடுக்கப்படும் தொலைபேசியிலும் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

PILLIYAR TRADERS
Mainzer landstr - 91, 60329 Frankfurt / M, Germany, Tel: & Fax: 069 / 23 02 68

சகல நாடுகளுக்குமான பயண பயணச் சீட்டு ஒழுங்குகள் செய்து தரப்படும்

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டி விரியும் யுத்தம் கூறும் செய்திதான் என்ன?

விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் பொலநறுவை மாவட்டப் பகுதியில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் வெலிகந்த பகுதியில் இரு குறிப்பிடத்தக்க தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. முதலாவது தாக்குதல், வெலிகந்தப் பகுதியில் உள்ள 'குடப்பொக்கன' என்னும் இடத்தில் நடைபெற்ற பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல். இத் தாக்குதலில் 27 பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர். அரச தரப்பில் இருந்து வெளியாகிய தகவல்களில் இருந்தும் இவ் இழப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. மற்றைய தாக்குதல், நகருலா சென்ற இராணுவ அணியின் மீதான தாக்குதல். இத் தாக்குதலில் குறைந்தது ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பொலநறுவை மாவட்டத்தில் நடைபெற்ற இத் தாக்குதல்களை மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகள் அணிகளே மேற்கொண்டதாக தெரியவருகிறது.

இத் தாக்குதல்கள் கூறும் செய்திதான் என்ன? தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எல்லைகள் விஸ்தரிக்கப்படுகின்றன என்பதனையா? இலங்கைத் தீவு முழுவதும் யுத்தப் பிரதேசமாக மாறிவிட்டது என்பதனையா? சிறீலங்கா அரசினை பொறிக்குள் மாட்டியுள்ள விடுதலைப் புலிகளின் யுத்த தந்திரத்தின் நுணுக்கத்தினையா?

பொலநறுவை மாவட்டத்தின் எல்லைகளில் இத் தாக்குதல்களை நடத்தியிருப்பினும், வடக்குக் கிழக்குப் பிரதேசத்துடன் தரைரீதியான எல்லையினைக் கொண்ட பகுதியிலேயே இத் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. இத் தாக்குதல்கள் ஒரு வகையில் சிங்களக் குடியேற்றங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும். அதேநேரம், சிறீலங்கா ஆயுதப் படைகளுக்கும் தமது வளங்களையும் பரவலாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினை படிப்படியாக ஏற்படுத்தும். இத் தேவை, யாழ் குடாநாட்டினுள் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினை எவ்வாறு வெளியில் எடுப்பது என்ற தீராத ஒரு சிக்கலை அரசுக்கு ஏற்படுத்தும். இதனால், இத்தகைய தாக்குதல்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கான புலிகளின் யுத்த தந்திரத்தினை தெளிவாக எடுத்துக் காட்டுவதாக உள்ளதென்று கூறலாம்.

விடுதலைப் புலிகளின் யுத்த தந்திரத்தில் ஒரு சிறப்பான அம்சம் ஒன்றினை எப்போதும் அவதானிக்கக்கூடியதாக இருந்து வருகிறது. எத்தகைய பின்னடைவுகளையும் வெற்றிகளாக மாற்றுவதற்கான செயற்திட்டங்கள் யுத்த தந்திரோபாயத்தில் இருக்கும். இதற்கு நல்ல ஒரு உதாரணத்தினையும் கூறலாம். முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு காலத்தில் யாழ் குடாநாட்டினை முற்றுகைக்கு உள்ளாக்கிவைத்து புலிகளை பணிய வைப்பதும், வன்னிப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஊடாக புலிகளைப் பணிய வைப்பதும் இராணுவ யுத்த தந்திரோபாயத்தில் முக்கிய அம்சமாக விளங்குகின்றன.

இதற்கமைய வெத்திலைக் கேணியில் இருந்து ஆனையிறவு வரையிலான இராணுவ வேலி ஒன்று போடப்பட்டு ஏறத்தாள 8000 இராணுவத்தினர் அப் பகுதியில் நிலைநிறுத்தப்பட்டனர். இவ்வாறு நிலைநிறுத்தியதுடன் யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிப் பெரு நிலத்துக்கான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுவிட்டது என அரசு குதூகலித்தது. ஆனால், புலிகள் கிளாலி கடலேரிப் போக்குவரத்துப் பாதையினை ஆரம்பித்தனர். அதன் பின் வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவு வரை குவிக்கப்பட்டிருந்த 8000 படையினர், படையினருக்கான விநியோகங்களுக்கான பிரதான பாதையினைப் பராமரிக்கும் ஒரு விடயமாகவே மாறிவிட்டனர். மக்களின் போக்குவரத்துக்கு அவர்களால் தடை விதிக்க முடியவில்லை. இந்நிலையில் பாரிய இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான ஆட்பலம் படையினருக்குத் தேவைப்பட்டபோது, ஆனையிறவுப் பாதையினைத் திறந்து அதற்கூடாக தமது விநியோகங்களைப் பெற்றுக்கொண்டு 8000 இராணுவத்தினரை அப் பகுதியில் இருந்து மீட்டுவிட இராணுவத்தினர் முயன்றனர். ஆனால் புலிகள் அம் முயற்சிக்கு இடங்கொடுக்கவில்லை. மக்கள போக்குவரத்துக்காக பூநகரிப் பாதையினைத் திறப்பது குறித்து பேசுவோம் என்று கூறினர்.

இதன் மூலம் 8000 இராணுவத்தினரும் இராணுவ நடவடிக்கைக்கு பயன்பட முடியாத சூழ்நிலை உருவானது. உண்மையில் குடாநாட்டினை முற்றுகையிடவெனக் குவிக்கப்பட்ட அவ் இராணுவத்தினர் தாமே முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமையினை உணர்ந்தனர்.

இதேபோல்தான் இன்றைய குடாநாட்டுச் சூழலும் உருவாகி வருகின்றது. யாழ் குடாநாட்டைப் புலிகளின் கைகளில் இருந்து 'மீட்பதுடன்' இராணுவத்தின் வேலை முடிந்துவிடவில்லை. அங்கு சாதாரணமான ஒரு சிறீலங்கா அரச நிர்வாக இயந்திரத்தினை இயங்கவிட வேண்டும். இலங்கையின் இனப் பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வை அமுல்படுத்த வேண்டும். இதனைத் செய்துமுடிக்காத வரை குடாநாட்டில் குவிக்கப்பட்ட இராணுவம் ஒருவகையில் ஆக்கிரமிப்புப் படையாகவும், இன்னொரு வகையில் முடக்கப்பட்ட் இராணுவமாகவும் இருக்கும். குடாநாட்டிலே இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதியாக உள்ள இடங்களைவிட கட்டுப்பாடற்ற பகுதியே பெரும்பான்மையாக உள்ள இன்றைய சூழலில் இராணுவம் மீளமுடியாத பொறியில் சிக்கியதாகவே இருக்கப்போகிறது.

விடுதலைப் புலிகளின் யுத்த தந்திரத்தை வடிவமைப்பவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே என்பது அனைவரும் அறிந்த விடயம். இவரை மிகத் திறமை வாய்ந்த ஒரு யுத்த தந்திரோபாயவாளன் என்று அண்மையில் ITN:Channel 4-ல் ஒளிபரப்பாக்கப்பட்ட SUICIDE WARRIORS என்ற விவரணம் வர்ணித்திருக்கின்றது. கிறிஸ்துவுக்கு முன் 500 வருடங்களுக்கு முன்பு 'சன் சூ' (SUN TZU) எழுதிய 'யுத்தக் கலை' என்ற நூலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை முதற்கொண்டு இன்றைய நவீன விடயங்கள் வரையும் நன்கு உள்வாங்கிக் கொண்டிருக்கும் பிரபாகரன் அவர்கள் போராட்ட அனுபவங்களுக்கூடாக பெற்ற அனுபவங்களும், தன்னம்பிக்கையும் இணைந்த மாபெரும் யுத்த நிபுணராகவும், தலைவராகவும் பரிணமித்துள்ளார் என்பதே பல்வேறு ஆய்வாளர்களின் கணிப்பு.

**நண்டார் பக்கம்**

"எதிரி தனது தலைப் பக்கத்தினைப் பலப்படுத்த வேண்டுமாயின் தன் பின் பகுதியினைப் பலவீனப் படுத்துகிறான். தனது பின் பகுதியினைப் பலப்படுத்தும்போது தலைப் பகுதியினைப் பலவீனப் படுத்துகிறான். வலப் பகுதியினைப் பலப்படுத்த வேண்டுமானால் இடப் பகுதியினையும், இடப் பகுதியினைப் பலப்படுத்த வேண்டுமானால் வலப் பகுதியினையும் பலவீனப் படுத்திக் கொள்வான். எல்லாப் பகுதியிலும் பரவும்போது எல்லாப் பகுதியினையும் பலவீனப் படுத்திக் கொள்வான்" இவை 'சன் சூ' தனது யுத்தக்கலை என்னும் நூலில் 2500 வருடங்களுக்கு முன்னர் எழுதிய விடயங்கள். எதிரியின் பலவீனமான பகுதியினை இனங்கண்டு தாக்க வேண்டும் என்பது சன்சூவின் ஒரு தந்திரம்.

'சன் சூ' அன்று கூறியது இன்று எமக்குப் பொருந்துகிறது அல்லவா! எதிரியை பலவீனப் படுத்தக்கூடிய யுத்த தந்திரோபாயத்தினை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பது புரிகிறது அல்லவா! எதிரியைப் பரவச் செய்யும் வகையில் அழுத்தங்களை கொடுப்பதும், அவ்வாறு பரவி எதிரி பலவீனமாகும் போது தாக்கி அழிப்பதும் புலிகளின் யுத்த தந்திரோபாயத்தில் முக்கியம் பெறுகின்றது.

சிறீலங்கா படைகள் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன புலிகளின் யுத்த தந்திரோபாயத்தில் சிக்குண்டு போவது தவிர்க்க முடியாதது. புலிகளைப் பலவீனப் படுத்தும் யுத்தத்தில் அரச படைகள் பலவீனப்படுவது தவிர்க்க முடியாதது. ஏனெனில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹென்றி சீலிங்கர் குறிப்பிட்டவாறு, அரச படையைப் பொறுத்தவரை தமது இலக்கில் வெற்றிபெறும் வரை அது தோல்விக்குரியதாகவே இருக்கும்; மாறாக கெரில்லாப் போராளிகளைப் பொறுத்தவரை, அரச படைகள் தமது இலக்கை அடையாது தடுத்துக் கொண்டிருக்கும் வரை அவர்கள் வெற்றிக்குரியவர்களாகவே இருப்பார்கள்.

இன்றைய யுத்தத்தில், நீண்டகாலத்தில் அரச படைகள் தோல்விக்குள்ளாக்கப்படுவது மட்டுமன்றி மோசமான அழிவுக்கு உள்ளாவதும் எதிர்காலம் கூறப்போகும் செய்தியாக இருக்கும்.


## மருத்துவ நிதி

## 06.09.96 - 15.09.96

**அன்பான நோர்வே வாழ் தமிழீழ மக்களே!**

* சிறீலங்கா அரச படைகளின் எறிகணை, குண்டு வீச்சுத் தாக்குதலால் கிளிநொச்சிப் பகுதியினை விட்டு வெளியேறிய 250000 க்கும் அதிகமான எமது மக்களில் பெரும்பான்மையோர் இன்னமும் மரநிழலிலும் தெருவோரங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.
* இம் மக்கள் குடிப்பதற்கு சுத்தமான நீரின்றியும், உரிய சுகாதார ஏற்பாடுகளின்றியும் மலேரியா, மஞ்சட் காமாலை, செப்டிசீமியா(நஞ்சு இரத்தம்), போன்ற கொடிய நோய்களால், பாதிக்கப்பட்டு சொல்லிலடங்கா வேதனைகளை அனுபவித்து வருகின்றனர்.
* மருந்து வகைகளை எடுத்துச் செல்வதில் அரசு விதித்துள்ள தடைகள் காரணமாகவும் மருத்துவ மனைகளில் போதிய இட வசதியின்மை காரணமாகவும் மக்கள் உரிய மருத்துவ வசதியின்றி மிகுந்த வேதனைகளுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் இம் மக்களுக்கு உதவுவது எமது கடமையல்லவா!
* இம் மக்களுக்கு தேவையான மருந்து வகைகளை எடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு இருப்பினும், போதிய நிதி வசதியின்றி இச் செயற்பாட்டினை தீவிரப்படுத்த முடியாதுள்ளது. மேலும் மருத்துவ மனைகளை விரிவுபடுத்தி கூடுதலான இடவசதியினை ஏற்படுத்துவதற்கும் பெருமளவில் நிதி தேவைப்படுகின்றது.
* பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவ ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளை நிதியாகவோ அல்லது மருந்துகளாகவோ தந்துதவுமாறு நோர்வே வாழ் தமிழீழ மக்களைக் கோருகின்றோம்.
* ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் குறைந்தது ஒரு பத்திரத்தினை வாங்குவதன் மூலம் மருத்துவ உதவி தேவைப்படும் எமது மக்களில் ஒருவருக்கு மருத்துவ உதவி கிடைக்க வழி செய்வோம். மருந்துகளாக உதவி செய்ய விரும்புவோர் தேவைப்படும் மருந்து வகைகளின் விபரத்தினை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* தமிழ் மக்கள் மத்தியில் இயங்கும் அனைத்துப் பொது அமைப்புக்களின் இம் மருத்துவ நிதிக்கு பங்களிப்பு வழங்குமாறு அவுஸ்திரேலியாவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்துல ஒருங்கிணைப்புச் செயலகம் கோரியுள்ளது என்பதனை பொது அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றோம்.

நிதி உதவி செய்வோர் செய்வோர் எம்மால் 06.09.96 முதல் 15.09.96 வரை விற்பனை செய்யப்படும் Kr 200 பெறுமதியான மருத்துவ நிதி உதவிப் பத்திரத்தினை வாங்குவதன் மூலம் நிதி உதவியினை வழங்குமாறு கோருகின்றோம்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - நோர்வே**

**தொடர்புகட்கு:**

ஒஸ்லோ - 22 16 42 79 / பேர்கன் - 55 29 69 29 /
துரண்ணியம் - 73 91 39 42 / ஸதவங்கர் - 51 86 09 97


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு தோல்வி

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இழப்பை 'தற்காலிகப் பின்னடைவு' எனக் கொண்ட விடுதலைப் புலிகள், 'போர்க்கால அட்டவணையின்' படி தாக்குதல்களை மேற்கொ-ண்டு முல்லைத்தீவு தாக்குதல் மூலம் மீண்டும் வெற்றியை நோக்கி காலடி வைத்துள்ளனர். இதேவேளை, யாழ் நகரைக் கைப்பற்றியதை நிரந்தர வெற்றி எனக் கூறிய அரசின் பாதுகாப்புப் படைகள் 'அரசியல் கால அட்டவணையின்' படி போர்புரிய முற்பட்டு முல்லைத்தீவு தோல்வியைச் சந்தித்ததன் மூலம் பாரதூரமான பின்னடைவுகளை அடைந்துள்ளது.

கும் போருக்கும் சம்பந்தமில்லாதவாறு தூரத்தில் இருந்து கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றனர்; எதிரி முன்னணியில் நிற்கின்ற வேளையில் தூர நிற்கும் இவ்வதிகாரிகள், எதிரி பின்வாங்கிப் போகின்ற வேளையில் மட்டும் முன்னணியில் வந்து நின்று கொள்கின்றனர். இதற்கு உதாரணமாக, 'சூரியக் கதிர்', 'சத்ஜய' இரண்டையும் கொள்ளலாம்.

சூரியக் கதிர் 1, 2, 3 மற்றும் சத்ஜய போன்ற எல்லா நடவடிக்கையிலும் பங்கெடுத்த கொமாண்டோ றெஜிமெண்டில் கடமையாற்றிய ஒரு அதிகாரியின் கூற்றின்படி எதிரி, டியானால் அப் பீரங்கித் தாக்குதலின் உக்கிரத்தால்தான் 'சத்ஜய' படையணி முன்னோக்கி நகர முடியாமல் மீண்டும் பரந்தனை நோக்கிப் பின்வாங்கியதை பத்திரிகைக்குச் சொல்ல முடியாமற் போனதேன்? எனவும் அவ் அதிகாரி மேலும் வினவினார்.

இராணுவப் பேச்சாளர் யுத்தம் சம்பந்தமான உண்மைகளை மூடி மறைத்து மக்களுக்குச் சொல்வது அவரது வேலையின் ஒரு பகுதியாய் இருக்கலாம். இராணுவ முக்கியஸ்தர்கள், அரசியல்வாதிகளை சந்தோசப்படுத்தி அவர்கள் மனங்களை வெல்வதற்காக யுத்தத்தை

டும் என்று பாதுகாப்பு உதவி அமைச்சர் ரத்வத்தை (அன்று கேணல்) இராணுவ தளபதிகளிடம் கூறியபோது உடனடியாக அதைச் செய்வது சாத்தியமற்றது என்று நேரிடையாகக் கூறியவர் செனவிரத்னவே. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினாலும் அதனை காப்பாற்ற இராணுவ ஆட்பலம் போதாது என்பதால் அதனைப் பிடிப்பது இப்போதைக்கு சாதகமானது அல்ல என்றும் அவர் அப்போது கூறியிருந்தார்.

அதன் எதிரொலியாக அவர் 24 மணி நேரத்துக்குள் கொழும்புக்கு மாற்றப்பட்டு தலைமைக் காரியாலயத்தில் அதிகாரியாக நியமிக்கப்பட்டு லெப். ஜெனரல் ரொகான் தலுவத்த வட-கிழக்கிற்குக் கட்டளையிடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டு; யாழ் நகரை எவ்வகையிலேனும் கைப்பற்ற வேண்டும் என்றும்

தது. அன்று அவர் பூநகரியின் இரண்டாவது படைப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாக இருந்தார். இன்று அவர் முப்படைகளின் தளபதி. அன்று பூந



சிசில் வைத்தியரத்ன

கரி தோல்விக்கு பொறுப்பேற்று பதவியிலிருந்து வெளியேறியது விசாரணைக் குழுவினால் குற்றவாளிகள் எனக் கருதப்பட்டவர்கள் அல்ல. பதவியை இரா

# பதவியைப் பறிகொடுக்கப்போகும் அடுத்த படைத் தளபதி யார்?

இந் நிலைமையை ஏற்றுக் கொள்வதனாலோ அல்லது வெளிப்படையாக அறிவிப்பதனாலோ பாதுகாப்புப் படைகளின் மனோ நிலை பாதிக்கப்படலாம் என்று நினைத்த அரசும், இராணுவத் தளபதியும் தம் இயலாமையை முற்றாக மூடி மறைக்கும் கைங்கரியங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்தத்தில் ஏற்படும் பாதக



மான நிலைகளை தணிக்கை மூலம் மக்களுக்கு மறைத்தாலும், களத்தில் உள்ள இராணுவத்தினர் உண்மை நிலையை நேரில் அறிந்து கொண்டே உள்ளனர். நேருக்குநேர் எதிரியைச் சந்திப்பதும் கொல்லப்படுவதும் கப்டன் தரத்தில் உள்ளவர்களும் அவர்களுக்குக் கீழ் நிலையில் உள்ள படை வீரர்களும் மட்டுமே. அநேகமான சந்தர்ப்பங்களில் உயர் அதிகாரிகளுக்

இராணுவத்துக்கு முகம்கொடுக்காமல் புலிகள் பின்வாங்கிய 'சூரியக் கதிர்' நடவடிக்கையின் போது படை மேல்நிலை அதிகாரிகள் பலர் ரூபவாஹினி கமெராவுக்கு முன்னால் கட்டளையிட்டுக் காட்சியளித்துக் கொண்டு முன்னணியில் சென்றார்கள். சத்ஜய நடவடிக்கையின்போது அவர்கள் படை வீரர்களின் கண்ணில்கூட தட்டுப்படவில்லை. அந் நடவடிக்கையின்போது படைவீரர்களுக்கு கட்டளையிட எந்த உயரதிகாரிகளும் இருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

புலிகள் கிளிநொச்சியை இராணுவத்திடம் விழவிடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியுடன் போரிட்டனர். முல்லைத்தீவில் நீண்டதூர பீரங்கிகள் இரண்டை புலிகள் எடுத்துச் சென்றதை சரத் முனசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார். அப்ப

பொய்யாக நடத்துகையில் அந்தப் பொய்களை உண்மைகளாக உலகிற்குச் சொல்லவே-ண்டிய நிலையில் இராணுவப் பேச்சாளர் இருக்கிறார். அது அவர் மேல் சுமத்தப்பட்டுள்ள அரச காரியம் ஆகும்.

பத்திரிகைத் தணிக்கையின் காரணமாக அவர் மக்களுக்கு எதைக் கூறினாலும் யுத்தத்தில் எப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதிகாரிகளுக்கும், படையினருக்கும் உண்மை நிலை என்ன என்பது நன்றாகவே புரியும். அவர்கள் லீவில் தமது கிராமத்துக்கு வரும் போது உண்மைகளை தமது நண்பர்களுக்குச் சொல்லவே செய்வார்கள். அப்போது அரசினதும் இராணுவத் தளபதிகளினதும் தேவை கருதி இராணுவப் பேச்சாளர் கூறிய செய்திகளின் உண்மை, பொய்யென்பது அறிந்து கொள்ளப்படும்.

யுத்தத்தை நல்ல முறையில் முடிப்பதன் அவசியத்தைவிட அரசியல் லாபத்தை இலக்காக வைத்து யாழ்ப்பாணத்தை கைப்பற்ற அரசு தீர்மானம் மேற்கொண்ட போது, வடக்குக் கிழக்கு கூட்டுத் தலைமை அதிகாரியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் A.M.U. செனவிரத்ன தான். இன்று அவர் இராணுவத்தின் இரண்டாவது உயர் ஸ்தானத்தில் இருக்கிறார். இவ் வருட இறுதியில் இவர் இராணுவ சேவையில் இருந்து இளைப்பாற இருக்கிறார்.

அன்று யாழ்ப்பாணத்தை கைப்பற்றிக் கொள்ள வேண்

கூறப்பட்டது.

அந்தத் தூரப்பார்வையற்ற நடவடிக்கையின் எதிர் விளைவுகள் முல்லைத்தீவு பேரிழப்பை முதன்மையாகக் கொண்டு எம் முன் நிற்கின்றது. இப்போது பார்க்கப்போனால் முல்லைத்தீவு இழப்பிற்கும் பதில் சொல்ல வேண்டியவர் யார் என்பதும் பொதுமக்களுக்குப் புரியும். இன்று முல்லைத்தீவு தோல்விக்காக விசாரணைக் குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். அப்படி

ஜினா செய்தது அன்றைய முப்படைத் தளபதியே.

அன்றைய தளபதி சிசில் வைத்தியரத்னா பூநகரி முகாமில் ஏராளமான இராணுவத்தினர் இறந்து 2 யுத்த தாங்கிகள் கைப்பற்றப்பட்டதனால் இராணுவத் தள்பதி என்ற வகையில் தானே முழுப் பொறுப்பையும் ஏற்று பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார். அப்படிப் பார்க்கும்போது முல்லைத்தீவு தோல்வியானது

***புலிகள் பின்வாங்கிய 'சூரியக் கதிர்' நடவடிக்கையின்போது படை மேல்நிலை அதிகாரிகள் பலர் ரூபவாஹினி கமெராவுக்கு முன்னால் கட்டளையிட்டுக் காட்சியளித்துக் கொண்டு முன்னணியில் சென்றார்கள். சத்ஜய நடவடிக்கையின்போது அவர்கள் படை வீரர்களின் கண்ணில்கூட தட்டுப்படவில்லை.***

விசாரணைக்குழு அமைப்பது இராணுவச் சட்டத்தின்படி பிழையல்ல. ஆனால் அங்கு விசாரிக்கப்படுவது கீழ் நிலையிலுள்ள அதிகாரிகளே தவிர தளபதி அல்ல.

பூநகரித் தோல்வியை எடுத்துக்கொண்டால் இன்றைய இராணுவத் தளபதியே அன்றைய விசாரணைக் குழுவின் விசாரணைகளின்போது பூநகரித் தோல்விக்கு பொறுப்பேற்க வேண்டியவர் என முடிவெத்

பூநகரியை விட மோசமானது. இங்கு அதைவிட அதிகமான படையினர் இறந்தது மட்டுமல்ல 2 நீண்டதூர பீரங்கிகளும் இழக்கப்பட்டுள்ளன. அப்படியாயின் இத் தோல்விக்கு பொறுப்பேற்று தமது பதவியில் இருந்து விலகி வீட்டுக்குச் செல்லவுள்ள ஜெனரல் யாரென்பதை அறிய முழு நாடும் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றது.

'சமுராய்' - லக்பிம

தமிழில்: மாந்தன்

எலக்ரிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்றிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,

பகீ என்ரபிறைஸ்

உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்

Devis 200Frs - Deplacement 150Frs

புதிய தொலைபேசி இலக்கம்: 48 48 39 64 / 09.27.32.00

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 140 ஏக்கர்நிலத்தை சேடப்பட்டி அபகரித்தது எப்படி - கலைஞர் விளக்கம்

மலையடிவாரத்தில் உள்ள காட்டு இலாகா நிலத்தை முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா எப்படி அபகரித்துக் கொண்டார் என்பது குறித்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சட்டசபையில் விளக்கம் அளித்துள்ளார்.

."முத்தப்பன்பட்டியில் பிறந்த முன்னாள் சபாநாயகர் மூன்று ஏக்கர் நிலத்திற்குக்கூட சொந்தக்காரராக இல்லாது இருந்தது ஒரு காலம். ஆனால் இன்று நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கும், அடுக்குமாடிக் கட்டடங்கள் பலவற்றிற்கும் அவர் அதிபதியாக இருக்கிறார். கடந்த ஐந்தாண்டுகால ஆட்சிக் காலத்தில்தான் அவர் இவற்றைச் சேர்த்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்தபோது முத்தையா இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அப்போது ஒரு கார் மட்டுமே அவருக்குச் சொந்தம். அதுவும் கூட எஸ்.டி.எஸ் வாங்கிக் கொடுத்தாக சொல்லப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியில் சபாநாயகரான பின்பு இவர் பல கோடிக்கு அதிபதி. . இதைத்தான் லஞ்ச ஒழிப்புத்துறை தோண்டித்துருவிக் கொண்டிருக்கிறது. கடந்த 21ம் திகதி இவரது வீட்டிற்குச் சென்ற லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் பல ஆவணங்களைக் கைப்பற்றினார்கள். கல்லுப்பட்டி அக்கரகாரத்திலுள்ள இரண்டு மாடி வீடுகளும், திருமங்கலம் பிரதான வீதியில் உள்ள அடுக்குமாடிக் கட்டிடமான பாப்பா அப்பாட்மென்சும், சோதனைக்கு உள்ளாகின.

மேலும், தங்க பிஸ்கட்டுகள் வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டுக்கள், நகைகள், வாகனங்கள் என்பன கைப்பற்றப்பட்டன. லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் தற்போது இவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சபாநாயகர் ஆனபிறகு, சேடப்பட்டி முத்தையா வாங்கிக் குவித்துள்ள சொத்துக்கள், நிலங்கள், வாகனங்கள் ஆகியவை பற்றிய விபரங்கள் தற்போது சிக்கியுள்ளன. கொடைக்கானல் வீதி அருகே உள்ள ஆர்.எம்.எஸ் எஸ்டேட் சம்மந்தமான ஆவணங்கள் இதில் முக்கியமானவை. 1993ல் அவர் இந்த இட-த்தை வளைத்துப் போட்டார். அதற்கு ஆர்.எம்.ஏ தோட்டம் என்ற பெயரையும் சூட்டினார். 200 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்த நிலத்தில் 60 ஏக்கர் நிலம் மட்டும்தான் தனியாருக்கு சொந்தமானவை. மிகுதி 140 ஏக்கர் நிலமும் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாகும்.



ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள், இலட்சக்கணக்கான கொய்யா மரங்கள், இன்னும் நூற்றுக்கணக்கான சப்போட்டா மரங்கள், வாழைத் தோப்புக்கள், மீன்பண்ணை, மாட்டுப் பண்ணை, மூலை முடுக்குவரை கார் சென்றுவரப் பாதை இவை அத்தனையும் அந்த எஸ்டேட்டில் அடக்கம்.

தண்ணீர் பாய்ச்ச மட்டும் 16 கிணறுகள். அதில் ஏழு ஆழ் துளை கிணறுகள். அத்தனையிலும் மின்சார மோட்டாருகள். இவற்றிற்கு மின்சார விநியோகம் செய்ய தனியான ரான்ஸ்போமர் ஒன்று.

ஒரு ஆவணத்தின் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது இவ்வளவு சொத்துக்கள் என்றால், மற்ற ஆவணங்கள் மூலம் வெளிச்சத்திற்கு வரவிருக்கும் சொத்துக்களின் மதிப்பு எவ்வளவாக இருக்கும் என்பதை உங்கள் ஊகத்திற்கே விட்டுவிடுகிறேன்." இவ்வாறு கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.

# போட்டி அ.தி.மு.க கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் நீக்கப்பட்டனர்

முத்துச்சாமி தலைமையில் கூடிய போட்டி அ.தி.மு.க பொதுக்குழுக் கூட்டத்தில் பங்கு பற்றியவர்களை ஜெயலலிதா கட்சியிலிருந்து நீக்கியுள்ளார்.

இது தொடர்பா ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு அவப்பெயரும், களங்கமும் உண்டாக்கும் விதத்தில் செயல்பட்ட காரணத்தால் சென்னை வடக்கு மாவட்ட பெரம்பூர் பகுதி கழக செயலாளர் பொறுப்பிலிருந்து ரா.ராமலிங்கம், கன்னியாகுமாரி மாவட்டத்தைச் சேர்ந்த எம்.எல். ராஜரத்தினம் ஆகியோர் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்து பொறுப்புக்களிலிருந்தும் நீக்கிவைக்கப் பட்டுள்ளார்கள். எனத் தெரிவித்ததுடன், புதியவர்களையும் நியமித்துள்ளார்.

# 15ம் திகதி சென்னைக்கு கிருஷ்ணா நீர் - கருணா நிதி அறிவிப்பு -

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எதிர்வரும் 15.09.96 அன்று ஆந்திராவிலிருந்து கிருஷ்ணாநதி நீர் சென்னைக்கு வரவிருக்கிறது. இதையொட்டி சென்னை ராஜாஜி மண்டபத்தில் பிரமாண்டமான விழா எடுக்கப்படும் இவ்வாறு கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் அவர் பேசுகையில் கிருஷ்ணாநதிநீர் எப்போது வரும், எப்போது வரும் என்று இங்கு கேட்கப்பட்டது. இந்த கிருஷ்ணாநதி நீர்த் திட்டம் எம்.ஜி.ஆர் தமிழக முதல்வராகவும், என்.டி.ராமராவ் ஆந்திர முதல்வராகவும், இந்திராகாந்தி பிரதமராகவும் இருந்த போது உருவாக்கப் பட்டது. இடையில் இத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டாலும், அவ்வப்போது எழுந்து நடமாடியது.

1989, 90 இல் எமது ஆட்சி நடந்தபோது நாம் என்.டி.ராமராவுடனும், சென்னாரெட்டியுடனும் இத் திட்டம் பற்றிப் பேசினோம். தற்போது மீண்டும் எமது ஆட்சி வந்ததும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். இந்தப் பேச்சுவார்த்தையில் முதல் கட்டமாக தமிழகத்திற்கு மூன்று D.M.C தண்ணீரைத் தர அவர் ஒத்துக் கொண்டுள்ளார். வருகிற 15.09.96 அன்று அண்ணா பிறந்த நாளில் கிருஷ்ணாநதிநீர் தமிழ் நாட்டுக்கு வரும்.

எங்களைப் பொறுத்தவரை இதுதான் உண்மையான அண்ணா பிறந்தநாள். 15ம் திகதி அன்று காலையில் ஊத்துக் கோட்டைக்குச் சென்று நதிநீரை வரவேற்கும் விழா நடைபெறும். அன்று மாலை ராஜாஜி மண்டபத்திற்கு முன்னால் உள்ள மைதானத்தில் ஆந்திர முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் விழா நடைபெறும் என்று கூறினார்.

# ஜெயலலிதாவை கைதுசெய்ய அரசு தயார் - நீதிமன்றத்தில் தகவல்

கொடைக்கானலில் சட்டவிரோதமாக ஆடம்பர ஹோட்டல் ஒன்றை கட்ட அனுமதித்த குற்றத்தின் கீழ் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை கைதுசெய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரச வழக்கறிஞர் சண்முகசுந்தரம் கூறியுள்ளார்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் கொடைக்கானலில் ஏழு மாடிக் ஹோட்டல் ஒன்றை கட்டுவதற்கு சட்டவிரோதமாக அனுமதி கொடுத்ததற்காக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ,ஹோட்டல் அதிபர் ராஜேஸ் மித்தல், ஐ.ஏ.எஸ் அதிகாரி, அமைச்சர் செல்வகணபதி, ஆகியோர் மீது தமிழக இலஞ்ச ஒழிப்புப் பொலிசார் தொடர்ந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இந்த விசாரணையில் அரச சட்டத்தரணி சண்முகசுந்தரம் வாதாடுகையில் ஜெயலலலிதா மற்றும் அமைச்சராக இருந்த செல்வகணபதி, ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து பேசி 215 நாள் கிடப்பில் கிடந்த கோப்பை ஒரே நாளில் கையெழுத்திட்டு முறைகேடாக ஹோட்டல் கட்டுவதற்கு அனுமதி கொடுத்துள்ளனர்.

இதில் ஜெயலலிதா குற்றஞ் செய்துள்ளார் என்பதற்கான ஆதாரம் வலுவாக உள்ளது. விசாரணையில் ஜெயலலிதா குற்றஞ் செய்துள்ளார் என்பது உறுதியானால் அவரையும், ஹோட்டல் அதிபரையும் கைது செய்ய நேரும். மற்ற இருவரும் ஏற்கனவே கைதாகி சிறையில் உள்ளனர். ஜெயலலிதாவை கைது செய்ய வேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல. ஆனால் அவர் குற்றம் செய்திருந்தால் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடக்கூடாது. எனவே ஜெயலலிதாவிற்கு முன்பிணை அளிக்கக்கூடாது. அவ்வாறு முன்பிணை அளித்தால் அவர் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி சாட்சிகளைக் கலைத்து விசாரணைக்கு இடையுறு விளைவித்துவிடுவார் என்று கூறினார்.

# 2 கோடி ஊழல்: ஜெயலலிதா மீது மற்றும் ஒரு மோசடி வழக்கு

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஜெயலலிதா இரண்டு கோடி ரூபா ஊழல் செய்துள்ளதாக மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

லஞ்ச ஒழிப்புத்துறை சட்டத்தரணி நடராஜன், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சிவப்பாவிடம் இது தொடர்பாக விளக்குகையில், தெற்காசிய விளையாட்டுப் போட்டியை விளம்பரப்படுத்த மீனா விளம்பர நிறுவனத்துடன் ஜெயலலிதா அரசு ஒப்பந்தம் செய்தது.

இந்த விளம்பர நிறுவன உரிமையாளர் கிருஷ்ணமூர்த்தி தமிழக அரசுக்கு மூன்று கோடி ரூபா கட்ட வேண்டும் என்பது ஒப்பந்த விதியாகும். ஆனால் இது அமுல்படுத்தப்படவில்லை. கிருஷ்ணமூர்த்தி ஜெயலலிதா அரசுக்கு ஒரு கோடி ரூபாவை மட்டுமே செலுத்தியுள்ளார். மிகுதி இரண்டு கோடி ரூபாவை அப்போதைய முதல்வர் ஜெயலலிதா தள்ளுபடி செய்துவிட்டார். இதில் ஏதோ முறைகேடு நடந்துள்ளது என்று கூறினார்.

இந்த விளக்கத்தை கேட்ட நீதிபதி சிவப்பா ஜெயலலிதாவின் கருத்தை அறிவதற்காக வழக்கை 12.09.96 இற்கு தள்ளி வைத்தார்.


09.07.96 முதல் விற்பனையாகின்றது

125 பிராங்குகள் மட்டுமே




இதோ வெளிவந்துவிட்டது. வூட்லன்ஸ்சின் புதிய தொலைபேசி அட்டை WORLD CALL CARD உங்கள் வீடுகளில் இருந்தோ, அல்லது நீங்கள் நிற்கும் இடத்தில் இருந்தோ எவ்வித செலவுமின்றி
N° de Vert பாவித்து எதுவித தடங்கலும் இல்லாமல் Mci நிறுவனத்தால் முதன் முதலாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கு மட்டும் பாவிக்கக்கூடிய விசேட தயாரிப்பு இதுவே.

இலங்கை 15 நிமி. - பாகிஸ்தான் 15 நிமி, - பங்களாதேஷ் 15 நிமி. - இந்தியா 18 நிமி.

குறிப்பு: N° de Vert பாவிப்பதால் ஏற்படும் நன்மை, நீங்கள் முதல் தடவை 5 நிமிடம் பாவித்த பின்பும் மிகுதி 10 நிமிடத்தை பாவிக்கும் போது மேலதிகமாக பணம் செலவிடத் தேவையில்லை.
வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விசேட விலை உண்டு.

Woodlands Tele communication Centre

70, RUE LOUIS BLANC, 75010 PARIS. Tel: 46 07 76 04 - Fax: 40 07 76 90
மேலதிக விபரங்களுக்கு: 08 24 31 43 – 08 51 90 54

(ADV)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவை நம்ப நாங்கள் இன்னும் ஏமாளிகள் அல்ல - கண்ணப்பன்

சசிகலா, சுதாகரன் உறவை துண்டித்துவிட்டதாக ஜெயலலிதா ஆடும் நாடகத்தை நம்புவதற்கு ஆ.தி.மு.கவினர் ஏமாளிகள் அல்ல என்று கண்ணப்பன் அறிக்கை விட்டுள்ளார்.

போட்டி அ.தி.மு.க இணைச் செயலாளரான அவர் வெளியிட்ட அறிக்கையில் சசிகலா உறவு முறிந்தது, சுதாகரன் என் வளர்ப்பு மகன் அல்ல, என்ற வாசகங்களோடு ஜெயலலிதா வெளியிட்டிருக்கும் அறிக்கையைப் பார்த்து தமிழக மக்களும், அ.தி.மு.க தொண்டர்களும் எள்ளிநகையாடுகிறார்கள். இவ்வறிக்கை வெளியிடப் படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு ஜெயலலிதா சசிகலாவை சிறையிலே சந்தித்து நடத்திய ஆலோசனையின் விளைவுதான் இந்த முடிவு என்பதை நாங்கள் அறிவோம்.

பல்வேறு வழக்குகள், குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்புவிப்பதற்காகவே இந்த நாடகம் அரங்கேற்றப் படுகிறது என்பது தான் உண்மை. கழகம் தோல்வியை சந்தித்த பின்பு அதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டிய மூத்த தலைவர்கள் அனைவர்களையும் கட்சியை விட்டு நீக்கியதாகக்கூறி அதைச் சிதைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற ஜெயலலிதாவிற்கு திடீர் ஞானோதயம் எப்படிவந்தது என்பதுதான் கேள்வி.



வேறுவழியே இல்லாத காரணத்தினால் சசிகலாவும் ஜெயலலிதாவும் சேர்ந்து நடத்தும் நாடகம் தான் இது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். மக்களை தொடர்ந்து ஏமாற்ற நினைக்கும் ஜெயலலிதாவை, மக்களும், தொண்டர்களும் இனியும் நம்புவதற்குத் தயாராக இல்லை என்று கூறியுள்ளார்.

# தினகரன் ஹவாலா மோசடியில் ஈடுபட்டார்

## - உயர் நீதிமன்றம் தீர்ப்பு -

சசிகாலவின் அக்கா மகன் தினகரன், வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து ஹவாலா மோசடியில் ஈடுபட்டது நிருபணமாகி இருக்கிறது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்புக்கூறியுள்ளது.



65 கோடி ரூபா அந்நிய செலவாணி மோசடி செய்ததாக தினகரன் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி ஒருவருடம் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். இந்திய றிசேவ் வங்கியின் அனுமதி இன்றி அவர் வெளிநாடுகளில் கோடிக்கணக்கான ரூபா முதலீடு செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

1.5 கோடி அமெரிக்க டொலர்களை பெற்றது, 44.37 லட்சம் ஸ்ரேலிங் பவுண்சுகளைப் பெற்றது, சிங்கப்பூரில் அட்வன்சர் கோல்டிங் என்ற நிறுவனத்தில் பத்து லட்சம் முதலீடு செய்தது போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்பட்டிருந்தன.

தினகரனை விசாரணையின்றி சிறையில் அடைத்ததை எதிர்த்து அவரது மனைவி அனுராதா உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அவரை விடுதலை செய்யக் கோரி மத்திய அரசுக்கு அளித்த கோரிக்கை உரிய முறையில் பரிசீலிக்கப்படவில்லை என்றும், தினகரன் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவர், அவரை விசாரிக்க இந்தியச் சட்டங்கள் பொருந்தாது. என்றும் அவர் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

மத்திய அரசு அவரது இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்திருந்தது. இரு தரப்பு விவாதங்களையும் கேட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள், தினகரன் சிங்கப்பூரில் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர் என்ற வாதம் ஏற்கத்தக்கதல்ல. வர்த்தக வாய்ப்புக்களைத் தேடித்தான் அவர் பல வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். அங்கு சட்டவிரோதமாக பணம் பரிமாற்றம் செய்யும் ஹவாலா வேலையில்தான் அவர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்பது தெரியவருகிறது. அவரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்த பிறகுதான் அதை நிராகரித்துள்ளது. எனவே தினகரனை விசாரணை இல்லாமல் சிறையில் அடைப்பது சரியானதுதான் என்று தீர்ப்புக்கூறியுள்ளார்கள்.

# ஐக்கிய முன்னணிக்கு ராவ் எச்சரிக்கை

காங்கிரஸ் கட்சியால் பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகளிலிருந்து ஐக்கிய முன்னணி அரசு விலகிச் செல்லுமாக இருந்தால் காங்கிரஸ் கட்சி அதை எதிர்க்கும் என்று முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் பேசும் போது மதச்சார்பு கொண்ட அரசு மத்தியில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஐக்கிய முன்னணி அரசுக்கு காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவளிக்க முடிவு செய்தது. இதற்கு ஐக்கிய முன்னணி அரசு தன்னிச்சையாக எடுக்கும் எந்த முடிவையும் ஆதரிப்போம் என்ற அர்த்தமல்ல.

பால் தக்கரே குடும்பத்தின் மீது சந்தேக மேகங்கள் சூழ்ந்திருக்கும் இவ் வேளையில் பிரதமர் தேவகௌடா தானாகச் சென்று அவரைப் பார்த்திருப்பது முறையற்றது. பிரதமர் - தக்கரே சந்திப்பு அரசியல் வட்டாரங்களில் விவாதத்தைக் கிளப்பியிருக்கிறது. இந்தச் சந்திப்பிற்குப் பிறகு தக்கரே அரசியல் ரீதியாக அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார். இந்த சந்திப்பால் ஐக்கிய முன்னணி அரசின் நோக்கத்தில் சந்தேகம் கொள்ள இடம் ஏற்பட்டுவிட்டது.

தக்கரேயின் மனைவி, மகன் இறப்புக்கு துக்கம் விசாரிக்கவே தான் அவரைச் சந்தித்ததாக தேவகௌடா கூறியிருக்கிறார். தக்கரேயின் மனைவி ஒரு வருடத்திற்கு முன்பு இறந்தார். மகன் நாலு மாதங்களுக்கு முன் இறந்தார். தேவகௌடாவின் தயார் ஒரு மாதத்திற்கு முன்பு தான் இறந்தார். இந்தச் சூழ்நிலையில் யாருடைய இறப்புக்கு யார் துக்கம் விசாரித்திருக்க வேண்டும். தேவகௌடாவை சந்தித்து தக்கரேதான் துக்கம் விசாரித்திருக்க வேண்டும்.



சந்திரபாபு நாயுடு, லல்லு பிரசாத் யாதவ், இந்திரஜித் குப்தா, ஆகியோருக்கு அச்சத்தை உண்டுபண்ணவே சிவசேனைத் தலைவர் தக்கரேயை பிரதமர் சந்தித்திருக்கிறார். அவர்களால் தனது ஆட்சிக்கு ஆபத்து வந்தால், தக்கரேயை தனது பக்கம் இழுத்துக் கொள்ளவே கௌடா அவரைச் சந்தித்திருக்கிறார். இது போன்ற ஒரு காரியம் நிகழுமானால் காங்கிரஸ் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது என்று அவர் கூறினார்.

# சட்டப்பேரவையில் துண்டுப்பிரசுரம் வீசிய பெண்களுக்கு சிறைத் தண்டனை

கடந்த வாரம் தமிழக சட்டப்பேரவை நடந்துகொண்டிருக்கும்போது பத்திரிகையாளர் மற்றும், பார்வையாளர் மாடத்திலிருந்து கோசங்கள் எழுப்பியவாறு துண்டுப்பிரசுரங்கள் வீசிய பெண்கள் கைது செய்யப் பட்டு 15 நாள் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

ஆபாசப்படங்களை தடை செய்யக் கோரி 26.08.96 புதன் கிழமை சட்டப்பேரவையின் பார்வையாளர் மாடத்திலிருந்து சில பெண்கள் கோசங்களை எழுப்பியவாறு துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்தனர். அவர்களைத் தடுக்கச் சென்ற பெண் பொலிசாரை அவர்கள் கையில் வைத்திருந்த பிளேட்டுக்களால் கீறிக் காயப்படுத்தினர். இதனையடுத்து அவர்களுக்கு சட்டசபையில் இரண்டுநாள் சிறைத் தண்டனை அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின் மத்திய சிறையில் அடைக்கப் பட்ட அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்கை விசாரித்த நீதிபதி அவர்களை 15 நாள் தடுப்புக் காவலில் வைத்திருக்க உத்தரவிட்டுள்ளார்.

புரட்சிகர இளைஞர் முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த இந்தப் பெண்கள் பத்திரிகையாளரின் உதவியோடு சட்டசபை பார்வையாளர் கூடத்திற்குள் நுழைந்து தாம் மறைத்து எடுத்துவந்த பிளேட்டுகளால் அங்கு தடுப்புக்காக போடப்பட்டிருந்த வலைகளை அறுத்து துண்டுப்பிரசுரங்களை சட்டப் பேரவைக்குள் வீசியதாக சொல்லப்படுகிறது.

# இந்தியாவின் புதிய தானியங்கி உளவு விமானம்

விமானி இல்லாமல் இயங்கும் உளவு விமானம் ஒன்று இந்தியாவின் சொந்த தொழில் நுட்பங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20,21.08.96 அன்று பெங்களூரில் வெள்ளோட்டம் விடப்பட்ட இவ் விமானம் தேவையான அளவு தயாரிக்கப் பட்டபின் 1998ம் ஆண்டு இராணுவ பணிகளுக்காக இராணுவத்தினர்வசம் ஒப்படைக்கப் படும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை மிகத் துல்லியமாக உளவு பார்த்து படம்பிடித்துத் திரும்பும் இந்த விமானம் எதிரிகளின் எலெத்திரன் இயல் தலையீட்டிலிருந்து குறிப்பாக ராடார் கண்காணிப்பிலிருந்து தப்பிக்கும் திறன்வாய்ந்ததாக சொல்லப்படுகிறது.

# கூவத்தை சுத்தப்படுத்த இரண்டு கோடி ரூபா

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் ஓடுகின்ற கூவம்நதி மிகவும் அசுத்தமுடையதாகவும், அளவுக்கு அதிகமான துர்நாற்றம் வீசுவதாகவும் இருக்கிறது. சென்னை நகரின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் அந்த நதியைச் சுத்தப் படுத்துவதற்கு தமிழக அரசு இரண்டு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இது தொடர்பாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழக சட்டசபையில் தகவல் தருகையில் சென்னையை எழில் நகரமாக்க கூவத்தை சுத்தப் படுத்துவதற்கு இரண்டு கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

கூவம், மற்றும் அடையாறு ஆறுகளுக்கிடையில் இருக்கும் பங்கிங்காம் கால்வாயில் உள்ள சேறு மற்றும் வண்டல் படிவுகளை அகற்ற அரசு 1.90 கோடி ரூபாவை அனுமதித்துள்ளது என்று கூறியுள்ளார்.


## தமிழில் சாரதிப் பயிற்சி

பிரெஞ்சு தெரிய வேண்டியதில்லை! தமிழிலேயே படித்து தமிழிலேயே கோட் பாஸ் செய்து **பிரெஞ்சு சாரதிப் பத்திரம்** (permis de conduire) பெறலாம்! இலங்கைப் புத்தகம் இருந்தால் இன்னும் எளிது! உங்கள் பெயரை உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்

நீங்கள் வேறு சாரதிப் பாடசாலைகளில் சேர்ந்து பணம் கட்டியிருந்தாலும் பிரச்சனையில்லை நீங்கள் கட்டிய பணம் நஷ்டமாகாத வகையில் நாங்கள் உங்களுக்கு சாரதிப் பத்திரம் கிடைக்க வழிசெய்கிறோம்.

தொடர்புகளுக்கு: பேராசிரியர் சக்திப்புயல்



இடம் : 6, rue de Marquay, Paris10 (நிஷா மளிகை சந்து)
Métro: La Chapelle / Gare du Nord. - Tel: 34 24 12 82 / 02 46 59 23
கிளை ஸ்தாபனம் : Maison des Associations, Pontoise - Tel: 34 24 12 82 / 02 46 59 23

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனி RECKLINGHAUSEN, DATTELN இல்

# மாபெரும் திறப்புவிழா !!



Y&S

ஏசியன் சொப்



Recklinghausen, Oer Erkenschwick, Castrop Rauxel, Ahsen, Waltrop, Olfen, Marl, Haltern, Selm, Herten, Lunen, Datteln மற்றும் டற்றெல்ன் சுற்றாடலிலுள்ள நகரங்களில் வாழ் தமிழ் மக்களே, நண்பர்களே, வாடிக்கையாளர்களே. நீங்கள் அனைவரும் இலகுவாக வந்தடையக்கூடிய Datteln வியாபாரக் கேந்திர நிலையத்திலுள்ள Wittener Str-65 இல்

## 09.09.1996

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திட
சகல வசதிகளுடனும் ஆரம்பிக்கவுள்ளோம்.

**எங்களிடம்**

நம்ப முடியாத விலையில்

**மலிவு விற்பனை!!**

இளைஞர், யுவதி மற்றும் சிறுவர்களின் ஆடை வகைகள், மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள் அனைத்தும் எமது திறப்புவிழாவை முன்னிட்டு 09.09.96 இலிருந்து 21.09.96 வரை மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Wittener Str-65, 45711 Datteln - Tel: 02363 734967 - Fax: 02363 734968

(ADV)



வானிசைத் திலகங்கள் **மோகன்-ரங்கன்** இணைந்த **அப்சராஸ்** குழுவினரின்

**08.09.96**

# இன்னிசை வார்ப்புகள்

ஞாயிறு மாலை 6 மணிக்கு



என். ரகுநாதன் (TMS குரல் பாடகர்)



மோகன்



வித்யாவினி மோகன்ராஜ்



ரங்கன்



ஜி. பாலசுப்பிரமணியம் (J.P. சந்திரபாபு குரல் பாடகர்)



பிறேமானந்



ரதிதேவி



'வானொலிக் குயில்' ராஜேஸ்வரி சண்முகம்



லில்லி மயில்வாகனம்



எஸ். செல்லத்துரை

பாரிசில்: **TRIANON** கலையரங்கில் - 80, Bld Rochechouart, 75018 Paris. M°: Anvers - 08.09.96

14.09.96 Fredericia, Denmark
20.09.96 வெள்ளி மாலை 6.30 மணிக்கு Samfunns-Huset. Cont: Drammen / Ravi
05.10.96 Essen, Germany Cont: Rajah
13.10.96 London
Ramy Records வழங்கும் 28-29-30-31.9.96 Swiss
20.10.96 Palermo, Italy

விபரங்கள் அனைத்திற்கும்: Tel: (33-1) 39 93 30 96 / Fax: (33-1) 39 86 55 08

(ADV)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை தரைமட்டமாக்கிய ஒலிவேரா

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்


### வரலாற்றுத் தொடர்

33

வருண குலத்தானுக்குப் பின் சின்ன மீகாப் பிள்ளை ஆராட்சி என்பவன், யாழ்ப்பாணத்து அரச குமாரிகள் இருவருடன் தஞ்சாவூர் சென்று அவர்களை தஞ்சை அரசனின் பாதுகாப்பில் விட்டுவிட்டு, அவனது உதவியுடன் தமிழ்படை ஒன்றை திரட்டிக்கொண்டு, தொண்டமானாற்றில் வந்து இறங்கி, புத்தூர் கோப்பாய் வழியாக நல்லூருக்குச் சென்று ஒலிவேராவின் வசமிருந்த நல்லூர் அரண்மனையை முற்றுகையிட்டான்.

சின்ன மீகாப்பிள்ளையின் படைகள் தமிழகக் கரையிலிருந்து புறப்படுவதற்கு முன்பே, யாழ்ப்பாணத்திலிருந்த தங்களது விசுவாசிகள் மூலம் அதைத் தெரிந்துகொண்ட, கொழும்பிலிருந்த போர்த்துக்கேயத் தேசாதிபதி லூயி தி தெயிச்சேறா தி மச்சேடோ (Luis de Teyxeyra de Machedo) என்பவனின் தலைமையில் ஒரு படையை யாழ்ப்பாணத்திலிருந்த ஒலிவேராவுக்கு உதவும் வண்ணம் அனுப்பி வைத்தான்.

நிறவெறியும், ஆதிக்க வெறியும் கொண்ட மச்சேடோ தனது படைகளுடன் கடல் வழியாக மன்னாரில் வந்து இறங்கி, அங்கிருந்து தரை மார்க்கமாக பூநகரிக்கும் பின்பு கடல் மார்க்கமாக யாழ்ப்பாணக் கரைக்கும் வரும்வரை மிகப்பெரிய இனப் படுகொலையை செய்துகொண்டு வந்ததாக வரலாற்றுக் குறிப்புக்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.



போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை

போர்த்துக்கேயருக்கு எதிராக எதிர்காலத்தில் தமிழர்கள் யாரும் போர் தொடுக்க முன்வரக் கூடாது என்பதற்காக, அவன் தான் வரும் வழியில் கண்ட தமிழ் ஆடவர்களை வெட்டிக் கொன்று அவர்களது நெஞ்சைப் பிளந்தும், கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றைக் கிழித்து அதற்குள் இருந்த சிசுக்களை தெருவில் வீசி எறிந்தும், தாய்மாரின் மடியில் படுத்து பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தைகளை அவற்றின் வாயினூடாக வாளைச் செருகிக் கொன்றும் அவற்றின் தாய்மாரின் வயிற்றைக் கிழித்து அதற்குள் அந்தக் குழந்தைகளின் உடலைத் திணித்தும், வார்த்தைகளால் சொல்ல முடியாத கொடுமைகளையும், அட்டூழியங்களையும் செய்ததாக தெரிய வருகிறது.

ஒலிவேரா, மச்சேடோவின் படைகள் வந்து சேர்ந்ததும், நல்லூர் அரண்மனைக்கு அண்மையிலுள்ள குளமொன்றின் அருகே முகாமிட்டிருந்த சின்ன மீகாப் பிள்ளையின் படை மீது தாக்குதல் நடாத்தத் தொடங்கினான். தமிழர் படை நீண்ட தூரம் நடந்தும் கடற் பயணம் செய்தும் வந்ததால் சற்றுக் களைப்புற்றுப் போயிருந்தது. அதைவிட அந்தப் படையிலிருந்த சிலர் நோய்வாய்ப்பட்டும் இருந்தனர். இந்த நிலையில் ஒலிவேரா பீரங்கிகள், துப்பாக்கிகள் கொண்டு தாக்கத் தொடங்கியதும், தமிழர் படைக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டது.

இதற்கிடையில் சின்ன மீகாப் பிள்ளை தஞ்சை அரசனுடைய படைகளுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்திருப்பதால் போர்த்துக்கேயர் தோற்பது நிச்சயம் எனக் கருதிய, நல்லூர் பிரதானிகள் சிலர் அவ்வாறு சின்ன மீகாப் பிள்ளையின் படையினர் வெற்றி பெறும் பட்சத்தில் தங்களுக்கு அரசனாக்குவதற்கென்று, இராமேஸ்வரத்திலிருந்து ஒரு அரச குமாரனையும், அவனுக்குத் துணையாக 900 மறவர் படையையும் வரவழைத்திருந்தனர்.

இந்த அரச குமாரனும் மறவர் படையும் நல்லூர் அரண்மனைக்குச் சமீபத்தில் இருந்த கோவில் ஒன்றுக்குள் மறைந்திருந்தது. இந்த விடயம் ஒலிவேராவுக்குத் தெரிந்துவிட அவன், தனது படைகளை சின்ன மீகாப் பிள்ளையின் படைகளுடன் தொடர்ந்து போராடும் படி கூறிவிட்டு இரவு ஒரு சிறு படையுடன் இரகசியமாக அந்தக் கோவிலுக்குள் வந்து அதன் நாற்புறமும் தீ வைத்தான். நல்ல உறக்கத்திலிருந்த மறவர்கள், திடீரென கோவிலில் தீப்பற்றியதைக் கண்டு அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடிவர தயாராக இருந்த ஒலிவேராவின் படைகள் அவர்களை வெட்டிக் கொன்றன. கோவில் மடப்பள்ளிக்குள் ஒழிந்திருந்த அரசகுமாரனை, அந்தக் கோவில் பிராமணன் காட்டிக் கொடுத்துவிட அவனைக் கொல்லாமல் கைது செய்த ஒலிவேரா, அவனது கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டி கொழும்புக்கு அனுப்பிவைத்தான்.

அத்தோடு நல்லூர் அரண்மனையின் மறுபுறத்தில் சண்டை செய்து கொண்டிருந்த தனது படைகள் ஒலிவேராவின் படைகளிடம் தோல்வியடைவதைக் கண்ட சின்ன மீகாப்பிள்ளை அங்கிருந்து பின்வாங்கி தமிழ் நாட்டுக்குத் தப்பிச்சென்று விட்டான். இந்தச் சம்பவம் கி.பி. 1620 ஏப்பிரல் மாதத்திற்கு முன் நடந்ததாக அறியப் படுகிறது.

தமிழகத்திற்குச் சென்ற சின்ன மீகாப்பிள்ளை மீண்டும் கி.பி. 1620 நவம்பரில் புதிய படை ஒன்றுடன் வந்து பட்டணத் துறையில் இறங்கினான். இம்முறை அவன் வருவதை அறிந்த ஒலிவேரா தனது படைகளுடன் கடற்கரைக்கே வந்து அவர்களை தரையிறங்க விடாமல் தடுத்துப் போர் செய்தான். முந்திய போரைவிட இந்தப் போர் உக்கிரமானதாக இருந்தது. இரு தரப்பாரும் சளைக்காது போரிட்டனர். சின்ன மீகாப்பிள்ளையின் படைத் தலைவன் ஒருவன் ஏறிந்த ஈட்டி ஒலிவேராவின் மார்பில் பாய்ந்துவிட அவன் படுகாயமுற்று குதிரையில் இருந்து கீழே விழுந்துவிட்டான். அத்தோடு போர்த்துக்கேயர் படை தோற்றுவிடும் என எதிர்பார்த்து தமிழர் படை உக்கிரமாகத் தாக்கியது. ஆனாலும் போர்த்துக்கேயர் தீர்த்த துப்பாக்கி வேட்டினால் தமிழர் படைத் தளபதி கொல்லப்பட்டுவிட, தமிழர் படையின் உற்சாகம் குறைந்து போனது. அவர்கள் போர்த்துக்கேயரினது பீரங்கிக் குண்டுகளுக்கும் துப்பாக்கி வேட்டுகளுக்கும் மாளாது பின்வாங்கத் தொடங்கினர்.

இதைக் கண்டு உற்சாகமடைந்த போர்த்துக்கேயப் படை தமிழர் படையை மேலும் உக்கிரமாகத் தாக்கி தமிழ்நாட்டுக்கே திரும்பி ஓடச் செய்துவிட்டு, காயமடைந்த ஒலிவேராவை அரண்மனைக்குத் தூக்கிச் சென்றனர்.

அதன்பின் மீண்டும் இரண்டு முறை தஞ்சாவூர் படைகள் நல்லூருக்கு வந்து ஒலிவேராவின் படைகளுடன் போரிட்டுத் தோற்றதாக அவன் எழுதி வைத்துள்ள நாட் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

இவ்வாறு தஞ்சாவூர் படையெடுப்பின் காரணமாக நல்லூரில் அடிக்கடி சண்டை நடைபெறுவதன் காரணமாக அங்கே பலமான கோட்டை ஒன்றைக் கட்டுவதற்கு போர்த்துக்கேயர் திட்டமிட்டனர். இந்தக் கோட்டை கட்டும் பணியை செய்வதற்கு ஒலிவேராவுக்கு உதவுவதற்கு என கொழும்புத் தேசாதிபதியால் கலவல் என்பவனின் தலைமையில் மேலதிகப் படை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

கி.பி. 1621-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் பட்டணத்துறையில் இருந்து நல்லூருக்குத் தனது இருப்பிடத்தை மாற்றிய ஒலிவேரா முதல் வேலையாக அங்கிருந்த பிரமாண்டமான நல்லூர் கந்தசுவாமி கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கி அதன் அத்திவாரத்தையும் கிளறி அந்தக் கற்களைக் கொண்டு கோட்டையையும், வீடுகளையும் கட்டுவித்தான். நல்லூர் கந்தசுவாமி கோவிலை இடித்த போது, கிடைத்த தங்க நகைகள், இரத்தினக் கற்கள் என்பவற்றால் பேராசை கொண்ட ஒலிவேரா மற்ற இந்துக் கோவில்களிலும் அவ்வாறு கிடைக்கும் என எண்ணி எல்லாப் பெரிய கோவில்களையும் இடிக்கும்படி கட்டளையிட்டான்.

இதனையறிந்த கோவிலதிகாரிகளும், பிராமணர்களும் பெறுமதிமிக்க தங்க நகைகள் இரத்தினக் கல் பதித்த 'வேல்' முதலான வகைகளை நிலத்திற்குள் புதைத்து விட்டும் விக்கிரங்களை கிணற்றுக்குள் தூக்கிப்போட்டுவிட்டும் தலைமறைவானார்கள்.

இதனால் ஏமாற்றமும் கோபமும் அடைந்த ஒலிவேரா தனது படைகளை விட்டு யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்த அனைத்து இந்து ஆலயங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கினான்.

குடாநாட்டில் நிலைமை இவ்வாறிருக்க மற்ற இடங்களிலிருந்த போர்த்துக்கேயத் தளபதிகள், தங்கள் தங்கள் இடங்களில் இருந்த இந்துக் கோவில்களை இடித்து அங்கிருந்த பணம் நகைகளைக் கொள்ளையிட்டனர்.

கி.பி. 1552-ல் சீதாவாக்கை என்னுமிடத்தில் இருந்த '20 வருடங்களாக 2,000 சிற்பக் கலைஞர்கள் நாள்தோறும் சேவை செய்து கட்டிய 'பெறண்டி' என்று அழைக்கப்படும் வைரவ ஆண்டி' கோயிலையும், கி.பி. 1575-ல் பிரசித்தி பெற்ற முன்னேஸ்வரம் சிவாலயத்தையும், கி.பி. 1588-ல் தங்க விக்கிரங்களையும், தங்க ஓடுகளால் வேய்ந்த கூரையையும் கொண்ட தெவிநுவரை விஷ்ணு ஆலயத்தையும் கி.பி. 1622-ல் பிரசித்தி பெற்ற திருமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கி, அங்கிருந்த அளப்பெரிய பொக்கிஷங்களையும் செல்வங்களையும் கொள்ளையிட்டனர்.

ஒலிவேரா தாங்கள் கடைப்பிடித்த கிறிஸ்தவ மதமே உண்மையான மதம் என்றும் மற்ற மதங்களெல்லாம் சாத்தானின் மதங்கள் என்றும் கருதும் பிடிவாத குணம் உள்ளவனாதலால் யாழ்ப்பாண வாசிகள் எல்லாம் கட்டாயமாக கிறிஸ்தவ மதத்தையே கடைப்பிடிக்கும்படி கட்டளையிட்டான். அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கி.பி.1520 இல் இருந்து 1522-க்கு இடைப்பட்ட இரண்டு வருட காலத்தில் மட்டும் 20 அரச குடும்பத்தினரும், 150 பிராமணர்களும், மூன்று முதலியார்மாரும், 62 வன்னியர்களும், 400 பரதவர்கள் உட்பட 52,000 பேர் 'பிரான்சிஸ்கன் சபை' என்ற போர்த்துக்கேயரது மத மாற்ற சபையால் கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர் என்று கைறோஸ் என்னும் போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் எழுதி வைத்துள்ள வரலாற்றுக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

- நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# ஒரு சொட்டுத் தேன்



மாரிகாலந்நான். இருப்பினும் கந்தனுடைய முகத்திலும் உடலிலும் வியர்வை ஆறாக வழிந்துகொண்டிருந்தது. வெறி பிடித்தவன் போல, கோடரியைக் கையில் ஏந்தியபடி அவன் செடிகளையும் புதர்களையும் விலக்கியவாறே காடேறிக்கொண்டிருந்தான்.

காடு இருண்டு கிடந்தது. அடிக்கடி பெரு மழை பெய்ததால் மரங்களெல்லாம் ஈரங்குடித்து, கறுத்துப்போய்க் காணப்பட்டன.

அவனுடைய நடையில் வேகமிருந்தாலும் அவனுடைய விழிகள் மட்டும் எந்த ஒரு மரத்தையும் தவறவிடாது கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தன. கலங்கி, சற்றுச் சிவந்திருந்த அவ் விழிகளில் தீவிரம், ஏமாற்றம், சோகம் இவையெல்லாமே குழம்பிப்போய்க் கிடந்தன. ஈரஞ்சுவறி இளகியிருந்த பாதங்களில் சுருக்கென்று தைக்கும் முட்களையும் பொருட்படுத்தாமல் அவன் எதையோ தேடிச் சென்றுகொண்டிருக்கிறான்.

ஆனால் அவன் தேடி வந்ததன் சுவடு எந்த மரத்திலுமே காணப்படவில்லை. ஆனாலும் அவன் சோர்ந்து விடவில்லை.

எதிரே குறுக்கிட்ட காட்டாற்றில் முழங்காலளவுக்கு இறங்கி, முகத்தில் சில்லென்ற நீரை அடித்துக் கழுவி, இரண்டுவாய் நீரையும் பருகிக்கொண்டு ஆற்றைக் கடந்து அப்பாலுள்ள காட்டினுள் நுழைகிறான்.

முல்லை மாவட்டத்தின் காடுகளில் காணப்படும் இந்தக் காட்டாறுகள் கோடையிலே வறண்டுபோய் மணற்படுக்கைகளாகக் கிடக்கும். ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் குளங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துவிடும். ஆனால், மாரிகாலம் வந்தாலே காய்ந்துபோய்க் கிடக்கும் காட்டாறுகள் சிலமணி நேர மழை வீழ்ந்ததுமே கட்டுக்கடங்காமல் பிரவகிக்கும். குளங்கள் நிறைந்து தளும்பும்.

ஆனால் இச் சிறு குளங்களையொட்டி அமைந்திருக்கும் சின்னக் கிராமங்களில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கையோ மாரியில் வறண்டுவிடும்.

மார்கழியை இங்கெல்லாம் பீடை பிடித்த மாதமென்பார்கள். மனைவியின் ஒரே நகையான தாலிக்கொடி, வித்துக்கென வைத்திருந்த நெல், அங்குமிங்கும் சில்லறையாக வாங்கிய கைக்கடன் எல்லாமே மாரியில் குடிசைகளைவிட்டு வெளியேறிவிடும். நெல், அடைவு வைத்து எடுத்த பணம் அத்தனையையுமே அவரவர் வயல்களுக்குள் உழுது புதைத்துவிட்டு அண்ணாந்து வானத்தைப் பார்த்தவண்ணமே இருப்பார்கள். கோதுமை மாவும், மரவள்ளிக் கிழங்கும் வயிறுகளை அரைகுறையாக நிரப்பிக்கொண்டிருக்கும்.

வயல்கள் ஒருபடியாக விளைந்து மாசி, பங்குனியில் அறுவடை முடிந்ததும் கைக்குவரும் பணத்தைக் கொண்டு கொடியை மீட்பார்கள். கடனை அடைப்பார்கள். வருடப் பிறப்பு வந்தால் ஒருசில துணிமணிகள், இரண்டு போத்தல் சாராயம் இவற்றுடன் வந்த பணம் சென்றுவிடும். வைகாசி போய் ஆனி வருவதற்குள் மீண்டும் கடன், அடைவு என்ற ரீதியில் சகடயோகமாகச் சுழன்றுகொண்டிருக்கும் இவர்களது வாழ்க்கை.

இடையில் தப்பித்தவறி வானம் பொய்த்துவிட்டால் அல்லது தண்ணியைப் போட்டுவிட்டு சில்லறை அடிதடியில் இறங்கி வழக்குக் கணக்கென்று வந்துவிட்டால் அந்த வீழ்ச்சியில் இருந்து மீண்டு பழைய வாழ்க்கை வட்டத்தினுள் நுழைவதென்றால் மிகவும் சிரமம்தான்!

கந்தனும் இவர்களில் ஒருவன். அவனுக்கும் மனைவி மக்களுண்டு, பிரச்சனைகளுண்டு.

காலை நடந்த நிகழ்ச்சியை நினைத்தாலே கந்தனுக்கு நெஞ்சு குமுறியது.

அவனுடைய நான்காவது குழந்தையான ராணிக்கு நாலைந்து நாட்களாகவே சுகவீனம். எதைத் தின்றாளோ தெரியவில்லை. ஒரேயடியாக வயிற்றால் போகத் தொடங்கிவிட்டது. இரண்டொருநாள் அதையும் இதையும் கொடுத்துப் பார்த்தாள் கந்தனுடைய மனைவி. குணமில்லை. கடந்த இரவு முழுவதும் குழந்தைக்கு நினைவேயில்லை.

விடிகாலையில் கந்தன் குழந்தையையும் தூக்கிக்கொண்டு அயற் கிராமத்துப் பரியாரியிடம் ஓடினான். அவர் குழந்தையின் கையைப் பிடித்துப் பார்த்து உதட்டைப் பிதுக்கிவிட்டு, ஒரு தூளைக் கையிற் கொடுத்து "இதை மூன்று நேரம் சுத்தமான தேனிலை குடு. நாளைக்குத்தான் பொடி தப்புமோ இல்லையோ எண்டு சொல்லலாம்" எனக் கூறியபோது கந்தனுக்கு வயிற்றை எதுவோ செய்தது.

இருப்பினும் மிகவும் நம்பிக்கையுடன் மருந்தை வாங்கிக்கொண்டு சந்தியில் இருக்கும் சங்கக் கடையருகில் வந்துதான் அவனுக்கு தன் வீட்டில் மருந்துக்குக்கூட தேன் இல்லை என்பது நினைவுக்கு வந்தது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் அவனுடைய குக்கிராமத்திலே தேனாறு பாய்ந்தது. அந் நாட்களில் கந்தன் தினமும் தன் ஊரவருடன் சேர்ந்து காட்டுக்குச் செல்வான். கிடைக்கும் தேனைப் பிழிந்து பகிர்ந்துகொள்வார்கள். அந்தமுறை கந்தனுடைய வயல்வேலிக்கு முட்கம்பி மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டது. எனவே தனக்குக் கிடைத்த முப்பது போத்தல் தேனையும் அப்படியே மொத்தமாக அயற்கிராமத்தில் கடை வைத்திருக்கும் ஒருவருக்கு விற்றுவிட்டான். ....சே! மருந்துக்குக்கூட ஒரு சொட்டுத் தேன் வைக்காமல் விற்றுவிட்டது எவ்வளவு பிழையாய்ப் போயிற்று...! என்று சிந்தித்தபடியே நடந்துகொண்டிருந்த கந்தனுக்கு சட்டென்று ஒரு ஞாபகம் வந்தது. அவனிடமிருந்த தேனை மொத்தமாக வாங்கிக்கொண்டவரின் கடை அருகில்தானே இருக்கிறது. மருந்துக்கு கொஞ்சத் தேன் கேட்டால் நிச்சயம் தொடுப்பார் என்று நினைத்தவன், வேகமாக நடந்து சென்று அக் கடை வாசலில் ஏறினான்.

கல்லுப் பிள்ளையார் போல் உட்காந்திருந்த கடை முதலாளியின் பின்னே உயரமான பிராக்கிகளில் தேன் போத்தல்கள் பல வரிசையாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் கந்தனுடைய மனம் ஆறியது.

"புள்ளைக்குச் சுகமில்லை முதலாளி, மருந்துக்கு கொஞ்சத் தேன் வேணும்!"

"ஒரு போத்தில் பன்ரெண்டு ரூபா கந்தன்"

கந்தன் திகைத்துப் போனான். தன்னிடம் இருந்து ஒரு போத்தல் மூன்று ரூபாவுக்குக் கொள்வனவு செய்த தேன் இப்போது பன்னிரண்டு ரூபாவா? அவனால் பேசவே முடியவில்லை.

"எத்தினை போத்தல் வேணும் கந்தன்?"

"இப் கையிலை ஒரு சதமும் இல்லை முதலாளி! புள்ளைக்கு மருந்து குடுக்க ஒரு சின்னக் குப்பிப் போத்திலுக்கை ஐஞ்சாறு சொட்டுத் தேன் தந்தால் காணும்" கந்தன் கூனிக்குறுகிக் குழைந்தான்.

"நான் கடன் குடுக்கிறேல்லையெண்டு உனக்குத் தெரியுந்தானே கந்தன்!"

"முதலாளி கொஞ்சம் தயவு பண்ணுங்கோ!" கந்தன் வேண்டினான்.

ஆனால் அந்த முதலாளி அதற்குமேல் எதுவுமே பேசவில்லை. அவன் அங்கு நிற்பதையே உணராதவர்போல் பழைய பத்திரிகை ஒன்றில் மூழ்கிவிட்டார்.

கந்தன் ஊரை நோக்கி நடந்தான். தோளில் துவண்டு கிடந்த குழந்தையின் உடல் தகித்தது. அதைவிட அதிகமாக அவனுடைய நெஞ்சு கொதித்தது.

கிராமத்தை அடைந்ததும் மனைவியிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு, அங்கு உள்ள ஆறேழு குடிசைகட்கும் சென்றான். ஆனால், அங்கும் ஒரே பதில்தான்.

"எங்களிட்டையும் ஒரு சொட்டுத் தேனும் இல்லைக் கந்தன். உன்னோடைதானே நாங்களும் தேன் வித்தனாங்கள். மருந்துக்குக்கூட இல்லாமல் பொடியள் தின்டிட்டுதுகள்!"

தேனாறு பாய்ந்த அந்தக் கிராமத்தில் மருந்துக்குக்கூட தேன் இல்லை. குமுறும் நெஞ்சுடன் திரும்பி வந்த கந்தன், தாயின் மடியில் வதங்கிப்போய்க் கிடந்த குழந்தையின் நெற்றியிலே கையை வைத்துப் பார்த்தான். நெருப்பாய்ச் சுட்டது. கால்கள் சில்லிட்டுப்போய்க் கிடந்தன.

ஒன்றுமே பேசாமல் கோடரியையும் எடுத்துக்கொண்டு நண்பகல் நேரம் காட்டில் நுழைந்தவன் கிராமத்தை விட்டு வெகுதூரம் வந்துவிட்டிருந்தான்.

இப்போ பொழுது சாய்வதற்கும் இன்னும் அதிக நேரமில்லை. தேன் இன்னமும் சந்திக்கவேயில்லை.

ஆங்காங்கு, அவர்கள் முன்பு தேன் தறித்த மரங்களில் இருந்த தேன் குடிகள் எல்லாம் எங்கோ சென்றுவிட்டன.போதாக்குறைக்கு நிலவெறிக்கும் நாட்கள். தேன்குடி கண்ணில் பட்டாலும் அந்த வதைகளில் தேன் இருப்பது மிகவும் அசாத்தியம். நிலவுக்கு தேனீக்கள் தேனைக் குடித்துவிடும்.

கந்தன் நம்பிக்கையை இழந்துவிடவில்லை.

அதோ! அந்தச் சரிந்த வேலமரத்தில் கரடி ஏறிய அடையாளங்கள் தென்படுகின்றனவே! கரடி தேன் எடுப்பதற்காகத்தான் மரங்களில் ஏறும். கந்தன் நெருங்கிச் சென்று கரடியின் கால் நகங்கள் மரத்தில் ஏற்படுத்தியிருந்த அடையாளங்களைக் கவனிக்கிறான். அவை எத்தனையோ நாட்களின் முன் ஏற்பட்டவை! அவன் சோர்ந்துவிடாமல் சட்டென மரத்தில் ஏறி, தேன் கொட்டருகில் வருகிறான். பூ வாசல் கறுத்துக் கிடக்கிறது. இதழ்களைக் குவித்து பூவாசலினுள் ஊதிவிட்டு காதைக் கொடுத்துக் கேட்கிறான். தேன் பூச்சிகள் இரையும் ஓசை கேட்கவில்லை! ஏமாற்றத்துடன் கீழே இறங்கியவன் மிகவும் வேகமாக நடக்கிறான்.

...ஐயோ! பொழுதுபட முதல் ஒரு சின்னத் தேன்குடியென்றாலும் சந்திச்சுதே என்டால்...

மகள் ராணியின் முகம் அவன் மனக்கண்ணில் தெரிகிறது.

பொழுது சாய்ந்து விட்டது.

நன்றாக இருட்டி விட்டால் காட்டில் வழி தெரியாது. இனி எப்படித் தேன் பார்க்க முடியும் என்று நினைத்து, தன் கிராமம் இருக்கும் திசையில் திரும்பி, நாலைந்து பாகம் நடந்தவனுடைய காதில் குளவி இரைவது கேட்டது. கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தான்.

ஒரு பாலை மரத்தில் மொக்காக இருந்த பகுதியைச் சுற்றி குளவிகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

குளவிகள் தேன்கூட்டில் நுழைந்து தேன் குடிக்க முயல்வது வழக்கம். ஆகவே நிச்சயம் அந்தக் கொட்டில் தேன் இருக்க வேண்டும் என நினைத்து விறுவிறென்று மரத்தில் ஏறி பூவாசலை அவதானித்த கந்தனின் முகம் சற்று மலர்ந்தது. தேனீக்கள் பூவாசலில் நுழைவதும், வெளிக்கிடுவதுமாகக் காணப்பட்டன.

மரத்தைக் கோடாரியால் தட்டிப் பார்த்து, கொட்டு எவ்விடம் என்பதை நிச்சயம் செய்துகொண்டு கந்தன் விரைவாகத் தறிக்கத் தொடங்கினான்.

சில நிமிடங்களுக்குள்ளாகவே, பூவாசலின் கீழ் ஒரு நீள் சதுரமான பகுதி, அப்படியே ஒரு சிறிய கதவு போல பெயர்ந்து விழுந்தது. அந்தத் துவாரத்தினுள் கந்தன் வாயால் ஊதஊத தேனீக்கள் தாம் மொய்த்திருந்த வதைகளை விட்டு, மேலே கொட்டுக்குள் போய் அடங்கிக்கொண்டன.

கந்தன் நம்பிக்கையுடன் கொட்டினுள் கையை விட்டு ஒவ்வொரு வதையாகப் பிய்த்தெடுத்தான். வதையில் தேனெடுத்தால் அது ஈயம்போலக் கனக்கும். கந்தனின் கையில் வந்தவையோ காற்றுப்போல் இலேசாக இருந்தன. வெள்ளை வெளேர் என்றிருந்த அந்த வெற்று வதைகளை எறிந்துவிட்டு மீண்டும் கொட்டுக்குள் கையை விட்ட பதட்டத்துடன் துளாவினான் கந்தன்.

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

## பாலமனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசக்தியின் விமர்சனத்திற்கு

*(ஜமுனா ராஜேந்திரனின் சினிமாக் கட்டுரை தொடர்பாக சிவசக்தி என்பவர் பாரிசிலிருந்து 82ஆவது முரசில் விமர்சனக் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார், அதற்கு ஜமுனா ராஜேந்திரன் இக் கட்டுரை மூலம் பதிலளித்துள்ளார்.)*


சிவசக்திக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள் கடிதத்தின் ஒரு பகுதி, மற்றப் பகுதி பெண்கள் சினிமா / பாலுமகேந்திரா/ மணிரத்னம் / கமல்ஹாசன் பற்றிய எனது மதிப்பீடு பற்றியது. அவரது கோபத்தை என்னால் நிதானமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. மாற்றுச் சினிமா பற்றிய எனது கருத்தாக்கத்துக்கும், நிலவும் வெகுஜன சினிமாவில் நான் குறிபிடத் தக்கவர்களாகக் காணப்படுபவர்களுக்கும் இடையிலான எனது அணுகுமுறை பற்றியும் கேட்டிருக்கின்றார்.

படம் பார்க்காமல் எழுதுவதும். படிக்காமல் ஒன்றைப் பற்றிப் பேசுவதும் மோசடி என்கின்ற அரிச்சுவடி அறிந்தவன் மட்டுமல்ல, அந்த நம்பகத்தனத்தை எதிர்ப்பவனும் கூட. எனது சொந்தச் சேர்ப்பில் 3000 படங்கள் உள்ளன. மூன்றாம் உலக/ ஐரோப்பிய இடதுசாரிகளின் படங்கள், இந்திய மொழியிலான முக்கியமான படங்கள் வைத்திருக்கிறேன். உலகெங்கும் இருந்து என்னிடம் கேட்கின்ற நண்பர்களுக்கு பதிந்தும் தருகிறேன். சிவசக்தி விரும்பினால் என்னிடம் இருக்கும் எந்தப் படத்தையும் நான் பதிந்து தருவேன்.


திரைப்பட விழா சமயங்களில் ஒரேநாளில் பல்வேறு திரையரங்குகளில் ஐந்து படங்களைக்கூடப் பார்த்திருக்கிறேன்.

சராசரி 90 நிமிடப் படங்கள். தமிழ் மசாலாப் படங்களில் நான் சண்டைக் காட்சிகளைப் பார்ப்பதில்லை. 30 நிமிடங்கள் அதிலேயே மிஞ்சும். ஆய்வு மனப்பான்மையும் விமர்சன ஆர்வமும் இருந்தால் ஒரே நாளில் ஆறு படங்கள் கூடப் பார்க்கலாம்.

பெண்கள் சினிமா பற்றி பட்டியல் போடுவது எனது நோக்கம் அல்ல. பிரச்சனைக்குரிய படங்களை எடுக்கும் முயற்சி



யுள்ள பெண்களை முன்னிறுத்துவதே அக் கட்டுரையின் நோக்கம். ஈழமுரசின் ஒரு பக்கத்தில் ஒரு ஆய்வுக் கட்டுரையை எழுத முடியாது. ஜெயகாந்தனின், கோமல்சாமிநாதனின் தாக்கம் தமிழ் சினிமாவில் குறிப்பிடத் தக்கவைதான். அந்தத் தகுதி அவர்களுக்கு உண்டு. நான் ஈழமுரசில் மட்டும் சினிமாக் கட்டுரைகள் எழுதவில்லை. ஜான் ஆபிரகாம்/ சேது மாதவன் பற்றி பல்வேறு கட்டுரைகளில் எழுதியிருக்கிறேன்.



நான் எழுதும் கட்டுரைகள் ஐரோப்பா, கனடா, இந்தியா என 18 பத்திரிகைகளில் வருகின்றன. எல்லாவற்றையும் சிவசக்தி படித்திருக்க முடியாதிருக்கலாம். அதற்காக என்மீது கோபப்பட்டிருக்க வேண்டாம்.

பாலுமகேந்திராவின் 'மறுபடியும்' பற்றி நான் எழுதிய தனிக் கட்டுரை ஒன்று (படத்தின் கடைசிக் காட்சியையும் பற்றி விரிவாக) கனடா 'தாயகத்தில்' வெளியாகியுள்ளது. மூடுபனி, (கடற்கரைத்தாகம் (?) நான் பார்க்கவில்லை) வண்ணவண்ணப் பூக்கள் போன்றவை எந்த விதத்தில் வீடு, யாத்ரா போன்றவற்றோடு சேர்த்துச் சொல்லப்பட முடியும்? மேலும் அக் கட்டுரை பாலுமகேந்திரா, பல்வேறு இயக்குனர்கள் பற்றி விமர்சிக்கும் வேளையில் அதற்கான அவரது தார்மீக உரிமை பற்றிய பரிசீலனையாகவே எழுதப்பட்டது. பாலுமகேந்திராவின் இடம் தமிழ்படச் சரித்திரத்தில் மறுக்கப்பட முடியாது. 'மறுபடியும்' விமர்சனத்தில் மட்டுமல்ல பல்வேறு கட்டுரைகளில் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன் (மிகச் சமீபத்தில் 'பாலம்' ஜூலை இதழில்).

மணிரத்னம் பற்றிய கட்டுரைகளை கவனமாகப் படித்திருப்பாரானால் இப்படிக் கடுமையான வார்த்தைகளைப் பாவிக்கும் நிலை நேர்ந்திருக்காது. மணிரத்தினத்தை மாற்றுச் சினிமாக்காரர் என்று நான் சொல்லவில்லை. பம்பாய், ரோஜாவை வைத்து மட்டும் மணிரத்தினத்தைப் பார்க்க முடியாது எனச் சொல்கிறேன். பம்பாய், ரோஜாவில் கூட சிவசக்தி எதிர்பார்க்கின்ற மாதிரி அரசியலை மட்டுமே அவர் நோக்கில் நான் பார்க்க வேண்டும் என்று சொல்ல முடியாது. மணிரத்தினம் சினிமாவைக் கலையாகக் கையாளத் தெரிந்த தொழில்நுட்பக்காரன். இதை நாம் கவனமாக அவதானிக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

'கனவுலக வியாபாரி' கமலஹாசன் சிறகுகளைக் காயப்படுத்துகிறார் என்கிறார் சிவசக்தி. பாரதிராஜாவிலிருந்து பாலு மகேந்திரா, ருத்ரய்யா போன்றோர் கொடுத்த படங்களில் நடித்தவர் அதே கனவுலக வியாபாரி கமலஹாசன்தான். (16 வயதினிலே, அவள் அப்படித்தான், மூன்றாம்பிறை) கமலஹாசன் நடிகனாக தொடர்ந்து இயங்குகின்ற சூழல் குறித்து நாம் யோசிக்க வேண்டும். ஏ.வி.எம். நிறுவனம்தான் காரணமே தவிர கமலஹாசன் அல்ல. அப்போது கமலஹாசன் இன்னொரு ரஜனிகாந். சங்கரின் 'இந்தியன்' படக்கதை, உருவாக்கம். வசனம், இயக்கம் போன்றவற்றில் இருந்த மாதிரியான உறவல்ல. கமல்ஹாசனுக்கு குணா, மகாநதி, தேவர்மகன், நாயகன், குருதிப்புனல் போன்றவற்றில் இருந்த உறவு.

தொழில்முறை நடிகனான கமல்ஹாஸன் தொடர்ந்து நடி

எச்சசொச்சம்தான் இருக்கிறதெனில் தேவர் ஜாதிக்குள் நிலவும் வன்முறை பற்றி தீவிரமாகக் கேள்வி எழுப்பியுள்ளதை நாம் எங்கே வைக்க முடியும்?

சதிலீலாவதி பற்றியும் மகளிர் மட்டும் பற்றியும் அதன் திருடுதல் தொடர்பாகவும் கட்டுரை

என்று நான் கருதுகிறேன்.

புரட்சிக் காலத்திய சீன, ரஷ்யப் படங்களில், இன்றைய இலத்தீனமெரிக்கப் படங்களில் நிறைய எம்.ஜி.ஆர். பாணி விஷயங்களைப் பார்க்க முடியும்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் 1990-களில் நிறைய

**நான் விரும்பும் மாற்றுச் சினிமாவை கமல்ஹாசன் உருவாக்க மாட்டார். அதை நாமே உருவாக்க வேண்டும் எனத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.**

களில் குறிப்பிட்டிருக்கின்றேன். (சுவடுகள் / நோர்வே). கமல்ஹாசனை உன்னத புருஷனாக மதிப்பிட வேண்டிய தேவை எனக்கில்லை. அதேவேளை ஒரு கலைஞனை மதிப்பிடுவதில் ஒற்றைப் பரிமாண அரசியலைக் கையாளுவதிலும் எனக்கு உடன்பாடில்லை. சமூக முரண்பாடுகளுடன் தான் இயங்க நேர்ந்திருப்பதை துக்கத்துடன் ஒப்புக்கொள்பவன் ஆக்கபூர்வமாக

மாற்றங்கள் நிகழ்கிறது. உலகின் அனைத்து சினிமாக்களும் மாறுதலைச் சந்திக்கின்றன.

வெகுஜன சினிமா விஷயங்கள் என ஒதுக்கப்படும் பண்புகளைக் கொண்டே நிறைய தீவிர சினிமாக்காரர்கள் படமெடுக்கிறார்கள்.

மாற்றுச் சினிமாவை வெறும் அரசியல் ரீதியிலான படங்கள் என கருதிக் கொள்வது அபத்தம். அரசியல் ரீதியிலல்லாத

# யமுனாவின் பதில்

-க்க வேண்டும். நடித்தால்தான் சினிமாவில் இருக்க முடியும். கமல்ஹாசன் தன் 'கட்டுப்பாட்டுக்குள்' வருகிற / இருக்கிற படங்களில் மட்டுமே வெகுஜன சினிமாவில் 'மாற்றுச் சினிமாக் கூறுகளை' உருவாக்க முயல்கிறார் என்கிறேன்.

அதுவும் நாம் விரும்பும் அல்லது நான் விரும்பும் மாற்றுச் சினிமாவை கமல்ஹாசன் உரு

**தொழில்முறை நடிகனான கமல்ஹாஸன் தொடர்ந்து நடிக்க வேண்டும். நடித்தால்தான் சினிமாவில் இருக்க முடியும். கமல்ஹாசன் தன் 'கட்டுப்பாட்டுக்குள்' வருகிற / இருக்கிற படங்களில் மட்டுமே வெகுஜன சினிமாவில் 'மாற்றுச் சினிமாக் கூறுகளை' உருவாக்க முயல்கிறார் என்கிறேன்.**

வாக்க மாட்டார். அதைநாமே உருவாக்க வேண்டும் எனத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நான் விரும்பும் சினிமா கென்லோச்சிலிருந்து / வான் டிரோட்டா / ஈழச்சினிமா எனக் கட்டுரைகள் எழுதியிருக்கிறேன்.

**குருதிப்புனல் பற்றி கமல்ஹாசனின் நேர்முகம் ['பாலம்' ஜூன் இதழ்] வந்திருக்கிறது. அதைப் படித்துவிட்டு அதன் பின்பும் குருதிப் புனலில் போலிஸ் நாய்களை மட்டும்தான் சிவசக்தி பார்ப்பாரானால் நான் அதிகமாக வேறேதும் சொல்ல முடியாது.**

குருதிப்புனல் பற்றி கமல்ஹாசனின் நேர்முகம் ('பாலம்' ஜூன் இதழ்) வந்திருக்கிறது. அதைப் படித்துவிட்டு அதன் பின்பும் குருதிப் புனலில் போலிஸ் நாய்களை மட்டும்தான் சிவசக்தி பார்ப்பாரானால் நான் அதிகமாக வேறேதும் சொல்ல முடியாது. தேவர் மகன் படத்தில் [illegible]

பார்க்கதக்க கலைஞன்தான்.

பம்பாய் படம் பற்றிய எனது விமர்சனம் (நாழிகை/லண்டன்) படத்தின் இறுதிக் காட்சியின் அபத்தம் குறித்தும் பேசியிருக்கிறது. மணிரத்தினத்தின் அரசியலின் செயற்கைத் தன்மையை நான் நிராகரித்திருக்கிறேன்.

சிவசக்தியின் கடிதத்தை முன் வைத்து நான் இரண்டு விசயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.


1. **விமர்சன நேர்மை, ஆழமான தத்துவப் பார்வை என தான் வரையறுத்துக் கொண்ட சினிமா பற்றிய பார்வைகள், எனது விமர்சன நோக்கில் வராததாலேயே சிவசக்தி கோபம் கொள்கிறார் என நான் புரிந்து கொள்கிறேன்.**
2. **உலக சினிமா – ஐரோப்பிய சினிமா – கிழக்கு ஐரோப்பிய – மூன்றாம் உலக – ஹாலிவூட் – இந்திய – தமிழ் சினிமாக்களை நிறையப் பார்த்தவன், பார்த்துக் கொண்டே இருப்பவன் நான்.**

தமிழ் சினிமா மீது வைக்கப்படும் எல்லா விமர்சனங்களையும் (பெரும்பாலானவை படம் பார்க்காமல் வரும் விமர்சனம்) நான் குறிப்பிடும் எல்லா சினிமா மீதும் வைக்க முடியும். புரட்சிகர சினிமா என்று சொல்லப்படுபவற்றின் மீதும் வைக்கமுடியும்.

தமிழ் சினிமாவைப் பற்றி தாழ்வு மன்பான்மை கொள்ளவோ, கழிசடை என கழித்து ஒதுக்கப்படவோ தேவையில்லை

சமூக நெருக்கடிகள் பற்றிய அற்புதமான படங்களின் வரிசையில் உலக சினிமாவுக்கு நிகரான படங்களை தமிழ் சினிமாவிடம் சொல்ல முடியும்.

வீடு, கிழக்குச் சீமையிலே, மகாநதி, அழியாத கோலங்கல், மெட்டி, உதிரிப் பூக்கள் என என்னால் சொல்ல முடியும்.



புரட்சிகர சினிமா எடுப்பதால் புரட்சி வந்துவிடுமென்றோ பட்டினி பற்றி படமெடுப்பதால் வறுமை தீர்ந்துவிடும் என்றோ நான் நம்பவில்லை. தனிமனிதனின் மனதில் யோசனைகளைத் தூண்டுவதே மாற்றுச் சினிமாவுக்கான அடையாளம்.

அதுவே மனிதனை செயலுக்குத் தூண்டும். இதைச் செய் என்று ,என்னால் சொல்ல முடியாது.

நான் உலக சினிமா - மாற்றுச் சினிமா-இந்தியச் சினிமா - தமிழ்ச் சினிமா - வெகுஜன சினிமா - புரட்சிகர சினிமா என இவைகளுக்கிடையிலான உறவு பற்றியும் நாம் செயற்படுவதற்கான சாத்தியம் பற்றியும் சிந்திக்கிறேன். நிலவும் சினிமா பற்றிய புரிதலும் விமர்சனத்தில் இருந்துமே அதைச்செய்ய முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்.

*அன்புடன்*
*யமுனா ராஜேந்திரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஒரு சொட்டுத் தேன்

கொட்டின் மேற் பகுதியில், தேனீக்கள் மொய்த்திருந்த பகுதியில் இருந்த 'கணக்கன் வதை' அவனுடைய நடுங்கும் விரல்களுக்குள் அகப்பட்டது. அதைப் பியித்தெடுத்ததுடன் தேனீக்கள் மொய்த்துக் கொட்டின. சுரீர் என்று கடுக்கிய விஷத்தின் வேதனையையும் பொறுத்துக்கொண்டு அவன் அந்தக் கணக்கன் வதையை எடுக்கிறான். உள்ளங்கை அளவேயான அந்த வதை குண்டுபோலக் கனத்தது.

தேன் பிலிற்றும் அந்த வதையைக் கைக்குள் அடக்கியபடியே கந்தன் தன் கிராமத்தை நோக்கிப் புயலென விரைகிறான்.

இதோ வலது கையினுள் தேன்கசியும் அந்த வதையைக் கொண்டுபோய் ஒரு பேத்தி இலையில் பிழிந்துவிட்டு அதனுள் பரியாரியார் கொடுத்த தூளைக் குழைத்து ராணியின் நாவில் தடவ வேண்டும், என்ற தவிப்பில் அவன் காட்டில் மூச்சிரைக்க ஓடுகிறான்.

சூரை முட்கள் தோலைப் பிய்க்கின்றன. கரம்பை முட்கள் காலில் தைக்கின்றன. மேனியில் காயம்பட்ட இடங்களில் வியர்வை வழிந்து சொல்லொணா எரிவை ஏற்படுத்துகின்றது.

இருப்பினும் கந்தன் தன் குழந்தையின் உயிரைத் தடுத்து நிறுத்துவதற்காக மரங்களில் மோதிக்கொண்டும், கொடிகளில் இடறிக் கொண்டும் தன் குடிசையை நோக்கி ஓடுகிறான்.

தேனில் குழைத்த மருந்தைத் தின்றதும் குழந்தை கண்ணைத் திறப்பாள். மனைவியின் முகம் மலரும், மற்றப் பிள்ளைகள் மறுபடியும் சிரித்து விளையாடுவார்கள் என்ற நம்பிக்கை அவனுடைய கால்களுக்கு வலுவைக் கொடுக்கின்றது.

ஓடி, ஓடி அவன் கிராமத்து எல்லைக்கு வந்தபோது, நிலவு பாலாய்ப் பொழிகின்றது. நிலவொளி தேங்கித் ததும்பும் அந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு, அவனுடைய மனைவியின் ஒற்றை ஒப்பாரி அவன் காதில் நாராசமாய்ப் பாய்கின்றது.

ஓடிவந்த பாதையிலே சட்டென நின்றுவிட்ட கந்தன் ஆத்திரத்தில் பற்களை இறுகக் கடித்துக் கொள்கிறான். இரைக்கும் மூச்சு கனலாகத் தகிக்கின்றது.

எந்த நிலமை ஏற்படினும் இலகுவில் மனதைத் தளரவிட்டுவிடாத அந்தக் கிராமத்தானுடைய கண்கள் கலங்குகின்றன.

அந்தச் சின்னஞ்சிறு கணக்கன்வதை, அவனுடைய பலம்மிக்க வலதுகை விரல்களுக்குள் நசுக்குப்பட்டு கசங்குகின்றது.

தேன்துளிகள் சொட்டுச் சொட்டாக மண்ணில் சிந்திக் கொண்டிருக்கின்றன.

**வீரகேசரி வாரமஞ்சரி:**
**30.09.1973**

# அறிஞர் ~~அதிபர்~~ ஒருவரின் சமூகநலப் ~~கூரிய~~ பார்வையில்

கனடா - நோர்த் யோர்க் கல்விச்சபை பல்கலை ஆலோசகர் திரு பொ.கனகசபாபதி அவர்களின் கட்டுரைகளில் ஒரு பத்தின் தொகுப்பாக அதிபர் ஒருவரின் கூரிய பார்வையில் எனும் நூல் வெளிவந்துள்ளது. இலண்டன் - பாரிஸ் மகாஜன பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து, தமது முன்னாள் அதிபரின் மணிவிழா நினைவாக இந்நூலினை வெளியிட்டு இருக்கின்றனர். இதன் வெளியீட்டு விழா யூலைமாத இறுதியில் பாரிசில் இடம்பெற்றது. இங்கு இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் மட்டுமல்லாது, அறிவுத்தேடல் உடைய பலரும் கூடி இருந்தனர். குறிப்பிட்ட நேரத்துக்கு ஒன்றை ஆரம்பிப்பது என்பது கடினமான விடயம். இதை தங்கள்கூடுகைகளில் எப்போதும் செய்து வருவது மகாஜனர்களின் சிறப்பான கடைப்பிடிப்புக்களில் ஒன்று.

நூல் வெளியீட்டு விழாக் கூட்டம் திரு.யோ. சிவலிங்கம் தலைமையில் நடந்தது. வரவேற்புரையைத் தொடர்ந்து நூலைப்பற்றிய ஓர் கருத்துரையை சி.மனோகரன் வழங்கினார். பிள்ளை வளர்ப்பு, வெளிநாட்டினர் நடத்தை பற்றியும் குறிப்பிட்ட இவர் நூல் பற்றிய சில ஐயங்களை எழுப்பி, ஆசிரியரின் பதில்களுக்கு வழிவிட்டு அமர்ந்தார். நூல் எழுந்ததிற்கான காரணங்களையும், சபையோரின் கேள்விகளுக்கும், ஐயங்களுக்கும் நடைமுறை எடுத்துக் காட்டுக்களை நகைச்சுவை ததும்பக்கூறி, புதிய சில சமூகவியல், உளவியல் கருத்துக்களையும் சொல்லி நூலாசிரியர் - அதிபர் பேசிய பேச்சு உரு தெளிவுரையாக இருந்தது.

தமிழ்ப்பண்பாடு, மேற்கத்தியப் பண்பாடு ஆகியவற்றின் முரண்பாடுகளின் விளைவே இந்நூல். நாம் இருப்பதால்; நான் இருக்கிறேன். என்பதை தமிழ்ப் பண்பாடும், நான் இருப்பதால் நாம் இருக்கிறோம் என்பதை மேற்குப் பண்பாடும் வலியுறுத்துகின்றன. அவரவர் பண்பாடு அவரவருக்கு உயர்ந்தது. நமது பிள்ளைகள் நாம் குடியேறிய நாடுகளில் வாழும் போது பன்மைப் பண்பாடு முறையிலே வாழ்வது தவிர்க்க முடியாது. இந்நூல் பெற்றோர்களுக்கு ஒரு நல்ல நடைமுறை வழிகாட்டி எனவும் நூல்பற்றிய தனது கருத்துரையில் ச.சச்சிதானந்தம் தெரிவித்தார்.

பிள்ளையினது வினாக்களுக்குத் தந்தை தந்த விடையில் தெளிவு இருந்த அதே சமயம் கொச்சையில்லாமல் அமையுமாயின் பிள்ளை புரிந்து கொள்கின்ற அதே சமயத்தில், அருவருப்பும் அடையமாட்டாது. இங்கு தந்தை விளக்கும் சாதுரியம், தகுந்த சொற்களைத் தெரிவு செய்யும் லாவகம் பிள்ளையின் பாலியல் அறிவை வளர்ப்பதற்கு அவசியமாகின்றது....

### பாலியற் கல்வியிற் பெற்றோர்பங்கு

குறிப்பு: இந் நூலாசிரியரின் கருத்து பெற்றோர்களுக்கு ஓர் நல் ஆலோசனை, ஐந்து, ஆறு வயது கழியும் போது பிள்ளைகள் பாலியல் சம்பந்தமான கேள்விகளை, சந்தேகங்களை கேட்பார்கள். இது அந்த வயதுப் பிள்ளையின் இயல்பு. இதற்கு சரியான விளக்கம் பிள்ளைக்கு புரியத்தக்கவாறு விளக்க வேண்டும். இதே ஒத்த கருத்துடன் ஒவ்வொரு நாட்டிலும் நூல்கள் வெளிவருவது சாதாரணமான விடயம். இக்கருத்தை விளக்க இருபது வருடங்களுக்கு முன்னரே How to tell to my Child என்னும் திரைப்படம் வெளிவந்திருந்தது. Sais tu commment naissent les enfants? [G.Fagerstriom, G.Hansson] என்னும் நூல் 5, 7 வயதுப் பிள்ளைகள் உடைய பெற்றோருக்கு என எழுதப்பட்டுள்ளது. இன்னும் நிறைய நூல்கள் உள்ளன. இத்திரைப்படமும் சரி, இவ்வகையான நூல்களும் சரி, பாலியற் கல்வியில் முக்கியத்துவத்தையே விளக்குகின்றன. இதனையே சொந்த உணர்வில் கட்டுரை எழுதி இருக்கிறார். இது போன்ற ஆய்வை எழுத எல்லோரும் துணிய மாட்டார்கள். இதன் அறிவியல் கருத்தை சமூகத்துக்கு தெரியச் செய்வது அறிஞர்களின் சமூகவியல் வல்லுனர்களின் கடமை.

வீட்டில் உள்ள பெரியவர்களின் நடத்தை சிறார்களின் குறைநலன்களை அதிகம் பாதித்தல் யாதார்த்தமான உண்மை. எனவே வீட்டில் உள்ளோரின் சச்சரவு, சல்லாபம், சரசம் அங்கே உள்ள சிறார்களைத் தொற்றிக் கொள்ளாதிருக்க வேண்டுமாயின் பெரியவர்கள் ஒழுங்காக, கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்வது அவசியம்.

### இன்றைய இளைஞர்கள் கட்டுப்பாடு அற்றவர்களா ?

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிணக்குகளுக்கு எவ்வாறு நடைமுறைத் தீர்வு காணலாம்? அவ்வாறான பிரச்சினைகளை எவ்வாறு அணுகவேண்டும்? என்பவற்றை அறிவு ரீதியாக நடைமுறையில் ஆராய்கிறது. இந் நூலின் கண் உள்ள பத்துக் கட்டுரைகள்.

இக் கட்டுரைகள் எல்லாவற்றினதும் இலக்கு சமூகநலப் பார்வையிலேயே நோக்கப்பட்டிருக்கிறது. பெற்றோரான, பெற்றோராகும் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையின் அடிப்படையை துல்லியமாக, நயமாக இலகு மொழியில் எடுத்துரைக்கிறார் நூலாசிரியர். இவரின் அணுகுமுறை புதிய மாற்றங்களையும் தேவைகளையும் அவசியப்படுத்தி நிற்கிறது. ஒவ்வொரு கட்டுரைகளிலும் சமூகவியல், பாலியல், உளவியல் முதலான அறிவியல் விளக்கங்களை யாவருக்கும் புரியும் மொழியில் அமைத்திருக்கிறார் பல்நூலறிஞரான கனகசபாபதி அவர்கள்.

ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராய்கிற போது, நமது பாரம்பரிய குடும்ப அமைப்பை, பிள்ளை வளர்ப்பு முறையினை மேற்குநாட்டு (கனடா) பண்பாட்டியல் கூறுகளுடன் ஒப்பிடுகிறார். இவ்வாறான ஒப்பாய்வுகளால் பிணக்குகளின் அடித்தளத்தை விளங்கிக் கொள்ள முடிகிறது.

நமது குடும்ப அமைப்பு முறை - விரிவுபட்ட குடும்பம் Extended family

மேற்கத்திய குடும்ப முறை - கருவூலக் குடும்பம் Nuclear family தலைமுறை இடைவெளி

நமது நாட்டு கல்வி முறை - ஆசிரியர்மைய, வகுப்புமைய, முயற்சி மையக் கல்வி.

மேற்கு நாட்டு கல்விமுறை - பிள்ளைமைய, செயற்திறன் - அக்கறை மையக் கல்வி - கிழக்கின் இலட்சியங்களும் மேற்கின் விழுமியங்களும்.

நமது சமூக அங்கீகாரம் - பிள்ளைகளைத் திருத்துவதற்கு ஓரளவு வன்முறை உபயோகிப்பதை அங்கீகரிக்கிறது.

மேலைநாட்டுச் சட்டம் - பிள்ளையின் மேல் வன்முறை பிரயோகிப்பது சட்டப்படி குற்றம்.

பிள்ளைகளைத் தாக்குவது வன்முறையே.

### பெற்றோர்கள் எப்படி இருக்க வேண்டும் !

இளைஞர் இயல்பும் பெற்றோர் நடத்தையும்.

நற்பண்புகள்...., இது அவரவர் மனப்பான்மையையும், வளர்ப்பு விதத்திலேயேயும் தங்கியுள்ளது. எமது பிள்ளைகளின் நண்பர்கள் பற்றிய ஒரு கணிப்பினை நாம் எடுத்தே தீரவேண்டும்.

### பிள்ளைகளும் கெட்ட வார்த்தைகளும்

எமது பிள்ளைகளின் நடத்தையும் தீர்மானிக்கப்படுவதில் தாய் தந்தையருடன் அவர்களுக்குரிய உறவினளவு முக்கியத்துவம் வாய்ந்தாகும், பிள்ளையுடன் சேர்ந்து விளையாட வேண்டும்.... வேண்டும், பொறுமையாகப் பதில்கூறுவதுடன், அவரின் சாதுரியத்தை மெச்ச வேண்டும். அவரின் சுயமதிப்பை உயர்த்தக்கூடிய வழிமுறைகளை கையாளவேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளுக்கு முன்மாதிரி:

கூறப்படும் நடைமுறைத் தத்துவங்கள்; வரைவிலக்கணங்கள், உளவியல் நடத்தைகள்.

தனது நடத்தை, ஆற்றல், தன் உடல் பற்றிய அறிவு ஆகியவற்றை மையமாக வைத்து ஒருவருக்கு எழும் எண்ணங்கள், மனோபாவங்கள், தீர்வுகள் முழுவதுமே சுய கணிப்பு எனப்படும்.

குழந்தைப்பராயத்திலே பிள்ளைகள் தம் அடிப்படைத் தேவைகளைப் பெற்றோரிடமிருந்து பெறுகின்றனர். அவர்கள் கட்டிளமைப்பருவம் அன்மிக்கின்ற போது அவர்களது தேவைகள் பலப்பல. இவற்றினை எந்த ஒரு பெற்றோரும் தாமாகவே தனித்து வழங்குதல் சாத்தியமில்லை. ஆகவே கட்டிளமை வயதுடையோர் தமது தேவைகளை ஈடுசெய்ய ஒத்த வயதினரையும் நண்பர்களையும் நாடுகின்றனர். (உளவியல் பேராசிரியர் டாக்டர் Mitchel)

### தலைமுறை இடைவெளி

நாம் பொதுவாகவே மிகையான பாதுகாப்பு உணர்வுடைய பெற்றோர்கள் (Over Protective Perants) பிள்ளைகள் மேலுள்ள அபரீதமான அன்பினால் அவர்கள் எவ்வளவு வளர்ந்தாலும் அவர்களைச் சிறியவர்களாகவே எண்ணி அவர்களின் தன்மான உணர்வுக்குப் பங்கம் ஏற்படுத்திச் சிறுமைப்படுத்துகின்றோம்.

கட்டுரைகளின் வாயிலாக தரும் ஆலோசனை, கருத்துக்கள், தகவல்கள்;

**ஆலோசனை,**

செந் நெல்லா லாய செழுமுளை
மற்றுமச்
செஞ்நெல்லே யாகி விளைவதால்
அந்நெல்
வயல் நிறையக் காய்க்கும்
வளவலூர
மகனறிவு தந்தை யறிவு!
நாலடியார்

மதுக்கிண்ணத்துடன் தனது ஒத்த வயதினருடன் களியாட்டம் ஆடும் பெற்றோர் குடித்தல் கூடாது என்று பிள்ளைகளுக்கு எப்படிக் கூறமுடியும்? வாழ்ந்து காட்டுதலே முன்மாதிரி.

குறிப்பு: பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விபற்றி வழிகாட்டலாமே அன்றி நெறிப்படுத்தல் ஆகாது என இவர் கூறுவது பிள்ளை வளர்ப்பு பற்றி நூல்கள் பல எழுதிய அமெரிக்கர் டாக்டர் Thomas Gordon Efficacious Parents எனும் நூலில் பெற்றோர்கள் மனிதர்களே அன்றி கடவுள்கள் அல்ல. எனக் கூறுவதை ஒத்திருக்கிறது.

பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகாமல் தடுப்பதற்கு அவர்கட்கு வழிவகுத்துக் கொடுத்தலே பெற்றோர்களின் தலையாய கடமை. பிள்ளைகளுக்கு மிகச் சிறுவயதிலிருந்தே படிப்படியாக பாலியல் அறிவினை புகட்டவேண்டும்.

### தகவல் பெற்றோர்வகை

சர்வதிகாரமான பெற்றோர், கீழ்ப் படியும் பெற்றோர், ஜனநாயகப் பெற்றோர்

(Authoritarian parent), (Submissive parent), (Democratic parent)

'உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி ஒவ்வொரு பத்து இளம் சிறார்களில் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்.'

பெற்றோர் வயதுவந்த பிள்ளைகள் உரையாடல்

பராமரிப்புப் பேச்சு சீராட்டுப் பேச்சு

(Maintenance talk) (Caring talk)

### கருத்து

'பிள்ளையின் தகைமைக்கு உகந்ததாக அமையாத பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள்: இது எமது சமூகத்திலுள்ள பெரிய குறைபாடு....'

'தந்தை என்கிற அந்தஸ்த்து, அதிகாரி என்ற நிலையிலிருந்து ஆலோசகர் நிலைக்கு உயர்ந்தோ அல்லது தாழ்ந்தோ மாறுதல் அவசியம்.'

'நாம் வித்தியாசமானவையை அங்கீகரிக்கத் தயக்கம் காட்டுகிறோம். நாம் பிள்ளைகளுடன் சர்ச்சைக்குரிய விடயங்களைப் பற்றி கலந்துரையாடும் போது எம்மைக் காத்துக் கொள்ளச் சாதகமான முறையிலேயே பிரச்சினையை அணுகுகிறோம்.'

### எழுத்து முடிநடை

கட்டுரைப் பொருளை புரிந்து கொள்வதற்கு இலகுவான நடையிலும், நகைச்சுவைப் பாணியிலும், கட்டுப்பாடற்ற - சுதந்திர உறவு முறையிலும் வார்த்தைகளைக் கையாளும் லாவகம் அதிபரின் தனிக்கைங்கரியம். தான் எழுதும் பொருள் வாசிப்பவனைப் போய்ச் சேரவேண்டும் எனும் நோக்கில் எழுத்தை விழுத்தி இருக்கிறார். வாக்கியத்தில் சொற்கள் பொருளின் உடனடி முக்கியத்துவத்தைப் பொறுத்து அமைந்திருக்கின்றன. (More immediate importance) மொழியியல் ரீதியில் பார்க்கும்போது சொற்கள் பொருள்தரும் அண்மையுறுப்பு வகை முறையில் (Ic analysis) இடம் பெறுகின்றன. இவர் கையாளும் சொற் தொடர்கள் படிக்கும் போது சிரிப்பை வரவழைகின்றன. குறிப்பாக 'மலசலகூட இலக்கியங்கள்', 'கோணங்கிச் சேட்டைகள்', 'ஒரு கோப்பையிலே என் உயிரிருக்கும்', போன்றவற்றை குறிப்பிடலாம். சொற்பிரயோகங்கள், ஈழத்துத் தமிழுக்கு உரியதாக ஆளப்பட்டிருக்கின்றன. கட்டுரைகளில் வரும் விகற்பம், விதந்துரைப்பு, சிலாகித்து முதலான சொற்கள் வித்தியாசமாக இருக்கின்றன. அனுபவம் என்பது ஒன்றும் அல்லாதல்லவே.

அதிபர் ஒருவரின் கூரிய பார்வையில் என்பதற்குப் பதிலாக அறிஞர் ஒருவரின் சமூகநலப்பார்வையில் என இந் நூலுக்கு பெயரிட்டு இருக்கலாம் என இதை படித்து முடித்த போது என் சிற்றறிவுக்குப் படுகிறது. (அறிஞர்; பலதுறை அறிவுடையவர். ஒரு குறிப்பிட்ட துறையில் வல்லவர்)

பெற்றோராயிருப்பது சுலபமல்ல; அது தியாகவாழ்வு

**ச.சச்சிதானந்தம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணுக்கு மை அழகு! கலியாணத்துக்கு மொய் அழகு!!

காய்க்கிற மரத்துக்குத்தான் கல்லெறி விழுமெண்டு சொல்லுறவை. எனக்கென்னெண்டால் ஒவ்வொரு கிழமையும் பேப்பர் வந்த அடுத்தநாளே ஒண்டிரண்டு பேர் தேடத்துவங்கினம். இந்தப் பத்தியை வாசிச்ச சிலபேர் ஊர் உலகத்து நடப்பை, உள்ளதை உள்ளபடிதான் எழுதியிருக்குது எண்டு மனந்திறந்து சொல்லுறவையும் இருக்கினம், அதைவிட நாங்கள் என்னவும் செய்வம், எப்பிடியும் வாழுவம் நீர் ஆர் அதைப்பற்றி பேப்பரிலை எழுதவெண்டு கேட்டு ரெலிபோனுக்குள்ளாலை ஷெல் அடிக்கிறவையும் இருக்கினம். என்ன செய்யிறது ஒவ்வொருத்தருக்கும் அவையவையின்ரை நினைப்புகளுக்கு ஏத்த மாதிரித்தானே பிரச்சினையள் இருக்கும்.

'பருப்பில்லாமல் கலியாணமோ?' எண்டு ஊரிலை கேக்கிறவை. ஆனால் இஞ்சை பருப்பு அங்கத்தையை விட நல்ல மலிவுதான். இருந்தாலும் பருப்பில்லாமல் கலியாணக் கொண்டாட்டங்கள் நடந்தாலும் நடக்கும் மொய் இல்லாமல் எந்தக் கொண்டாட்டமும் நடக்கிறதாத் தெரியேல்லை.

சமூக உறவுகளை அறுந்துபோகாமல் இப்பிடிக் கொண்டாட்டங்கள்தான் இன்னமும் பேணி வருகுதெண்டதும், அதுக்கு கலியாணம், பிறந்தநாள் விழா, விஷேசம் எண்டும் சிலது தேவைதான். அதெல்லாம் பிழையெண்டோ இல்லையெண்டால் உது சும்மா வெறும் விசர் வேலை எண்டோ நான் நினைக்கேல்லை. ஒரு நல்ல நாள் பெருநாளுக்கு கொண்டாட்டங்களுக்குப் போனால் ஒரு ஞாபகத்துக்கு அன்பளிப்புகள் குடுக்கிறது ஊர் உலகத்தில நடக்கிறதுதானே. ஆனால் நாங்கள் இந்த அன்பளிப்பு விசயத்தையும் கடன் குடுத்து பிறகு வட்டியோடை திருப்பி வாங்கிற மாதிரி ஒரு சம்பிரதாயத்தை வளர்த்துக் கொண்டெல்லே வாறம்.

ஊரிலை முந்தி பணச்சடங்குகள் (சந்தோஷம் எண்டும் சொல்லுறவை) நடக்கிறதுதான். அது ஒரு மனுசன் கொஞ்சம் தொழில் துறையில கெட்டு நொந்து போனால், பணச்சடங்கு வைக்கப்போறதா அறிவிப்பினம். இனசனத்துக்கெல்லாம் சொல்லி ஒரு சின்ன விழா நடத்துவினம். அப்ப, முந்தி அவர் மற்றவைக்கு எப்பன் எப்பனாக் குடுத்த காசெல்லாம் திருப்பி இவரிட்டை வரும். சிலபேர் வட்டியோடையும் குடுப்பினம். அதுக்குக் குடுக்கிற அழைப்பிதழிலும் 'கொண்டாட்டம் மூன்று நாட்களுக்கு நடைபெறும்' எண்டு ஒரு குறிப்பும் தவறாமல் இருக்கும். அந்த நேரத்தில உடனடியா கையில மடியில காசு இல்லையெண்டால் எங்கையாவது மாறிச்சாறியெண்டாலும் கொண்டுவந்து குடுக்கிறதுக்கு வசதியாய்த்தான் அந்த 'மூன்று நாள் கொண்டாட்டம்' எண்டு அடிக்குறிப்புப் போடுறவை எண்டு நினைக்கிறன். இப்பிடிச் சேருகிற காசில அவர் தன்ரை பிரச்சினையளை ஓரளவுக்குத் தீர்த்துப்போட வாய்ப்பிருக்கும். பிறகு, காசு போட்டவையின்ர வீட்டில இப்பிடி ஏதாவது விசேசங்கள், கொண்டாட்டங்கள் வரேக்கை மெள்ள மெள்ள அந்தக் கடனை அவர் திருப்பிப் போடுவார். இந்த முறையால காசு விசயத்தில கெட்டு நொந்துபோற மனுசர் எப்பனெண்டாலும் தலைநிமிர வசதி இருந்தது.

## ஆருக்குச் சொல்லி அழ?

முஸ்லீம் ஆக்களும் தங்களோடை சேர்ந்த ஒருத்தர் யாவாரத்தில நொடிச்சுப் போனால் எல்லாரும் சேர்ந்து காசு குடுத்து அவரைத் தூக்கி விடுவினம். அவர் பிறகு அதைக் குடுக்கிற பழக்கம் இப்பவும் இருக்குது. ஆனால் உந்தப் பணச் சடங்கு விசயத்தால தெருவுக்கு இறங்கி சண்டை பிடிச்ச விசயமெல்லாம் அப்ப ஊரிலை கன இடத்தில நடந்திருக்குது.

**"இந்த வீட்டுச் சங்காத்தமே இனிமேல் எங்களுக்கு வேண்டாம். நடவுங்கோடா பொடியள்..." எண்டு திட்டித் தீர்த்துப்போட்டுத் திரும்பிப் போட்டா.**

தமிழன் போற இடமெல்லாம் தன்ரை கலாச்சாரத்தை (?) விதை விதைச்சு தண்ணியூத்தி வளர்த்துக் கொண்டிருக்கிறதில இந்தக் குடுக்கல் வாங்கல் கலாச்சாரமும் இப்ப வளர்ந்து மரமாகி விழுதெறியத் துவங்கியிட்டுது. இஞ்சையும் நடைமுறையைப் பார்த்தால் எந்தக் கொண்டாட்டத்திலையும் உண்ணாணை நாங்கள் பணச்சடங்குதான் செய்யிறம். ஆனால் பணச்சடங்கு எண்டு சொல்ல வெக்கப்பட்டுத்தான் வேற வேற போர்வையைப் போர்த்திக் கொண்டு குடுத்ததை திருப்பி வசூல் பண்ணுகிறம். திரும்பி வராவிட்டால் சண்டைக்குமெல்லே போக வெளிக்கிடுகிறம்.

அங்கை கனகாலத்துக்கு முந்தி பக்கத்து வீட்டில ஒரு நாள் காலங்காத்தாலை ஆரையோ பேசிச்சத்தம் கேட்டுது. என்ன ஏதெண்டு படலையைத் திறந்து கொண்டு தெருவுக்குப் போய் பார்த்தால், அங்கையிருந்து ஒரு பதினைஞ்சு கட்டை தள்ளி இருக்கிற இடத்தில இருந்து ஒரு மனிசியும் இரண்டு பொடியளும் வந்து 'ஆச்சோ... போச்சோ...' எண்டு நல்லா மங்களம் பாடிக் கொண்டிருந்தினம். அவையள் முந்தி இவையின்ரை வீட்டு விசேசத்துக்கு அங்கையிருந்து வந்து ஒரு பதினைஞ்சு பணம் எழுதினவையாம். இப்ப அவை சொல்லி இவை போகேல்லையாம். போஸ்ற் காட் எழுதிப் போட்டும் பதிலில்லை எண்டதால பஞ்சி அலுப்பைப் பாராமல் நேரில வந்து 'நீங்களெல்லாம் ஒரு மனிசரோ?' எண்டு இவைக்கு நல்ல மண்டகப்படி நடந்துகொண்டிருந்தது. இந்தச் சனம் உண்மையில காசுக் கஷ்டத்திலதான் போகேல்லை. கூனிக்குறுகிப் போய் அழாக்குறையா நிண்டு கையைப் பிசைஞ்சுகொண்டு நிண்டுதுகள். வந்தவாவும் நல்ல சூர்ப்பனகைதான். "இந்த வீட்டுச் சங்காத்தமே இனிமேல் எங்களுக்கு வேண்டாம். நடவுங்கோடா பொடியள்..." எண்டு திட்டித் தீர்த்துப்போட்டுத் திரும்பிப் போட்டா.

இப்ப கிட்டடியிலை இஞ்சை நடந்த ஒரு விசயத்தைக் கேள்விப்படேக்குள்ள எனக்கு உடனடியா அந்தச் சம்பவம்தான் பொறித்தட்டின மாதிரி ஞாபகத்துக்கு வந்தது. கலியாணங்கள் அமளியா நடந்த ஒரு மாதம். இந்தக் குடும்பத்துக்கும் அழைப்பு வந்திருக்கு. அதுவும் நேரிலை வந்திருக்குது. அதைவிட இரண்டு வருசத்துக்கு முதல் இவை நடத்தின விசேசத்துக்கு அவை வந்து குறிப்பிட்ட தொகை காசு மொய் எழுதியிருக்கினம். எழுதாட்டிலும் என்வலப்பில வைச்சு மொய் எழுதி, வீடியோ கமரா பிடிக்கேக்குள்ள அந்த வெளிச்சத்தில எல்லாரையும் சாட்சி வைச்சுத்தான் குடுத்திருக்கினம். இவையும் கை நீட்டி வாங்கியாச்சு. 'அன்பளிப்பு- ஒரு சந்தோசத்துக்குக் குடுக்கிறது' அப்பிடித்தான் வெளியிலை சொல்லுறனாங்கள். ஆனால் அது கடன்தான். குடுத்தவைக்கும் அது தெரியும் - வாங்கினவைக்கும் அது விளங்கும். பிறகு அவையின்ரை விசேசத்துக்கு இவையால போக முடியேல்லை. அந்தண்டைக்கு வேறையும் இரண்டு கலியாண வீடு. (ஒரே நாளிலை மூண்டு கலியாண வீடு வைக்கிறவை, 'சிமிக்' சம்பளக்காரரை கொஞ்சமும் யோசிக்கிறதே இல்லை. இனிமேலெண்டாலும் அதைக் கொஞ்சம் கவனிக்கிறது நல்லது.) என்னவோ ஏதோ இவர் அவற்றை வீட்டு விசேசத்துக்குப் போகேல்லை. எல்லாம் நடந்து முடிஞ்சு கணக்குக் கொப்பியைப் பிரட்டிப் பிரட்டிப் பார்த்திருக்கினம். குறிப்பிட்ட இவரிட்டையிருந்து இன்னும் வர வேண்டிய தொகை திரும்பி வரேல்லை. உடனே ரெலிபோன் எடுத்து, 'நான் உனக்கு இவ்வளவு கொண்டுவந்து தந்தன். இப்ப நான் வீட்டுக்கு வந்து சொல்லியும் நீ தரேல்லை. எனக்கு உடனடியாகத் தரவேணும்' எண்டு சத்தம் போட்டு சண்டைக்குப் போயிருக்கிறார். பிறகு இவரும் கடனை உடனைப்பட்டு கொண்டுபோய்க் குடுத்தாரெண்டு வையுங்கோவன்.

இதையெல்லாம் பார்க்க, கேள்விப்பட 'பணம் பந்தியிலே; குணம் குப்பையிலே' எண்டது நூற்றுக்கு நூறு சரி எண்டுதான் நினைக்கச் சொல்லுது.

மற்றவையின்ரை கஷ்ட நஷ்டத்தை அறியாமல், குடுத்ததை திருப்பித் தரேல்லை எண்டு சண்டைக்குப் போறதும், கோவமாப் பேசிறதும் மனுசத்தன்மையான செயலாகத் தெரியேல்லை எண்டது அடியேனின் தாழ்மையான அபிப்பிராயம். இப்பிடியான விழாக்களிலை பொருள் அன்பளிப்பைவிட காசாக் குடுக்கிறது ஒருத்த்ரை பிரச்சினைகளில இருந்து விடுவிச்சு வாழ்க்கையில மேம்படுத்தி விடத்தான் எண்டதை மறந்து, இஞ்சத்தைய வங்கிகளிலை கடன் காசைக் கட்டாமல் விட்டால் வீட்டுக்குள்ள வந்து சாமான் சக்கட்டைத் தூக்கிக் கொண்டு போறதுபோல நிலமை வந்தாலும் ஆச்சரியப்படுகிறதுக்கில்லை. அதுசரி, உண்ணிக்குத் தெரியுமோ எருதின்ரை வேதனை எண்டு சும்மாவே சொல்லுறவை.

**ஆசைத்தம்பி**

KANNA Imports & Exports Ltd.
( New Ambiha Supermarket)
198 Archway road, London N6 5B13 (Archway கோவிலுக்கு அருகாமையில்)
இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான, உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மலிவாகவும் விரைவாகவும் உங்கள் வியாபார நிலையங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும்) விநியோகிக்கப்படும்
தொடர்புகளுக்கு: Tel: & Fax: 0181-348 3356
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பொஸ்னியாவுக்கான அமெரிக்க ஆயுத விநியோகம் உத்தியோக பூர்வமாக ஆரம்பம்

சேர்பியர்களின் ஆயுதக் கிடங்குகள் கண்டறியப்பட்டு அவை நேட்டோ படையணிகளால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை அமெரிக்கா, தனியார் விமானமொன்றில் பொஸ்னிய இஸ்லாமியர்களுக்கும், குரோசியர்களுக்கும் பெருமளவு ஆயுதங்களை வழங்கியுள்ளது.

பொஸ்னிய இஸ்லாமியர்களுக்கும் குரோசியர்களுக்கும் அமெரிக்கா விநியோகிக்க உள்ள 42 தொன் ஆயுத விநியோகத்தில் முதற் பகுதி கடந்த 29.08.96 வியாழனன்று பொஸ்னியா வந்தடைந்துள்ளதாக அமெரிக்க அரசின் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் திட்டத்தின் படி 9 கோடியே 84 இலட்சம் டொலர் பெறுமதி வாய்ந்த ஆயுதங்கள் அமெரிக்காவால் விநியோகிக்கப்பட உள்ளதாக மேலும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

46 ஆயிரம் துப்பாக்கிகள், 1000 தானியங்கித் துப்பாக்கிள், 45 போர்த் டாங்கிகள், 80 இராணுவ வாகனங்கள், 840 டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், 15 இராணுவ உலங்கு வானூர்திகள் என்பன இத்திட்டத்தின்படி பொஸ்னிய இஸ்லாமியர்களுக்கும் குரோசியர்களுக்கும் விநியோக்கிக்கப்பட உள்ளன.

ஐரோப்பிய பிரதேசத்தில் அமெரிக்கா மேற்கொள்ளும் இவ்விராணுவ மயப்படுத்தல் திட்டத்தை ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்பதோடு இவ்வாயுத விநியோகம் முடிவடைந்தவுடன் அழிந்து போயிருக்கும் பொஸ்னியாவில் மீண்டும் போர் வெடிக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவித்துள்ளன.

சேர்பியர்களுடன் பொஸ்னியர்கள் ஆயுதச் சமநிலையை அடைந்தால் மீண்டும் போர் வெடிக்காது என அமெரிக்க இராஜ தந்திரிகள் கருதுகின்றனர்.


Military Professional Resources Inc. எனப்படும் அமெரிக்க நிறுவனம் ஒன்று ஏற்கனவே பொஸ்னியாவில் நிலை கொண்டுள்ளதாகவும் இராணுவப் பயிற்சி, ஆயுத விநியோகம் தொடர்பாக பலகோடி டொலர் பெறுமதியான ஒப்பந்தங்களை இவர்கள் செய்துள்ளார்கள் என மேலும் தெரிய வருகின்றது.

## தென்கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு மரண தண்டனை

கடந்த 26.08.96 திங்கட்கிழமை தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி Chun Doo Hwan இற்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிமன்றம், அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஜனாதிபதி Roh Tae Woo இற்கு 22 1/2 வருடச் சிறைத் தண்டனையும் விதித்துள்ளது. இவர்கள் இருவரும் இராணுவ ஜெனரல்கள் ஆவர்.

இராணுவக் கிளர்ச்சி, ஊழல், நாட்டுத் துரோகம் ஆகிய குற்றச் சாட்டுகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டதைத் தொடர்ந்தே இவர்களுக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1979 ஆண்டு முன்னாள் ஜனாதிபதி Park Chung-இன் ஆட்சியைக் கவிழ்த்து கொலை செய்ததற்காகவே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக மேலும் அத் தீர்ப்பு தெரிவித்துள்ளது.



தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகள்
Roh Tae Woo (இடம்), Chun Doo Hwan (வலம்)

## போலந்தில் கருத்தடைக்கு மீண்டும் அனுமதி

போலந்து நாட்டில் கருத்தடைக்கு அனுமதியளிக்கும் சட்ட மூலம் கடந்த 30.08.96 வெள்ளியன்று பாராளுமன்றத்தில் நிறைவேறியது. தீவிர கத்தோலிக்க மதப் பிரிவினரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இச் சட்டம் நிறைவேறியுள்ளது. சட்ட மூலத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் தீவிர வலதுசாரிகள் பாராளுமன்றத்தை பகிஸ்கரித்து வெளி நடப்புச் செய்தனர்.

சட்ட மூலத்திற்கு ஆதரவாக 208 வாக்குகளும் எதிராக 61 வாக்குகளும் கிடைத்தன. புதிய சட்டத்தின்படி தனிப்பட்ட மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் ஒரு பெண் கருத்தரித்து 12 ஆவது வாரம் வரை கருச் சிதைப்பு செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க மதச் சபைகள் இதையிட்டு வெளியிட்ட கண்டன அறிக்கையில் சமதர்மக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இருந்த இச் சட்டம் மீண்டும் அமுலுக்கு வருவது சமதர்மக் கட்சிக்காரர்கள் மீண்டும் உயிர் பெறுவதைக் குறிக்கின்றது எனத் தெரிவித்துள்ளனர். போலந்து நாட்டில் பிறந்த பாப்பரசர் ஜோன் போல் II இற்கு இச்சட்டம் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதாம். ஆயிரம் ஆயிரம் உயிர்கள் அநியாயமாகக் கொல்லப்படப் போகின்றன என பாப்பரசர் கவலை தெரிவித்துள்ளார்.

தெருவில் அனாதரவாகக் குழந்தைகள் விடப்படுவதைத் தடுக்கவும், பெண்களின் உரிமையை உறுதிப்படுத்தவும் இச் சட்டம் அவசியம் என போலந்து அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## இஸ்ரேலில் “முட்டாள்களின்” அரசாங்கம் பாராளுமன்றத்தில் அரபாத் சீற்றம்

கடந்த 28.08.96 புதனன்று பாலஸ்தீனப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தனது பொறுமையை இழந்தவராக இஸ்ரேலில் “முட்டாள்களின்” ஆட்சி நிலவுவதாகத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் பேசுகையில் கடந்த ஜூன் மாதம் பதவிக்கு வந்த வலது சாரிக் கட்சியான லீக் கூட் கட்சியும் அதன் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவும் பாலஸ்தீனர்கள் மேல் போர்ப் பிரகடனம் செய்துள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளார். பாலஸ்தீனர்களின் நிலங்களில் குடியேற்றத் திட்டங்களை இஸ்ரேலிய அரசு தீவிரப்படுத்தியுள்ளதோடு, சமாதானப் பேச்சு வார்த்தையை கைவிட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் பாலஸ்தீனத் தலைவரின் கோரிக்கையின் பேரில் கடந்த 29.08.96 வியாழன் அன்று கதவடைப்பு போராட்டம் ஒன்றும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது. ஜெருசலேம் நகரில் உள்ள Aqsa பள்ளிவாசலில் பாலஸ்தீனர்களை கடந்த 30.08.96 வெள்ளியன்று பிரார்த்தனைக்குக் கூடுமாறு அரபாத் விடுத்த கோரிக்கையை இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் முறியடித்துள்ளனர். ஜெருசலேம் நகருக்குள் செல்ல பாலஸ்தீனர்களுக்கு தடை விதித்த இஸ்ரேலியர்கள் ஆயிரக் கணக்கான படையினரைக் குவித்து பள்ளிவாசலில் பாலஸ்தீனர்கள் பிரார்த்தனைக்குக் கூட முடியாதவாறு தடுத்ததினால் ஒரு இலட்சம் பேர் கூடுவர் என எதிர்பார்க்கப்பட்ட பிரார்த்தனையில் 15 ஆயிரம் பேர் மட்டுமே கூடினர்.

## அமெரிக்க கறுப்பினத்தவர்களுக்கு கடாபி பண உதவி

அமெரிக்காவில் வாழும் கறுப்பினத்தவர்களின் நலனுக்காக 25 இலட்சம் டொலர் பணத்தை அன்பளிப்புச் செய்வதாக லிபியத் தலைவர் கேணல் கடாபி அறிவித்துள்ளார்.

லிபியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் அமெரிக்க கறுப்பினத்தவர்களின் தலைவரான லூயி பராஹானிடம் இத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

லிபியாவின் இந்த அன்பளிப்பை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்த பரராஹான் தாம் இப் பணத்தை எடுத்துச் செல்வதற்கு அமெரிக்காவின் அனுமதியைக் கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இப் பணத்தை அமெரிக்காவுக்குள் எடுத்து வர அனுமதிக்க முடியாது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் வாழும் 20 இலட்சம் கறுப்பினக் குடும்பங்களின் பேரால் தான் விடுத்த கோரிக்கையை அமெரிக்க அரசு நிராகரிக்கும் பட்சத்தில் நாடு தழுவிய பாரிய போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யப் போவதாக பராஹான் தெரிவித்துள்ளார்.

கேர்ணல் கடாபி ஒரு பயங்கரவாதி என்றும் அவரது நிதி உதவியை தாம் அனுமதிக்க முடியாதென்றும் அமெரிக்க அதிகாரிகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் அமெரிக்காவில் வாழும் கறுப்பின மக்களின் உரிமைகள் கோரும் பாரிய ஊர்வலம் ஒன்றை திரு. பராஹான் ஏற்பாடு செய்திருந்தார். இவ்வூர்வலத்தில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான கறுப்பின மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அண்மையில் அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டுள்ள சமூக சீர்திருத்தச் சட்டம் பல கறுப்பின சிறுவர்களின் கல்வியுரிமையை மறுக்கும் என அஞ்சப்படுகின்றது.

## பானி சதாரை எம்மிடம் ஒப்படையுங்கள் ஜேர்மனியிடம் ஈரான் கோரிக்கை


ஈரானின் முன்னாள் ஜனாதிபதியை கைது செய்து தம்மிடம் ஒப்படைக்குமாறு ஜேர்மனியிடம் ஈரான் உத்தியோக பூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈரானிய அரசு சர்வதேச பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவதாக பேர்லினில் உள்ள நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து ஈரானுக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான சட்ட ரீதியான மோதல்கள் புத்துயிர் பெற்றுள்ளன.

1981 ஆம் ஆண்டு ஈரானிய விமானம் ஒன்றைக் கடத்தி பிரான்சில் அரசியல் அடைக்கலம் பெற்ற பானி சதாரைக் கைது செய்து தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரான்சிடம் ஈரான் விடுத்த கோரிக்கையை பிரான்ஸ் ஏற்கனவே நிராகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகனை விடுதலை செய்யுங்கள் சந்தேக நபரின் தாய் கண்ணீர்



ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அத்திலாந்தாவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ள றிச்சார்ட் ஜெவெல் குற்றவாளியாகக் காணப்படாத அதே வேளை தொடர்ந்து சந்தேக நபராக இருப்பது தமக்கு வருத்தமளிப்பதாகவும் சரியான ஆதாரம் இல்லாமல் தனது மகன் மீது சாட்டப்பட்டுள்ள இக் குற்றச்சாட்டை அமெரிக்க பொலிசார் வாபஸ்பெற வேண்டும் எனவும் அவர் குற்றவாளி அல்ல என்பதை உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவரின் தாய் கண்ணீர் விட்டழுதபடி பத்திரிகையாளர் முன் பேட்டியளித்துள்ளார்.

# மொறோ போராளிகள் சமாதான ஒப்பந்தம் 26 வருட போராட்டத்திற்கு முடிவு?

கடந்த 26 வருடங்களாக நடைபெற்று வந்த பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மொறோ போராளிகளின் போராட்டம் செப்டம்பர் 2 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது. மின்டானோ தீவில் உள்ள மக்களுக்காக தனிநாட்டுப் போராட்டம் நடாத்தி வந்த போராளிகள் தமது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு தமது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்துக்கு உடன்பட்டுள்ளனர்.

கடந்த 26 வருடங்களாக 1 இலட்சத்துக்கும் அதிகமானோரை பலிகொண்ட இப் போர் முடிவுக்கு வருவதற்கு சுயநலமற்ற பேச்சு வார்த்தை தான் காரணம் என பிலிப்பை-ன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸ் தெரிவித்துள்ளார். பெரும் செல்வத்துடன் அமெரிக்காவுக்குத் தப்பியோடி அங்கு மரணமான பேர்டின்ட் மார்க்கோஸ் காலத்தில் உருவான இந்த மின்டானோ மக்களின் போராட்டம் முடிவுக்கு வந்ததைக் குறிக்குமுகமாக மின்டானோ தீவில் உள்ள Lano del Sur, Lano del Norte பள்ளிவாசல் பகுதிகளில் பாரிய விழாக்கள் நடைபெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கைதிகளின் விடுதலை தாமதம்

பிரித்தானிய சிறைச் சாலைகளில் பல்லாயிரக் கணக்கானோர் தண்டனைக் காலத்திற்கு அதிகமாக சிறை வைக்கப்பட்டுள்ளனர் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. புல ஆயிரக்கணக்கானோர் திடீரென விடுதலை செய்யப்படலாம் என அஞ்சப்பட்ட வேளையில் அரச சுற்றறிக்கை ஒன்றின் மூலம் அவர்களது விடுதலை தாமதப்படுத்தப்படுகின்றது. சிறையில் மேலதிகமாகக் கழித்த காலத்திற்கு நஷ்ட ஈடு வழங்கப்பட உள்ளது.

# கல்லால் அடித்து மண்டையைப் பிளந்து கொன்றேன் அதற்காக வருந்தவில்லை

## - இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரி -

அந்த பாலஸ்தீனக் கைதிகள் இருவரையும் மண்டையில் கல்லால் அடித்து மண்டை ஓட்டைப் பிளந்து கொன்றோம் அதற்காக நான் வருந்தவில்லை இவ்வாறு தெரிவித்துள்ளார் இஸ்ரேலிய சின் பெத் எனப்படும் பாதுகாப்புப் படையில் கடமையாற்றிய Ehoud Yatom என்ற அதிகாரி.

இது பற்றி அவர் பத்திரிகையாளர் மத்தியில் மேலும் தெரிவிக்கையில் 1984 ஆம் ஆண்டு தாம் கைது செய்த இரு பாலஸ்தீனர்களை கொன்று விடுமாறு தனது உயர் அதிகாரிகள் பணித்ததன் பேரில் தான் இந்தக் கொலையைச் செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் பதட்டம் அடை-ந்த இஸ்ரேலிய அரசு மேலும் பல பாதுகாப்பு அதிகாரிகள் இத்தகைய திடுக்கிடும் தகவல்களை வெளியிடுவதை சட்ட விரோதமாக்க வழி செய்யும் சட்டமொன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவர ஆலோசிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கானிஸ்தானில் சினிமாவுக்கும் மேற்கத்தைய இசைக்கும் தடை

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய மத விதிக்கமைந்த திரைப் படங்களை மட்டும் வெளியிடலாம் எனவும், இஸ்லாமிய மத விதிகளுக்கமையாத இசைத்தட்டுக்களை ஒலிக்க கூடாது என்றும் ஆப்கான் அரச அறிவித்தல் தெரிவிக்கின்றது. ஜூலை மாத இறுதியில் பதவிக்கு வந்த பிரதமர் குல்படின் கெக்மத்தியார் விடுத்த இவ் அறிவித்தலைத் தொடர்ந்து அனைத்து சினிமாக் கொட்டகைகளும் மூடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# தூக்கிலிடப்பட்டவர் நிரபராதி எனத் தீர்ப்பு

நாஜிப் படைகளால் தேசத் துரோகக் குற்றத்திற்காக குற்றவாளியெனக் காணப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட தத்துவவியலாளர் Dietrich Bonhoeffer தேசத்துரோகக் குற்றவாளி அல்ல எனவும் தேசத்தின் மீது கொண்ட பற்றினாலேயே அவர் சர்வாதிகாரி ஹிட்லருக்கு எதிராக கிள்ர்ச்சி செய்தார் எனவும் பேர்லின் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகளின் பின் இத் தீர்ப்பு வெளியாகியுள்ளது.

## செச்சேனியாவில் நிரந்தர அமைதி

செச்சேனிய போருக்கு நிரந்தர முடிவுகாணும் நோக்குடன் ஜெனரெல் லெபெட் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன. ரஷ்யப் படைகள் முற்றாக வாபஸ் பெறப்படுகின்றன. செசேனிய மக்கள் வீதியெங்கும் மகிழ்ச்சி ஆரவாத்தில் காணப்படுகின்றனர். எனினும் செச்சேனியாவின் அரசியல் அந்தஸ்து தொடர்பான முடிவுகள் 2001-ம் ஆண்டுவரை பிற்போடப்பட்டுள்ளது.

# வாரக் குறிப்பு

**25.08.96 ஞாயிற்றுக்கிழமை**

- பாகிஸ்தான் ஏவுகணை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்க செய்திகள் குற்றம் சாட்டியுள்ளன.
- இஸ்ரேலிய ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் பிரதமர் நெட்டன்யாகு பாலஸ்தீனத் தலைவரைச் சந்திக்கத் தவறும் பட்சத்தில் தான் பாலஸ்தீனத் தலைவரைச் சந்தித்து சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக ஆராய உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
- ரஷ்யாவைச் சேர்ந்த நீச்சல் வீரர் பொப்போவ் தெருச் சண்டையில் கத்திக் குத்துக்குள்ளாகியுள்ளார். இவர் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் பெற்றவர்.

**26.08.96 திங்கட்கிழமை.**

- சூடானிய விமானம் ஒன்று ஈராக்கிய பிரசைகளால் கடத்தப்பட்டு பிரித்தானியாவில் தரையிறங்கியுள்ளது. விமானத்தைக் கடத்தியவர்கள் ஈராக்கியர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பாகிஸ்தானுக்கு 140 கோடி டொலர் பெறுமதியான அமெரிக்க ஆயுதங்கள் வந்தடைந்தன.
- இமய மலையில் உள்ள Pahalgam நகரில் உள்ள சிவஸ்தலத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்ட ஒரு இலட்சத்துக்கு அதிகமானோர் கடும் குளிரிலும் பனியிலும் அகப்பட்டனர். இதில் 128 பேர் பலி. பனிப் புகை காரணமாக மீட்பு வேலைகள் தாமதமாகின.
- ஜப்பானிய பிரபல வர்த்தகரான Yuhei ஓச் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.
- பீக்கிங் பல்கலைக் கழக முன்னாள் தலைவர் Wu Shuqing விடுத்துள்ள அறிக்கையில் சீனாவின் ஸ்திரத்தை சீர்குலைக்க மேற்குலகம் எடுக்கும் நடவடிக்கைகளை முறியடிக்க மார்க்சிச அணுகுமுறையை சீனா கடைப்பிடிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.
- பிரான்சின் பிரபல வர்தகரும் அரசியில்வாதியுமான பேர்னார்ட் தப்பி சினிமாப் படம் ஒன்று வெளியாகியுள்ள வேளையில் அவர் தனது பாராளுமன்றப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

**27.08.96 செவ்வாய்க்கிழமை**

- மொறோ போராளிகளுடன் பிலிப்பைன்ஸ் அரசு மேற்கொண்ட சமாதான ஒப்பந்த ஏற்பாட்டை எதிர்க்கும் ஆயிரத்துக்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் மணிலாவில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.
- அன்னை திரேசா உடல்நிலை சீரடைந்து வருவதாகவும் அவர் இயந்திரத்தின் துணையின்றி சுவாசிக்க ஆரம்பித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
- தாய்வானுக்கான அமெரிக்க ஆயுத விற்பனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**28.08.96 புதன்கிழமை**

- தென்கொரிய ஜனாதிபதியின் கருணை மன்னிப்பின் பேரில் தண்டனை விதிக்கப்பட்ட இரு முன்னாள் ஜனாதிபதிகளும் விடுதலை செய்யப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.
- கியூபாவுடன் வர்த்தகம் செய்யும் கம்பனிகள் மேல் அமெரிக்கா விதித்துள்ள தண்டனையை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய சட்டமூலம் ஒன்றை பிரான்ஸ் தயாரித்து வருகின்றது.
- இஸ்ரேலுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் துருக்கி கைச்சாத்திட்டுள்ளது.
- பொஸ்னியாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைப் பகிஸ்கரிக்குமாறு மூன்று கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. பதவியில் உள்ள இஸ்லாமியத் தேசியக் கட்சியும் ஒன்றாகும்.

**29.08.96 வியாழக்கிழமை**

- ஜப்பானில் ஆட்கொல்லி நோய் பரவக் காரணமாக இருந்த இரத்த வங்கி சர்ச்சை தொடர்பாக வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
- ஜனாதிபதி கிளின்டனின் பிரதம ஆலோசகர் திரு மொறிஸ் விபச்சாரி ஒருவருடன் பாலியல் தொடர்பு கொண்டது தொடர்பாக பதவி துறந்துள்ளார். ஜனாதிபதி பில் கிளின்டன் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு 24 மணி நேரத்துக்கு முன் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
- பிலிப்பைன்ஸ் அரசுடன் சமாதான உடன்பாட்டுக்கு வந்த Moro National Movement என்ற அமைப்பின் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் மொறோ விடுதலை தொடர்பான ஏனைய அமைப்புக்கள் தம்முடன் இணையும் என எதிர் பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.
- ரஷ்ய தேசிய வாதத் தலைவர் ஜிவ்ரொனிஸ்கிக்கு சுவிற்சிலாந்து விசா வழங்க மறுத்துள்ளது.

**30.08.96 வெள்ளிக்கிழமை**

- இஸ்ரேலியப் பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில் விரைவில் பாலஸ்தீனத் தலைவரைச் சந்தித்து சமாதான ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
- ஈராக்கின் வடபகுதியில் உள்ள குர்திஸ் நகரமான Arbil ஈராக்கிய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. PDK எனப்படும் குர்திஸ் இயக்கப் பிரிவின் கோரிக்கையின் பேரில் தாம் இந் நடவடிக்கையை எடுத்ததாகத் தெரிவித்த ஈராக்கிய அரசு தாம் விரைவில் வெளியேறி விடுவோம் எனத் தெரிவித்துள்ளது.
- அமெரிக்காவில் TWA விமான விபத்துத் தொடர்பாக சுதந்திர விசாரணை ஒன்றை பிரான்ஸ் ஆரம்பித்துள்ளது.

**31.08.96 சனிக்கிழமை**

- பெல்ஜியத்தில் கடந்த வியாழன் முதல் காணாமல் போயிருந்த இரு இளம் பெண்களும் மயங்கிய நிலையில் ஜேர்மனியில் மீட்கப்பட்டுள்ளனர்.
- குர்திஸ் நகரமான ARBIL ஐ ஈராக்கியப் படைகள் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அமெரிக்கப் படைகள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.
- மெக்சிக்கோவில் சப்பற்றிஸ்டா கெரில்லாக்கள் நடாத்திய தாக்குதலில் 100 இற்கும் அதிகமான படையினர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.
- பிரான்சில் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதாகவும் விரைவில் அரசியல் மாற்றம் அவசியம் என பிரெஞ்சு சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பலாத்காரத்தை பெல்ஜியப் படுகொலைகள் முடிவுக்குக் கொண்டு வருமா?

பெல்ஜியத்தின் தென் கிழக்கு நகரான 'லியேஜ்' இன் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள க்ராஸ் ஹொலோனில் வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த எட்டு வயது சிறுமிகள் இருவர் கடந்த வருடம் ஜூன் மாதம் ஒன்றாகக் காணாமல் போனார்கள். இவ் வருடம் 17, 19 வயது நிரம்பிய இரண்டு இளம் பெண்கள் கடற்கரையில் காணாமல் போனார்கள். இதே போன்று இவ் வருடம் மே மாதம் பள்ளிக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த 12 வயது சிறுமி திடீரென காணாமல் போனாள். இறுதியாக கடந்த மாதம் நீச்சல் குளத்தில் இருந்து வெளியே வந்த வீடு சிறுமி வரவில்லை. இவர்கள் அனைவரும் என்ன ஆனார்கள்?



கொலைகாரன் மார்க்

பெல்ஜியப் பொலிசார் தொடர்ந்து முயன்றும் எந்தவித தடயமும் கிடைக்காத நிலையில் கடந்த வாரம் இவர்களைச் சுற்றியிருந்த திரை விலகியது. காணாமல் போனவர்களில் இருவர் இறுதிவரை கிடைக்காத நிலையில் இரண்டு சிறுமிகள் பதின்னான்கு மாதங்களின் பின் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இறுதியாகக் காணாமல் போன சிறுமிகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

'மார்க் டுட்ரூ' ஒரு வேலையற்ற மின்சாரத் தொழிலாளி, 39 வயதானவர். ஆனால் பெல்ஜியத்தின் பல பகுதிகளில் ஆறு வீடுகள் அவனுக்குச் சொந்தம். நடைமுறைத் தொழில் சிறுவர் கடத்தல், விற்பனை, பாலியல் வன்முறை, வீடியோப் படமெடுத்து விற்றல் ஆகும். 1983-ம் ஆண்டு 50 வயது பெண்ணொருவரை மானபங்கப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு நிருபிக்கப்படாததால் விடுதலை ஆனான். 1986-ம் ஆண்டு 12-க்கும் 19-க்கும் இடைப்பட்ட வயதைக் கொண்ட 5 பெண்களை கடத்தி பாலியல் பலாத்காரம் செய்ததாக கைது செய்யப்பட்டு 13 வருட சிறைத் தண்டனை பெற்றான். ஆனால் அவனது நன்னடத்தை காரணமாக 1992-ம் ஆண்டு நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டான். மீண்டும் 95-ம் ஆண்டு இறுதியில் கார் களவு ஒன்றிற்காக கைது செய்யப்பட்டு 3 மாதம் சிறைத் தண்டனையின் பின் விடுதலையானான். கடந்த மாதம் மீண்டும் பொலிசாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டான். இரண்டு நாள்வரை எதையுமே சொல்ல மறுத்தவன் இறுதியில் கொஞ்சம் கொஞ்சமாக உண்மைகளை கக்கத் தொடங்கினான்.

பதின்நான்கு மாதங்களுக்கு முன் ஜூலி, மெலிசா ஆகிய சிறுமிகளை கடத்திய 'மார்க்' நிலத்திற்கடியில் இரகசிய அறை ஒன்றில் அவர்களைப் பூட்டி வைத்து பாலியல் குற்றம் புரிந்துள்ளான். இவர்களை வைத்து பல வீடியோப் படங்களையும் எடுத்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. பின்னர் கடந்த டிசம்பர் மாதம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தபோது, தனது உதவியாள் ஒருவரை இவ் இரு சிறுமிகளுக்கும் உணவு வழங்கும்படி சொல்லியிருந்தான். ஆனால் இறுதியில் பட்டினியால் இரண்டு சிறுமியரும் இறந்திருக்கிறார்கள். தண்டனை முடிந்து வந்தவன் இருவரது சடலங்களையும் தனது தோட்டத்தில் புதைத்திருக்கிறான். இதேவேளை அவனது உதவியாட்களில் ஒருவனான பேர்னாட் வைன்ஸ்டென், பல வழிகளிலும் அவனை மிரட்டத் தொடங்கினான். சந்தர்ப்பத்தை சரியாகக் கணித்த மார்க் பேர்னாட்டுக்கு போதைமருந்தைக் கொடுத்து மயங்கிய நிலையில் உயிருடன் தனது தோட்டத்தில் புதைத்துள்ளான். இறுதியாக அவன் கடத்திய



சடலமாக மீட்கப்பட்ட இரு சிறுமிகள்

இருவரையும் அவனது வீட்டின் இரகசியப் பகுதியில் இருந்து பொலிசாரால் மீட்கப்பட்டிருக்கின்றார்கள். இச் சம்பவத்தில் மார்க்கின் மனைவியும் அவனுக்குத் துணையாக இருந்திருக்கிறாள். ஆனால் இன்றுவரை கடற்கரையில் இருந்து காணாமல்போன இருவரையும் பற்றி எந்தவிதத் தகவலும் கிடைக்காத நிலையில் அவர்கள் ஏதாவது ஒரு நாட்டில் உள்ள பாலியல் மனநோயாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் அமைதியடையும் அதேநேரம் பொலிசாரோ மார்க்கின் வீடு, தோட்டம் போன்றவற்றைக் கிண்டும் வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இது பற்றிய முழுமையான விசாரணைகள் நடந்துகொண்டிருக்கும் வேளையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. பொலிசாரின் விசாரணைகளில், பல அரசியல்வாதிகளும் அடங்குகின்ற அதேவேளை, இது தொடர்பாக ஒரு இரகசியப் பொலிசாரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை சுமார் 10 பேர் வரை பெல்ஜியத்திலும், ஒல்லாந்திலும் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை 400-க்கும் அதிகமான பாலியல் வீடியோ கசட்டுக்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். அவற்றில் அநேகமானவைகளில் மார்க்கும் காணப்படுகிறான்.

விசாரணைகள் தொடரும் அதேவேளை பெல்ஜிய மக்கள் அரசின் மீதும் பொலிசார் மீதும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த வாரம் ஜூலி, மெலிசா போன்றோரின் இறுதிச் சடங்குகள் நடந்த வேளை பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்கு சமூகமளித்திருந்தனர். அவர்களால் பிடிக்கப்பட்ட பல பதாகைகளில் கொலைகாரனுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்ற வாசகங்கள் காணப்பட்டன.



மார்கினால் உயிருடன் புதைக்கப்பட்ட பேர்னாட்

## உலகக் கண் — உதயன்

# சிறுவர் விபச்சாரம்! ஓர் சர்வதேச வலைப்பின்னல்

அண்மைக் காலமாக சிறுவர் பலாத்காரம் என்பது உலகளாவிய ரீதியில் நடாத்தப்படும் ஒரு சட்ட விரோதமாக ஆகியுள்ளது. உலகம் முழுவதும் இவ் வியாபாரத்தில் 30,000 பேர் ஈடுபடுவதாயும் இதன் மூலம் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் வருவதையும், ஒரு மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள் வருடத்திற்கு இவ் வியாபாரத்திற்குள் தள்ளப்படுவதாகவும் `UNICEF' கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இச் சிறுவர் விபச்சாரத்தில் முன்னிற்கும் நாடுகளில் ஆசியாவில் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தியா, சிறீலங்கா, நேபாளம், லத்தீன் அமெரிக்க நாடுகளான பிறேசில், டொமினிக்கன் குடியரசு, மெக்சிக்கோ, ஆபிரிக்க நாடுகளான சாம்பியா, அங்கோலா போன்றவைகளைக் குறிப்பிடலாம். இச் சிறுவர் விபச்சாரத்தை தடுத்து நிறுத்தக் கோரும் அமைப்பான `ECPAT' (End Child Prostitution in Asian Tourism) இன் கணிப்பின்படி தாய்லாந்தில் 8,00,000 சிறுவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப் படுவதாகக் கூறுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை 5 முதல் 10 லட்சம் விபச்சாரிகளில் 60 விகிதமானவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். சிறீலங்காவில் 30,000 விபச்சாரிகளில் மூன்றில் இரண்டு பகுதியினர் இளம் சிறுவர்களாக இருக்கிறார்கள். இது தவிர 5,000 முதல் 7,000 வரையிலான சிறுவர்கள் நேபாளத்திலிருந்து இந்தியாவுக்கு விபச்சாரத்திற்காகக் கொண்டு வரப்படுவதாகவும், அங்கிருந்து அவர்கள் மேற்கு நாடுகளுக்கு அனுப்பப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

தாய்லாந்து பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் ஏழ்மையில் உள்ள குடும்பத்தினர் தமது பொருட் தோவைகளுக்காக குழந்தைகளை விற்பனை செய்கிறார்கள். அதன் மூலம் வரும் பணத்தில் அவர்கள் வாங்குவது ஒரு புதிய ரக தொலைக்காட்சியாகவோ அல்லது ஒரு மின் விசிறியாகவோ இருக்குமேயன்றி அத்தியாவசியமான ஒரு பொருளாக இருக்காது என்கிறார் ஒரு உதவி நிறுவன அதிகாரி. அவர் மேலும் கூறிய போது, தாம் வாங்கிய ஆடம்பரப் பொருட்களின் சொகுசை குடும்பத்தினர் அனுபவித்துக் கொண்டிருக்கையில் விற்பனையான சிறுவர்களோ, சிறுமியரோ கேளிக்கை விடுதிகளிலோ அல்லது வீதியோரங்களிலோ விலை போய்க் கொண்டிருப்பார்கள் என்றார்.

இந்தியாவைப் பொறுத்தவரை சிறுவர்களோ, சிறுமியரோ விரும்பி விபச்சாரத்தில் ஈடுபடுவதில்லை, பலர் பல காரணங்களுக்காக விற்கப்படுகிறார்கள். பலர் வெளிநாட்டவர்களின் பேனாக்கள், லைட்டர்கள் போன்றவற்றில் மயங்கி ஏமாறுகிறார்கள். ஏராளமானோர் சினிமா மோகத்தினால் விபச்சாரத்திற்கு வருகிறார்கள். ஒரு டொலர் என்பது ஒரு ஏழை இந்தியனைப் பொறுத்தவரை சாதாரண காசல்லவே. இதைக் காட்டியே வெளிநாட்டவர் பலரை ஏமாற்றிவிடுகிறார்கள். வட இந்தியாவில் பல கிராமங்களில் தமது குழந்தைகளுடன் உறவு ஏற்படுத்தினால் தமது இரகசிய நோய்கள் மறைந்துவிடும் என்று ஒரு தவறான ஐதீகம் உள்ளது. இதனைப் பாவித்து பல குழந்தைகளை பலாத்காரத்திற்கு உள்ளாக்கிய தந்தைகள் அவர்களை பம்பாயில் உள்ள சிவப்பு விளக்குப் பகுதிகளில் விற்பனை செய்து விடுகிறார்கள். இதேவேளை ஆபிரிக்காவிலோ தனது குழந்தைகளுடன் உறவு கொண்டால் விரைவில் செல்வந்தராகிவிடலாம் என்றொரு ஐதீகம் இருக்கிறதாம். சிறீலங்காவைப் பொறுத்தவரையில் அங்கு வரும் உல்லாசப் பயணிகளிடம் தமது குழந்தைகளையே வருமானத்திற்காக தகப்பன்மாரே கொண்டுபோய் விடுகின்றனர்.


இப்படியாக குழந்தை விபச்சாரம் சமூகத்தின் பல வழிகளினாலும் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த சமுதாயம் சீரழிக்கப்படக் காரணமாகிறது. முதலில் 1989-ம் ஆண்டு ஐ.நா. சபையினால் சிறுவர் உரிமை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 187 நாடுகள் அதை ஏற்றுக் கொண்டன. ஆனால் இன்றைய நிலையில் அதில் அநேகமான நாடுகள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்ற சூழ்நிலையே காணப்படுகின்றது.

இது போக புதிய 'இன்டர் நெட்' தகவல் வலைத் தொடர்பு கூட இன்று சிறுவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் பாரிய அளவில் பாவிக்கப்படுகிறது. இவ் வலைத் தொடர்பில் பல ஆயிரம் சிறுவர்களின் படங்கள், அவர்களைப் பற்றிய விபரங்கள், தொடர்பு போன்றவற்றை பல இரகசிய நபர்கள் உலகெங்கும் உலாவ விடுகின்றனர். பல நாடுகள் தத்தமது சட்டங்களுக்கு ஏற்ப இச் சேவைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் முற்றாக அழிக்க புதிய தொழில் நுட்பம் இடம் கொடுக்கவில்லை.

கடந்த வாரம் ஸ்டோக் ஹோமில் நடந்த சிறுவர் வன்முறைக்கு எதிரான மாநாட்டின் பின் பல நாடுகள் புதிய சட்டங்களை இயற்றியுள்ளன. ஏற்கெனவே அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் தமது பிரஜைகள் வெளிநாடுகளில் சிறுவர் வன்முறைகளில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் நாடு திரும்பியவுடன் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக சட்டங்களை மாற்றியுள்ளன.

ஐரோப்பாவில் சிறுவர் விபச்சாரம் என்பது வெளிப்படையாக இல்லாவிடினும் பெல்ஜியம் போன்று ஏற்கெனவே ஜேர்மனியிலும், பிரான்சிலும் பலர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் பலர் இரகசியமான முறையில் பலாத்காரமாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இன்று பெல்ஜியத்தில் நடந்த சம்பவத்தின் பின் அநேகமான நாடுகள் சிறுவர் விடயத்தில் மிகவும் இறுக்கமாக நடந்து கொள்ளும் என்று சர்வதேச பொலிஸ் பிரிவின் அதிகாரியொருவர் தொலைக் காட்சிப் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் முற்றம்



இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் டன்சன் வசந்தனை பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.


## உங்கள் கை வண்ணம்

### இவ் வாரக் கைவண்ணம்



**செல்வி நீகா சண்முகராஜா**

வயது: 9 (26.05.1987)
இடம்: 75018 Paris, France.




## குட்டிக் கதை படிப்போம்...

### இரண்டு நண்பர்கள்

ஒரு காட்டில் ஒரு மானும் காகமும் நல்ல நண்பர்களாக வாழ்ந்து வந்தார்கள். ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தார்கள். காட்டுக்கு அண்மையில் இருந்த தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள மரக்கறி பயிர்களை சாப்பிட்டு வந்தது மான். தோட்டக்காரன் தனது தோட்டத்திற்கு வரும் மானை கொல்ல எண்ணி வலை விரித்தான்.

ஒரு நாள் வழமைபோல தோட்டத்திற்கு சாப்பிடச் சென்ற மான் வலையில் அகப்பட்டுக் கொண்டது. தனது நண்பன் உயிர் ஆபத்தில் மாட்டிக் கொண்டதை காகம் அறிந்தது. தனது நண்பனை எப்படியாவது காப்பாற்ற எண்ணியது.

வலையில் அகப்பட்டுக் கிடந்த மானுக்கு அருகில் சென்ற காகம் "நண்பனே! தோட்டக்காரன் காலையில்தான் இங்கு வருவான். அப்போது நீ செத்துவிட்டது போல படுத்திருக்க வேண்டும். நான் உனது கண்களை கொத்துவது போல் நடிப்பேன். அப்போது நீ இறந்துவிட்டாய் என எண்ணி தோட்டக்காரன் வலையை எடுப்பான். அப்போது நான் மரத்தில் இருந்து கா.. கா.. என சத்தமிடுவேன். அந்த வேளை நீ எழுந்து ஓடிவிட வேண்டும்" என்று சொன்னது.



மானும் தனது நண்பன் சொன்னபடியே செய்து தோட்டக்காரனிடம் இருந்து தப்பிக்கொண்டது.

"மற்றையவர் தேடிய உணவை நாம் எடுத்து உண்ணாமல் எமது உணவை நாமே தேடிக்கொள்ள வேண்டும்" என காகம் அறிவுரை கூறியது.

தன்னைக் காப்பாற்றிய நண்பனுக்கு நன்றி கூறிய மான் நண்பன் சொற்படி நடந்தது.

## - அறிந்து கொள்ளுங்கள் -

### பொம்மைகளுக்கு வைத்தியர்

என்ன? கையில் கரடிப் பொம்மையோடு வைத்தியர் என்று பார்க்கிறீர்களா. ஆச்சரியம்தான் பிள்ளைகளே!

லண்டனில் இந்த வைத்தியர் பொம்மைகளுக்கு வைத்தியம் செய்கிறாராம். ஜேம்ஸ்மே என்ற இந்த வைத்தியர் கை, கால் இழந்து, தோல்கள் உரிந்து பல்வேறு காயங்களுக்கு உள்ளான பொம்மைகளுக்கு உரிய பரிசோதனைகள் மேற்கொண்டு வைத்தியம் செய்கிறார். குறிப்பாகக் குழந்தைகள் அதிகமாக விரும்பும் கரடிப் பொம்மைகளே இவரிடம் அதிகமாக வைத்தியம் பெற வருகின்றனவாம். நாற்பது வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்த பொம்மைகளும் வைத்தியம் பெற வருகின்றன. உறுப்புக்களை இழந்த பொம்மைகளுக்கு சத்திர சிகிச்சை மூலம் உறுப்புக்களை பொருத்துகிறார்.

மாதத்தில் ஒரு நாள் பொம்மை வைத்தியத்திற்கு ஒதுக்குகிறார்.



என்ன உங்களிடம் உள்ள பிய்ந்துபோன பொம்மைகளை இந்த வைத்தியரிடம் கொண்டு செல்ல நினைக்கிறீர்களா?

## கண்டுபிடித்தீர்களா?

### பத்து வித்தியாசங்கள்



**விடை**

| | |
|---|---|
| 1) குருவியின் கண் | 6) நரியின் மீசை |
| 2) குருவியின் கொண்டை | 7) செடியின் இலை |
| 3) மரக் கிளை | 8) நரியின் முதுகு |
| 4) குருவியின் எச்சம் | 9) நரியின் வாய் |
| 5) குன்றுகளின் ஒரு உச்சி | 10) மலையடிவாரம் |

## எனது விடுமுறை நாட்கள்

*பிள்ளைகளே! தற்போது உங்களில் பலருக்கும் பாடசாலை விடுமுறை நாட்களாகவே இருக்கும். இந்த நாட்களில் நீங்கள் உங்கள் விடுமுறையை கழிக்க எங்காவது சுற்றுலாப் பயணம் சென்றிருப்பீர்கள். உங்கள் சுற்றுலா அனுபவத்தை 10 வரிகளுக்குள் சுருக்கமாக உங்கள் கைப்பட எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் படத்தையும் சுற்றுலாப் பயண வேளையில் நீங்கள் பார்த்து ரசித்த பகுதியின் படம் இருந்தால் அதில் ஒன்றையும் எமக்கு அனுப்பிவைக்கவும்.*

## கெட்டிக்காரக் குஞ்சுகள்

### சின்ன ஓவியரின் சாதனை

பிள்ளைகளே! இவருக்கு இப்போது வயது பத்து மட்டும்தான். ஆனால் இவரது சின்னக் கைகள் வரைகின்ற ஓவியங்களோ உலகம் வியக்கும் வண்ணமாக உள்ளன. அமெரிக்காவைச் சேர்ந்த



அலெக்சாந்திரா என்ற இந்தச் சிறுமி 'புதிய பிக்காசோ' என பலராலும் வர்ணிக்கப்படும் அளவுக்கு அதிசயிக்கத்தக்க வகையில் பல ஓவியங்களை வரைந்துள்ளனர். இவரது ஓவியக் கண்காட்சி அண்மையில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் நடைபெற்றது.

இவரது ஓவியங்களை நிறையப் பணம் கொடுத்து பலரும் ஆவலோடு வாங்கிச் செல்கின்றனராம். இவரை ஓவியத்துறையில் சாதனை படைக்க வைப்பதில் இவரது பாடசாலைத் தோழிகளே இவருக்கு ஊக்க சக்தியாக உள்ளனராம். எதிர்காலத்தில் இந்தச் சிறுமி மிகப் பெரிய ஓவியராக உயர நாங்களும் வாழ்த்துவோம்.

நீங்களும் ஏதாவது துறையில் சாதனை புரிய வேண்டும் என்ற ஆவலோடு ஈடுபட்டால் வெற்றி நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட நிகழ்வுகள்

## விலங்கை உடைத்த விலங்கு

விலங்குகளுக்கு விலங்கிட்டு அடிமைப்படுத்த நினைத்தால், விலங்குகளே விலங்கை உடைக்கத்தயக்காது என்பதை வலியுறுத்தும் இசைக்கோல நடனம் 'விலங்கை உடைத்த விலங்கு' பார்வையாளரை முழுமையாக ஆட்கொண்டது. விலங்குகளே அவ்வாறெறினில் தமிழினத்தை அடிமைப்படுத்த நினைத்தால் நிலை என்ன என்ற உண்மையையும் இந் நடனம் எடுத்தியம்புகின்றது.

இந்த இசைக்கோல நடன வடிவமைப்பை ஜேர்மனி விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியை திருமதி. சாவித்திரி இம்மானுவேல் ஏற்படுத்தியிருந்தார். திரு கண்ணனின் கைவண்ணம் இந்த இசைக்கோல நடனத்திலும் மிளிர்ந்தது. திரு கா.சிவநாதன் இந்த இசைக்கோல நடனத்தை இயக்கியிருந்தார். இந் நிகழ்ச்சியில் நகைச்சுவையை திரு கதிர்ச்செல்வன் வழங்கினார்.

## பிலபெல்ட் நகரில் நடைபெற்ற செஞ்சோலைக் கலைமாலை

(ஜேர்மனியிலிருந்து வராதராஜா)

'தமிழீழ வீரப் பெண்மணி ஒருவர், தமது கற்பை பாதுகாத்துக் கொள்வதற்காக இரண்டு சிங்கள இராணுவத்தினரை கத்தியால் குத்தியுள்ளார். இவர்களில் ஒரு இராணுவவீரர் மரணமடைய மற்றவர் பலத்த காயங்களுடன் ஓடியுள்ளார். தமிழ் பெண்கள் கற்பை பெரிதாக மதிக்கின்றார்கள் என்பது இங்கு மீண்டும் நிரூபிக்கப் பட்டுள்ளது' என்று ஜேர்மனி விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கா.சிவநாதன் கூறினார்.

ஜேர்மனி பீலபெல்ட நகரில் நடைபெற்ற செஞ்சோலைக்கலைமாலை நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார். செஞ்சோலை - காந்தரூபன் அறிவுச்சோலை ஜேர்மன்கிளை இதனை நடத்தியது. ஏற்கனவே இந்நிகழ்ச்சி ஸ்ருட்காட், ஓபகௌசன் நகரங்களில் நடைபெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியர்களான திருமதி. வானதி தேசிங்கராஜாவின் மாணவிகளும், செல்வி பவித்திரா செல்வகாந்தன், செல்வி யாமினி சர்வானந்தன், செல்வி சுகன்யா சிவநாதன் ஆகியோரும் அவர்களின் மாணவிகளும் வழங்கிய சுதந்திரக்கனல் நடனங்கள் விடுதலையோடு இணைந்திருந்தன.

மண்ணில் ஒருபிடி என்ற நடன வடிவத்தை ஜேர்மனி கலை பண்பாட்டுக்கழக ஆசிரியை செல்வி தேனுகா காந்தராஜா தனது மாணவிகளுடன் வழங்கினார். இதனை அருந்ததி சுதர்சன் எழுத, கண்ணன் இசையமைத்திருந்தார். கரும்புலிகளின் உணர்வுகள் இந் நடனத்தில் வெளிப்பட்டன.

சின்னஞ்சிறு கலைஞர்களின் திறமைகளும் சோலைக் கலைமாலையில் வெளிப்பட்டன. சிறுமி துஷ்யந்தி மனோகரன் புல்லாங்குழல், வயலின் வாத்தியங்களில் விடுதலைக் கீதம் இசைத்தர். சிறுமி கிருபாளினி மகாலிங்கம் என்னைப் பார்த்தீரா எனக் கேட்டு அனைவரையும் விழிப்பூட்டினார்.

தளிர் இசைத் தாலாட்டு வேளையில் பிஞ்சுக் கலைஞர்கள் உணர்வுமிகப் பாடல்களைப் பாடினார்கள். தமிழீழம் இசைக்குழு பின்னணி இசை வழங்க செல்வி சார்மிலா சிறீதரன், செல்வன் திலீபன் புலேந்திரன், செல்வன் ஸ்ரொபான் வலன்ரைன் ஆகியோர் பாடினர்.

## சுவிஸ் லுட்சேர்ண் தமிழ்மன்றம் இடமாற்றம்

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்தாலும் மண்ணையும், தாய் மொழியையும் எம் சிறார்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் உயரிய நோக்கம் கொண்டு சுவிஸ் நாட்டில் லுட்சோண் மாநகரில் உருவாக்கப்பட்டதே தமிழ் மன்றம்.

ஐந்து வருட காலமாக பணியை நன்கு ஆற்றிய லுட்சோண் தமிழ் மன்றம், அங்குள்ள தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்று பெருவளர்சி பெற்றுள்ளது. கடந்த 31.08.96 முதல் இம் மன்றம் Tribschen Strasse 51, 6005 Luzern என்னும் புதிய இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் கடந்த 01.09.96 முதல் வழமை போல் நடைபெறுகிறது என்பதை அறிவித்துள்ளனர்.

புதன்கிழமை நடைபெறும் தமிழ் வகுப்புக்கள் 04.09.96 முதல் ஆரம்பமாகும்.

தமிழ் வகுப்பு நேரங்கள்

ஆண்டு 1,2,3 பிற்பகல் 2.00 மணி- மாலை 4.00 மணி.

ஆண்டு 4,5,6 மாலை 4.00 மணி - மாலை 6.00 மணி

ஏனைய வகுப்புக்கள் 01.09.96 முதல் நடைபெறுகிறது.

பாலர்வகுப்பு, கணணி வகுப்பு, கீ போர்ட், மிருதங்கம், வயலின், வீணை, கிற்றார் வகுப்புக்களும், டொச் வகுப்பு, மோட்டார் வாகன சாரதி பயிற்சி வகுப்பு, ஆகியவை பழைய நேர அட்டவணைப்படி நடைபெறும் என்பதையும் தமிழ்மன்ற நிர்வாகம் அறிவித்துள்ளது.


## யாழ்ப்பாண ஆயர் பிரான்ஸ் வருகிறார்

யாழ் ஆயரின் ஐரோப்பிய விஜயத்தின் ஒரு பகுதியாக பிரான்ஸ் வரவிருக்கும் ஆயர் அவர்கள் வருகிற 08.09.96 மாலை 5.00 மணிக்கு பாரிஸ், கொங்கூட் புனித சூசையப்பர் ஆலயத்தில் (L'eglise St. Joseph des Nations, 154, rue St.Maur, 75011 Paris) திருப்பலி ஒப்புக் கொடுப்பார். பிரான்ஸ்வாழ் இலங்கைத் தமிழ் கத்தோலிக்கர்கள் அனைவரையும் இத் திருப்பலியில் பங்குகொள்ள அருட்திரு செபமாலை தூரம் அ.ம.தி அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

நமது நாட்டில் நீதியுடன் கூடிய நிலையான சமாதானம் விரைவில் கிடைக்க வேண்டும் என்ற நற்கருத்திற்காக இத் திருப்பலியை யாழ் ஆயருடன் சேர்ந்து ஒப்புக் கொடுப்போம்.

யாழ் மறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்து அவதியுறும் தமிழ் மக்களுக்கு உதவிசெய்ய விரும்புகின்ற நல்ல உள்ளம் கொண்டவர்கள் அனைவரும் உங்களால் முடிந்த உதவியை யாழ் ஆயரிடம் நேரடியாக கொடுக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**10.08.96 இல் சுவிஸ் சுக் மாநிலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய சுவட்டு மைதான மெய்வல்லுனர் போட்டியில் சுக் மாண மாணவியரின் அணிவகுப்பு மரியாதை.**





**30.06.96 அன்று பாரிசில் நடைபெற்ற காயத்திரி – 96 வெற்றிக் கிண்ணம் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்ட இரு குழுக்களும் பிரதம விருந்தினருடன் →**



**காயத்திரி – 96 வெற்றிக் கிண்ணம் ▲ 1ம் இடம்**



**காயத்திரி – 96 வெற்றிக் கிண்ணம் 2ம் இடம் →**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் தியாகி திலீபன் நினைவு எழுச்சிவிழா

தமிழீழ விடுதலைக்காக நீர் கூட அருந்தாது உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் 9வது ஆண்டு நினைவை முன்னிட்டு எழுச்சிவிழா 28.08.96 அன்று எசன் (ESSAN) நகரில் நடைபெற உள்ளது. அன்று காலை 'தியாகி திலீபன்' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது.

பேச்சுப் பேட்டிகளில் முதல் இடத்தை பெறுவோர் மாலை நடைபெறும் எழுச்சிவிழாவில் உரைநிகழ்த்துவர். எசன் நகரில் Henri Dunant Str-65 என்ற முகவரியில் அமைந்துள்ள மண்டபத்தில் இந் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பேச்சுப் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றுவார்கள்.

பேச்சுப் போட்டியில் பங்குபற்றுவோர் தமது விண்ணப்பங்களை 00.09.96 ற்கு முன்னர் அனுப்பிவைக்குமாற கேட்கப்பட்டுள்ளனர்.

தியாகி தீலீபன் என்னும் தலைப்பில் நடைபெறும் பேச்சுப் போட்டி கீழ்பிரிவு (11 வயதிற்கு உள்பட்டோர்- 3 நிமிடம்), நடுப்பிரிவு (11-16 வயதுக்கு உட்பட்டோர் -5 நிமிடம்), மேற்பிரிவு (16-20 வயதிற்குட்பட்டோர்-7 நிமிடம்), அதிமேற் பிரிவு (20 வயதிற்கு மேற்பட்டோர் - 10 நிமிடம்) என நான்கு பிரிவுகளாக நடைபெறும்.

# பாரிசில் கல்லூரிதின விழா

யாழ் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரா-ன்ஸ் எடுக்கும் கல்லூரித்தின விழா எதிர்வரும் 08.09.96 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு 7-9 Rue Euryale Dehaynin, 75019 Paris, M°: Laumiere என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்ச்சியில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு பழைய மாணவர்களுக்கும், நண்பர்களும் அழைக்கப் படுகின்றனர்.

குறிப்பு: மண்டபம் குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருப்பதால் சரியாக காலை 9.30 மணிக்கே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஜேர்மனியில் விடுதலை கானம் பாடி சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் விடுதலை கானம்பாடி சிந்த பாடகர் தேர்வுப் போட்டி எசன் நனரில் 08, 14 .09.96 திகதிகளில் நடைபெறும். 08.09.96 அன்று தெரிவுப் போட்டியும் 14.09.96 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இறுதிப் போட்டியும் நடைபெறும்.

போட்டிகள் அனைத்தும் எசன் நகரில் Yunant Str-65 இல் அமைந்துள்ள Universitat Alte Ph மண்டபத்தில் நடைபெறும். இப் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்த அனைவருக்கும் போட்டிபற்றிய விபரங்கள் கடிதமூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. அழைப்புவிடுக்கப்பட்டுள்ள போட்டியாளர்கள் அனைவரும் உரிய நேரத்திற்கு வந்த போட்டியில் கல்ந்து கொள்ள வேண்டும்.

இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப் பாடல்கள் தொகுப்பிலிருந்து மாத்திரமே போட்டியாளர்கள் பாடல்களை தெரிவு செய்துள்ளனர்.

தனிக்குரல் பாடல் போட்டி மேற்பிரிவு (14 வயதிற்கு மேல்), கீழ்பிரிவு (14 வயதிற்கு கீழ்) என இரு பிரிவுகளாக நடத்தப்படும். இணை குரல் போட்டிக்கு வயது எல்லை இல்லை.

# லண்டனில் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடகவிழா 96-(4)

## நாடகங்கள்

**மலைகளை அகற்றிய மூடக்கிழவன் - சிறுவர் நாடகம் (பிறென்ற் தமிழ் பாடசாலை மாணவர்கள்) / பலி (சிறுவர்க்குகந்தது), / முகமில்லாத மனிதர்கள் / துன்பக் கேணியிலே ... (கவிதா நாடகநிகழ்வு) நெறியாள்கை க.பாலேந்திரா.**

காலம்:
**08.09.96 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணி**
SECOMBE THEATRE SECOMBE CENTRE
(Next too Holiday Inn)
CHEAM ROAD, SUTTDN, SURREY.

அன்பளிப்பு: £5.00
மேலதிக விபரங்களுக்கு 0181 459 4335, 470 7883, 509 2092, 240 0211, 682 4127 இலக்கஙளுடன் தொடர்பு கொள்ளவும்.

# அதிஷ்டசாலிகள் அறியத்தரவும் மாணவர் அமைப்பு அறிவித்தல்

சென்ற 20.07.96 அன்று யேர்மனியின் டோட்முன்ட் நகரில் தமிழ் மாணவர் அமைப்பு நடாத்திய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக்கழக வளர்ச்சிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பில்.

625, 683, 325 ஆகிய இலக்கங்கள் பரிசுக்குரிய அதிஷ்ட இலக்கங்களாக தெரிவாயின. இன்று வரை அதற்குயாரும் உரிமை கோரவில்லை.

பரிசுக்குரிய இலக்கத்துக்குரியவர்கள் தொலைபேசி இலக்கம் 0711 7655509 உடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

26.08.96 திங்கள் சுவிசில் நடைபெற்ற ஜெனிவாவை நோக்கிய ஊர்வலத்தில் இருந்து...










02.09.96 திங்கள் பிரான்சில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஒன்றுகூடலில் இருந்து...












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிஸ் லாசப்பலில்

# மக்கள் கடை

உங்களுக்குத் தேவையான அனைத்து மளிகைப்
பொருட்களும் நம்ப முடியாத மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

# மக்கள் கடை

(இது உங்கள் கடை
உங்கள் தேவைகளுக்கான கடை)

**மலிவு! மலிவு!! மலிவு!!!**

**59, Rue Louis Blanc, 75010 Paris.**
**Métro: La Chapelle**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் பலவிதம்

# கருப்பை இறக்கம்

## தாம்பத்தியத்திற்கு சிக்கல் தருமா?

பொதுவாக கருப்பை இறக்கம் என்று அழைக்கப்படுவதானது உண்மையில் கருப்பை நழுவித் துருத்துதலையே குறிப்பிடுகின்றது. கருப்பை நழுவித் துருத்தல் பல நிலைகளாக காணப்படுவதால் இந் நிலைகளின் அளவினைப் பொறுத்தே சிகிச்சையும் மேற்கொள்ளப்படுகின்றது.

கருப்பை கழுத்து இலேசாக இறக்கி யோனிக் குழாயின் உள்ளே வருமானால், அது முதல் நிலை துருத்தல் என்றும், ஒரு பெண் நிற்கின்றபோதோ அல்லது மலச்சிக்கல் காரணமாக இறுகிய மலத்தினை கழிக்கின்றபோதோ கருப்பை இறக்கம் நடைபெற்று கருப்பைக் கழுத்து யோனித் துளை நுழைவாயிலில் தெரிவதை இரண்டாம் நிலை துருத்தல் எனவும் கொள்ளப்படும். இவ் இரண்டாம் நிலை துருத்தலுக்கு வயிற்றின் அழுத்தம் கூடுவதும் ஒரு காரணமாகும்.

மூன்றாம் நிலைத் துருத்தலானது கருப்பை இறக்கத்தால் கருப்பைக் கழுத்து யோனித்துளைக்கு வெளியே தெரியும்படி துருத்திக் காணப்படுவதேயாகும். மாறாக கருப்பை முழுவதுமே யோனித்துளைக்கு வெளியே இறங்கிக் காணப்படுமாயின் இதனை கருப்பை தொங்கல் (Procedentia) என அழைக்கப்படும்.

கருப்பை இறக்கத்தால் கருப்பைக் கழுத்து யோனிக் குழாயிலோ அல்லது யோனித்துளையிலோ இருந்தால் தாம்பத்திய உறவுக்கோ அன்றி குழந்தை பெற்றுக் கொள்வதற்கோ பாதிப்புத் தருவதில்லை. மாறாக கருப்பை இறக்கத்தால் கருப்பை கழுத்து வெளியே துருத்திக் காணப்படுமாயின் உடலுறவு கொள்வதற்கும் குழந்தை பெற்றுக் கொள்வதற்கும் சிரமம் ஏற்படலாம்.

மருத்துவத் துறையின் வளர்ச்சியினால் தற்போது இவ்வகையான பிரச்சினைக்கு அறுவைச் சிகிச்சை மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். இச் சிகி-ச்சை மூலம் கருப்பை மீளவும் உள்ளே பொருத்திக் கொள்ளப்படுவதால் எதிர்காலத்தில் அப் பெண்ணிற்கு ஏற்படும் சிரமங்கள் பெருமளவு தவிர்க்கப்படுகின்றன.

கருப்பை முழுவதுமாக நழுவித் துருத்தாது யோனிக் குழாயினது முன் சுவர் மட்டுமே இறங்கி முன்னால் துருத்தும் வேளையில், சிறுநீர்ப் பையும் இறங்கித் துருத்துகிறது. இது சிறுநீர்ப்பை இறக்கம் எனப்படும். இச் சந்தர்ப்பத்தில் சிறுநீர் கழிப்பதில் பாதிப்பு ஏற்படுவதால் வலி உணர்வும் தோன்றும்.

இவ்வாறான பாதிப்புக்களை தெளிவாக அறிந்துகொண்டு சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டும். கருப்பை இறக்கத்தினாலேயே வயிறு தொப்பையாக வருகின்றதென சில சகோதரிகள் தவறாக விளங்கிக் கொள்கின்றனர். உண்மையில் ஒரு கர்ப்பிணிக்கு கர்ப்பத்தின் போது அடிவயிறு சிறிது சிறிதாக விரிந்து கொடுப்பதால் வயிற்றுத் தசைகள் நீண்டு அகன்று விடுகிறது. பேற்றின் பின்னர் முன்னைய நிலைக்கு அத் தசைநார்கள் சுருங்கிவிட்டாலும் அடிவயிறு தொள தொளவென்றே காணப்படுவதுடன் வயிற்றில் கோடுகளும் தென்படும். கர்ப்பம் அடி வயிற்றில் ஏற்படுத்திய இம் மாற்றங்களை தக்க உடற் பயிற்சியின் மூலம் ஓரளவு நிவர்த்தி செய்யலாம்.

**தொகுப்பு:**
**வர்ஷிகா - வைஷ்ணவி**

# இறுதித் தீர்ப்பினால் உறுதியான பிரிவு

உலகத்தில் பிரளயம் வந்தாலும் எலிசபெத் மகாராணி வீட்டுச் செய்திகளை கொஞ்சமாவது கொடுக்காவிட்டால் பிரிட்டிஷ் செய்தி ஊடகங்களுக்கு தூக்கமே வராது. கடந்த காலங்களில் சார்ள்ஸ் - டயானா விவகாரங்களை அலசி, அலசி



சார்ள்ஸ்



டயானா

செய்திகளைத் தந்த பத்திரிகைகளுக்கு கடந்த புதன்கிழமையும் செய்திப் புதையல் கிடைத்துள்ளது.

சார்ள்ஸ் - டயானா விவகாரத்தின் கடைசிப் பகுதியான விவாகரத்துக் காட்சி உத்தியோகபூர்வமாக கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளதே அது. இதன்படி இனி வரும் காலங்களில் டயானாவிற்கு அளிக்கப்படும் 'அரச மரியாதை' வெகுவாக குறைக்கப் பட்டுள்ளது.

விவாகரத்திற்கு இறுதி அனுமதியளித்த லண்டன் உயர் நீதிமன்று பதினைந்து வருடங்களுக்கு முன்னர் நம்பிக்கையுடன் ஆரம்பமான குடும்ப உறவானது முறிவடைந்தமை குறித்து தனது கவலையையும் வெளியிட்டுள்ளது.

விவாகரத்தினூடாக டயானாவிற்கு 22.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதிப் பங்கீடாக வழங்கப்பட்டுள்ளதுடன் இனிமேல் டயானா கொள்வனவு செய்யும் பொருட்களுக்கோ அல்லது செலவினங்களுக்கோ தான் பொறுப்பல்ல எனவும் சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.

முப்பத்தைந்து வயதான டயானா, எலிசபெத் ராணிக்கு பெரிய சவாலைத் தோற்றுவித்ததுடன் அவ்வப்போது தலையிடியினையும் கொடுத்தவர் என விமர்சிக்கப்பட்டவரும் கூட. இந்த விவாகரத்தின் பின்னரும் ராணி வீட்டு பிரச்சினைகள் ஓயப்போவதில்லை. அடுத்த காட்சியாக சார்ள்ஸ் - பமீலா விவகாரம் தலைதூக்கப் போகிறது. பமீலாவை சார்ள்ஸ் மறுமணம் செய்தால் அரச முடி சூடும் தகுதியை இழக்க வேண்டிவரும் என பிரித்தானியத் தேவாலயங்கள் எச்சரித்துள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர் ஜோன் மேஜர், "இப்போதைக்கு சார்ள்சுக்கு மறுமணம் புரியும் நோக்கமில்லை எனவும் எதிர்காலத்தில் சில வேளை அது சாத்தியப்படும்" எனவும் தெரிவித்துள்ளார்.

# நடிகை ஆனதால் சுதந்திரங்களை இழந்தேன்

## - மனிஷா கொய்ராலா -

நேபாள கொய்ராலா மன்னர் பரம்பரையில் இருந்து இந்திப் படவுலகில் நுழைந்த மனிஷா கொய்ராலா பம்பாய், இந்தியன் படங்களின் மூலமாக தமிழ்த் திரைப்படவுலகில் வலம் வருகின்றார். பிரபலமான நடிகையாக இருந்தாலும், நடிகை முத்திரை குத்தப்பட்டதால் தன்னுடைய பல சுதந்திரங்களை இழந்ததுமல்லாமல் குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே வளைய வருவதும் அறவே பிடிக்கவில்லை என்ற வேதனையான வார்த்தைகளை தனது சுய விமர்சனமாக சொல்கிறார் மனிஷா.

தனக்குச் சரி என எது படுகிறதோ அதை தயக்கமேதும் இன்றி செய்து முடிப்பேன் எனவும் அதற்குத் தடையாக எவர் வந்தாலோ அல்லது கட்டுப்படுத்த முயன்றாலோ போராடவும் தயங்கமாட்டேன் எனக் கூறும் மனிஷாவை அழகி என யாராவது பாராட்டினால் அறவே பிடிக்காதாம் மாறாக புத்திசாலி, கெட்டிக்காரி என்று பாராட்டப் படுவதையே விரும்புகிறாராம்.

இன்னமும் திருமணம் செய்து கொள்ளாத இவர் நாளையைப் பற்றி சிந்திப்பதே இல்லையாம். இன்றைய தினத்தை இனிமையாகக் கழிக்கவே விரும்புவாராம்.

திரையுலகிற்கு நுழைந்திராது விட்டால் தான் ஒரு வைத்தியராகி இருப்பேன் என்று நடிகைகளின் வழமையான பல்லவியையே மனிஷாவும் திருப்பிச் சொல்கிறார்.




ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 158,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள் , * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் ab DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாளரம்

இசையுலகில்....!

***'இசைதான் எனது வாழ்வு'***

- பேராசிரியர் சதீஸ் சத்திரா.

***'இசை அமைதிக்காக'***

- அனூப் குமார் பனார்ஜி.

ஒரு நாள், என் நண்பன் கேட்டான்:

***'இசை என்றால் என்ன?'***

***மனித ஆத்மாக்களது சத்தங்கள்*** என்றேன்.

ஆம்! இசையென்பது வரையறைகளைக் கடந்த ஒரு கூட்டு;

சர்வதேசியத்தன்மை கொண்ட ஒரு ஊடகம்.

உலகில் எல்லாத் திக்குகளிலும் தன் கரங்களை அகல விரித்து மக்களை அரவணைக்கவும், தாலாட்டவும் கூடியது இசை. இதன் அரவணைப்பில் மயங்கித் திளைத்தவர்கள் எண்ணற்ற மக்கள். எந்த முற்பரிச்சயம் இல்லாதவர்களைக்கூட தன்வசம் ஈர்க்கக்கூடியது தான் இசை.

இசை ஒரு சர்வதேசிய மொழி. இது தரும் அனுபவம் வித்தியாசமானது. இசை மீதான ஆர்வமும், அதனுடன் இணைந்து செல்லும் தன்மையும், அதன் நுண்ணிய உணர்வினைப் புரிந்து கொள்ளும் தன்மையும் இருந்தாலே போதும். இந்த சர்வதேசிய மொழியினை புரிந்து கொள்ள முடியும்.

உலகில் எந்தக் கலைவடிவத்தினை எடுத்துக் கொண்டாலும் அங்கே இசை பிரதான பங்கினை வகிப்பதினை நாம் காணலாம். இசையால் பிரபல்யம் பெற்ற கலைவடிவங்களும் இசையால் எங்களை அரவணைத்த கலைஞர்களும் உலகிலே ஏராளம்.

இசை மீது எங்களுக்கு நிறைந்த ஆர்வம். அது இன்னுமின்னும் புதிய எல்லைகளைத் தொடவேண்டும் என்பதில் நிறைந்த விருப்பம். இவ்விருப்பின் காரணமாக, நோர்வே நாட்டின் பேர்கன் நகரிலமைந்திருக்கும் மகரிஷி கந்தர்வ வேத இசைக்கல்லூரியில் விரிவுரைகளை எடுக்கும் இந்தியாவைச் சேர்ந்த சித்தார் இசைக் கலைஞர் பேராசிரியர் சதீஸ் சந்திராவையும் (PROF SATISH CHANDRA), தபேலாக் கலைஞர் அனூப் குமார் பனார்ஜியையும் (ANOOP KUMAR BANERJI) ஈழமுரசின் சார்பாக சந்திப்பதற்கு நானும், நண்பர் சின்மனும் அவர்கள் தங்கியிருக்கும் இல்லத்திற்குச் சென்றோம்.

திருமதி. வசந்தி மகாநந்தன் - பேர்கன், மகரிஷி கந்தர்வேத இசைக் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளர். எங்களை வரவேற்று அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

நாங்கள் எப்போதாவது இயற்கையின் இசையை ரசித்திருக்கிறோமா? அதுவும் - ஒரு சூரிய அஸ்தமனத்தின் இனிமையை, ஒரு மழைப்பொழுதின் சோகத்தினை, வசந்தகாலப் பொழுதின் அழகினை.... இப்படி பல்வேறுபட்ட கால, நேர நிலைகளுக்கு ஏற்றபடி அதன் சூழலை, அந்தச் சூழலினை அனுபவிக்கக் கூடிய ஒரு உணர்வினை எமக்குத் தருவதே கந்தர்வ வேத இசையாகும். அதாவது இயற்கையின் சாசுவதமான, அழிவற்ற இசையினை பல்வேறு பிரிவுகளாகத் தருவதே இந்த காந்தர்வவேத இசையாகும்.

காந்தர்வவேத இசை பற்றி திருமதி வசந்தி மகாநந்தனிடம் கேட்டோம்.

'கந்தர்வவேத இசையானது சர்வவியாபகமான இசை. இது மனிதர்களிலும், இயற்கையிலும் ஒரு சமநிலையை மீளத் தோற்றுவிக்கும் நோக்கத்தினைக் கொண்டது. இவ் இசையானது அதிர்ஸ்டம், ஒருமை, அழகு, உலக அமைதி பற்றி மக்களுடன் பேசுவதனூடாக ஒருமை நிலையற்றிருக்கும் மனித நடவடிக்கைகளை சமநிலையாக்குகிறது' என்றார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே நோர்வேயின் பேர்கன் நகரில் முதன் முதலாக மகரிஷி கந்தர்வவேத இசைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு Sverresgt 5-ல் செயற்பட்டு வருவதாகக் கூறினார். அது மட்டுமல்ல இக்கல்லூரி அமெரிக்கா, ஜேர்மனி, இந்தியா, ரஷ்யா, நெதர்லாந்து, பிரித்தானியா போன்ற நாடுகளிலும் ஸ்தாபிக்கப் பட்டு இயங்கிவருகிறது.



***சித்தார்:*** சதிஷ் சந்திரா, ***தபேலா:*** அனூப்குமார் பானர்ஜி, ***தம்புரா:*** வசந்தி மகாநந்தன்

இக் கல்லூரியில் விரிவுரைகளை எடுத்துவரும் பேராசிரியர்கள் சதீஸ் சந்திரா, சித்தார் இசைமேதை ரவிசங்கரின் மாணவர். தற்போது கன்பூர் KANPUR பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பீடத்தில் சித்தார் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார். தபேலாக் கலைஞர் அனூப் குமார் பனார்ஜி தேசிய ரீதியில் பிரபல்யம் பெற்ற இசைக்கலைஞர்.

ஒவ்வொரு மனிதனின் இலட்சியத்திற்குப் பின்னால் ஒரு தொடக்கமிருக்கிறது. இந்த இசைக்கலைஞர்களின் தொடக்கம் பற்றி....!

பேராசிரியர் சதீஸ் சந்திராவைக் கேட்டோம்.

'இசைக் குடும்பத்தில் பிறந்தவன்நான். எனது இசை சார்ந்த ஈடுபாடானது எனது மூத்த சகோதரர் ஹரிஸ் சந்திரா அவர்களினால் ஊக்குவிக்கப் பட்டது. சிறுவயதிலேயே சித்தார் இசையை பேராசிரியர் பன்வாரி லால் இடமும், பின் முறைப்படி மறைந்த சித்தார் இசைமேதை பண்டிதர் ரவிசங்கரிடமும் கற்றுக் கொண்டேன். இன்று இசைதான் எனது வாழ்வு'.

அனூப் குமார் பனார்ஜியைப் பொறுத்து......

'பிரபல்யமான சித்தார் கலைஞரான எனது தந்தை சிறீ அஷிம் குமார் பனார்ஜியிடமிருந்தே இசைத்துறையின் ஈடுபாட்டிற்கான உள்ளுணர்வை முதன் முதலில் பெற்றுக் கொண்டேன். சிறுவயதில் தபேலாவை சிறீ சிறீராம் சிங் இடமிருந்து கற்றபின், கடந்த 15 வருடங்களாக பேராசிரியர் லால்ஜீ சிறீவஸ்தவ இடம் முறைப்படி பயின்று வருகிறேன்'.

எல்லாவற்றிற்கும் ஒரு தோற்றுவாய் இருக்கத்தானே வேண்டும். அந்தவடிப்படையில் சாமவேதத்தின் ஒரு பிரிவான கந்தர்வவேத இசையின் தோற்றம் பற்றி பேராசிரியர் சதீஸ் சந்திராவிடம் கேட்டோம்.

மனித வரலாற்றிலேயே சத்தங்களை என்று நாம் கேட்கத் தொடங்கினோமோ, அன்றிலிருந்தே இசை தோன்றிவிட்டது எனக் கூறிய அவர் இசையென்பது ஒன்றெனவும் அதன் தன்மைகளும், போக்குகளுமே வேறுபட்டன எனவும் குறிப்பிட்டு சாம வேதம்தான் இசையின் முதல் நூலெனவும் கூறினார். இவ்விடத்தில், திருமதி. வசந்தி மகாநந்தன் இவ்வுலகெங்கும் கந்தர்வவேத இசை வழிந்தோடுவதற்கு முதல் வாய்க்காலினை வெட்டியவர்கள் சாமு முனியும், பரத முனியும் ஆவரெனக் குறிப்பிட்டார்.

தோற்றமென்று ஒன்றில்லாமல் வாழ்வு என்று ஒன்றிருக்க முடியுமா? முடியவே முடியாதல்லவா! அதனால் சித்தார், தபேலா இசைக் கருவிகளின் தோற்றம், பரிணாமம் பற்றி அறிய ஆவல் கொண்டோம்.

பேராசிரியரை நோக்கிய போது.....

'அமீர் குசோ என்பவரால் வடிவமைக்கப் பட்டதுதான் இந்த சித்தார் இசைக்கருவி. ஆரம்பத்தில் 3 தந்திகளையும். 17 அழுத்தங்களையும் கொண்டிருந்ததாகவும், காலப்போக்கில் 7 தந்திகளையும், 11லிருந்து 13 வரையிலான துணைத் தந்திகளையும் கொண்டதாக மாற்றம் கண்டது.'

அப்படியெனில் தபேலா....!

மகிழ்ச்சியுடனே கூறத் தொடங்கினார் அனூப்குமார் பனார்ஜி. பல வருடங்களுக்கு முன்னரேயே 'பகவத்' என்கிற ஒருவகை மிருதங்கத்தின் தொடர்ச்சியாக உருவாக்கப் பட்டதே தபேலா. கந்தர்வவேத இசையில் முக்கியத்துவமான தபேலா, எல்லா கந்தர்வதேத இசைக்கருவிகளுடனும் சேர்ந்தியங்கி, அந்த இசை வெள்ளத்திற்கு அழுத்தம் கொடுக்கிறது. தாளத்தின் பிரதிநிதி தபேலா. இக் கருவி மற்றைய இசைக்கருவிகளின் தன்மைகளை தன்னுடன் சேர்த்துக் கொள்ளக் கூடிய ஆளுமையைக் கொண்டது என்றார்.

கர்நாடக இசை. கந்தர்வவேத இசை, மேற்கத்தேய இசை... இப்படி தனித்துவங்களைப் பேணியபடி பல்வேறு இசைப் பிரிவுகள். வேறுபாடுகளிருப்பதனால் தானே தனித்துவங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. அப்படியெனில் கர்நாடக இசை, கந்தர்வேத இசை இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றிக் கேட்டோம்.

ஓம் என்றபடி ஆர்வத்துடன் கூறத் தொடங்கினார் பேராசிரியர். இவ்விரு இசையினதும் தன்மைகள்தான் முக்கியமானதும், பிரதானமானதுமான வேறுபாடுகள் ஆகும். கந்தர்வவேத இசையில் நாம் முதலிலமைப்பது ALAP. அதாவது ராகத்தின் மென்மையான வெளிப்பாடு நிலை. இந்நிலையை கர்நாடக இசையில் கீர்த்தனைகளில் தியாகராஜஸ்வாமி ஒரு சில மாற்றங்களைச் செய்திருந்தாலும், பொதுவாக கர்நாடக இசை மாற்றங்களை வேண்டி நிற்பதில்லை. ஆனால் 'கந்தர்வ வேத இசையில் நாங்கள் மாற்றங்களை வேண்டுகிறோம்; புதியனவற்றைத் தேடுகிறோம். இவ்விசை எமக்கு கலாபூர்வ்மான சுதந்திரத்தினைத் தருகிறது. கர்நாடக இசையில் வேகம் வித்தியாசமானதாகவும் விரைவானதாகவும் இருக்கிறது. கந்தர்வவேத இசையில் அப்படியில்லை. கந்தர்வவேத இசையிலிருக்கும் நேரவிதி (Time Theory) கர்நாடக இசையில் இல்லை. குறிப்பிடப்பட்ட நேரத்திற்கான குறிக்கப்பட்ட ராகத்தினை கொண்டதே நேரவிதி. கர்நாடக இசையில் எந்தராகமும் எந்த நேரத்திலும் இசைக்கப்படலாம். இன்று கர்நாடக இசை கந்தர்வவேத இசையின் பாதிப்பிற்குள்ளாகி வருவதினை நாம் காணக்கூடியதாக இருக்கிறது எனவும் பேராசிரியர் கூறினார்.

***(மிகுதி அடுத்த இதழில்)***

மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது
இங்கில்லை
Nº: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL,
MIDDLESEX, UBI 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
- FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத்
தெரிவுகளுக்கு...
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY,
MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அச்சகம்

உங்கள் சகலவிதமான

அச்சுத் தேவைகளையும்

பூர்த்திசெய்ய

**05.09.96**

முதல் ஆரம்பமாகின்றது

60 Rue Louis Blanc, 75010 Paris

தொலைபேசி: 42 09 60 64

## பிறைட்டன் வீடியோவின் இவ்வார மாபெரும் வெளியீடு

புரட்சித் தமிழன் சத்யராஜ், இளையதிலகம் பிரபு, உள்ளத்தை அள்ளித்தா புகழ் ரம்பா, தேவயாணி, சுஜாதா, நிழல்கள் ரவி, ராக சுதா, மகேஷ் ஆனந்த், மற்றும் பலரின் நடிப்பில்

பலகோடி ரூபா செலவில், தேனிசைத் தென்றல் தேவாவின் இன்னிசையில்

பாட்ஷா புகழ் சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில்

### சிவசக்தி

DOLBY STEREO



08.09.96

ஞாயிற்றுக்கிழமை

பிற்பகல்

2.30 மணி

THETER CAMERA

MALLINCKRODT STR - 209,

44147 DORTMUND

தொடர்புகளுக்கு:

BRIGHTAN VIDEO & ASIA SHOP JEWELLERY & TEXTILES

OESTERMARSCH 27 - 37, 44145 DOUTMUND

Tel: 0231 819431, 838703. Fax: 0231-811858

20.Kg Tilda Brocken பசுமதி அரிசி 24.90 Dm மட்டுமே

## வெண்திரையில்

Glorious Enterprise வழங்கும் இவ் வாரத்தின் மாபெரும் வெளியீடு

புரட்சித் தமிழன் சத்தியராஜ், இளைய திலகம் பிரபு, உள்ளத்தை அள்ளித்தா புகழ் ரம்பா, தேவயானி, நிழள்கள் ரவி, சுஜாதா மற்றும் பலரின் நடிப்பில் உருவாகிய



### சிவசக்தி

இசை: தேனிசைத் தென்றல் தேவா

கதைவசனம், டைரக்ஷன்: பாட்ஷா புகழ் சுரேஷ்கிருஷ்ணா

எமது நான்கு பிரதான காட்சிகள்

06.09.96 வெள்ளி இரவு 10.30 மணி
KINO - SCHAUBURG
FRIEDRICH STR - 22
MONCHNGLADBACH

06.09.96 வெள்ளி இரவு 12.00 மணி
CINEMA KINO
BERLINER STR - 88
WUPPERTAL OBERBARMEN

08.09.96 ஞாயிறு பகல் 11.45 மணி
CINEMA KINO
BERLINER STR - 88
WUPPERTAL OBERBARMEN

09.09.96 திங்கள் இரவு 8.00 மணி
KINO - UNIVERSUM
AM BAHNHOF
RHEYDT.

தொடர்புகளுக்கு: 02161 178007 / 02161 206393 / 01772464544

Wuppartal தொடர்புகளுக்கு: 0202 447806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய யாழ் நகரம் இனி எப்போது தமிழ் நகரமாக மாறும்?

*ச.மணிவண்ணன் – சுவிஸ்*

- இன்று தமிழீழத்தில் தாய்மார்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றி சற்றும் சிந்திக்காதவர்கள், அன்னையர் முன்னணி என்ற பெயரில் துண்டுப்பிரசுரம் வெளியிடுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

சி.கு:பிச்சைக்காரன் கோடீஸ்வரன் என்று பெயர் வைத்திருப்பது போலத்தான் இதுவும். துண்டுப் பிரசுரம் வெளியிடும் சிலர் (அனாமதேயங்கள்) தமக்குத்தாமே பெயர் வைத்துக்கொள்கின்றன என நினைக்கிறேன்.

*ந.செல்வரத்தினம் – 4562 பீப்பிறிஸ், சுவிஸ்*

- அங்கு 1500 ரூபா சம்பளம் எடுத்தேன். பின் இங்கு வந்து அங்கு கஷ்டப்படுபவர்களைக் காரணம் காட்டி 150,000 ரூபா சம்பளம் எடுத்து வங்கியில் வைத்திருக்கிறேன். நாட்டுக்குப் போகலாம் என்றால், பிரச்சினை எப்ப தீரும் என்று சொல்ல முடியுமா?

சி.கு:நீர் துணிச்சல்காரர்தான் ஐயா! உள்ளதை உள்ளபடி சொல்லியிருக்கிறீர். ஏதோ கூட்டிக் கழுவி, பிரித்து பெருக்கி கணக்குப் பார்க்கத் தெரிந்த உமக்கு பிரச்சினை தீரவும் அதற்கு ஏதாவது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் எனத் தோன்றாதது ஏன்?

*சோ. திரு, 3714 புறூட்டிங்கன், சுவிஸ்*

- ஐ.நா.வை நோக்கிய அமைதிப் பேரணிக்கு வருமாறு எனது நண்பன் ஒருவன் இந்து ஆலயமொன்றில் வைத்து துண்டுப்பிரசுரம் விநியோகித்தார். இதைக் கண்ட கோவில் நிர்வாகத்தினர் இனிமேல் இவ்வாறு நடக்கக் கூடாதென்று எச்சரித்துள்ளனர். இது சரியா?

சி.கு:பிரச்சினை வளர்ந்தால்
நேர்த்திகள் வளரும்
நேர்த்திகள் வளர்ந்தால்
உண்டியல் நிறையும்
உண்டியல் நிறைந்தால்
ஆலயம் வளரும்
ஆலயம் வளர்ந்தால்
அவர்களும் வளர்வார்கள்.

பிரச்சனை தீரவேண்டும் என்று நீங்கள் ஊர்வலம் வைத்து போராட்டம் நடத்தினால் எப்படி அனுமதிப் பார்கள்?

*P.சுதா, 45329 எசன், ஜேர்மனி.*

- தற்போதைய யாழ் நகரம் இனி எப்போது தமிழ் நகரமாக மாறும்?

## சித்திரகுப்தனார் பதில்கள்

சி.கு:விரைவில் மாறும் என நம்பலாம்; அது இன்னும் விரைவுபட வேண்டுமானால் புகலிடத் தமிழர்களின் மனங்களும் மாற வேண்டும்.

*M.சுதாராஜ், பாரிஸ் 10, பிரான்ஸ்.*

- புகலிட இலக்கியத்தினதும் இலக்கியவாதிகளினதும் இன்றைய நிலை என்ன?

சி.கு:தம்மைத்தாமே புகலிட இலக்கியத்தின் பிதாமகர்கள் எனக் கூறி தமக்குத்தாமே முடிசூட்டிக் கொண்டவர்கள், புகலிடத்தின் அதி முக்கிய பிரச்சனையான தலித் இலக்கியம் பற்றி ஆய்வு நடத்தியதுடன்– சிறீலங்காவின் அரச பத்திரிகையான 'தினகரனில்' வாழ்த்துப்பா எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

*ச.மனோ, பிராங்போட், ஜேர்மனி*

- அண்ணலும் நோக்க அவளும் நோக்கினாள் இனி அடுத்தது என்ன?

சி.கு:எவருக்கும் தெரியாமல் எங்காவது அடுத்த நாட்டுக்கு ஓடிப் போவதுதான்.

*சோ.வேந்தா, பாரிஸ் 10, பிரான்ஸ்*

- புகலிடநாடுகளில் வாழும் தமிழ்க் குடும்பங்களில் கணவன் மனைவி பிரிந்து போகும் சூழல் அதிகரித்து வருகிறதே என்ன காரணமாக இருக்கலாம்?

சி.கு:சூழல் பற்றியும்– சுயங்கள் பற்றியுமான தவறான புரிதல்களே.

*ந.மனோ 42285 வூப்பெற்றால், ஜேர்மனி*

- தேம்பாவணியை இயற்றிய வீரமா முனிவரின் இயற் பெயர் என்ன? அவர் எந்தக் காலத்தில் வாழ்ந்தவர் என்று கூறமுடியுமா?

சி.கு:இத்தாலியைச் சேர்ந்தவர்; இயற்பெயர் கொன்ஸ்சன்டைன் பெஸ்கி;
வாழ்ந்த காலம் 1680 – 1757.

*ம.தேவராஜ், பாரிஸ் 18, பிரான்ஸ்*

- வைக்கற் பட்டறையில் நாய் ஒன்று படுத்திருந்து குரைக்கிறது. என்ன செய்யலாம் சித்திரகுப்தனாரே?

சி.கு:குரைக்கிற நாய் கடிக்காது. இருந்தாலும் மாட்டுக்கு கொம்பைச் சீவி விட்டுப் பாரும்.

*பெ.சிறீதேவா, லண்டன்*

- தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை விட்டு முன்னாள் அமைச்சர்கள் விலகிக் கொண்டிருக்கிறார்களே என்ன காரணம்?

சி.கு:இப்போது பசைப்பிடிப்பு இல்லாததுதான்.

*வ.மகேந்திரன், மூஞ்சன், ஜேர்மனி*

- விடுதலைப் புலிகளை சிறீலங்கா அரசு தடைசெய்தால் விடுதலைப் போராட்டம் பின் தள்ளப்படுமா?

சி.கு:நிச்சயமாக இல்லை. முன்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்திலேயே தடை செய்யப்பட்டது தானே. அதன் பின்தான் போராட்டம் கூர்மை பெற்றது.

*ஓ.முகுந்தன், வெம்பிளி, லண்டன்*

- லண்டனில் பெருகிவரும் பரத நாட்டிய அரங்கேற்றங்களால் பரதக் கலை வளர்ச்சியடைகிறதா குப்தனாரே?

சி.கு:பரதக் கலை வளர்ச்சி பெறுகிறதோ இல்லையோ, நிறையப் பேர் அரங்கேற்றத்தின் பின்னர் தான் அங்கு அகதியாகியுள்ளனர்.

*க.சுதா, பிராங்போட், ஜேர்மனி*

- இந்தியாவின் கூட்டுமுன்னணி ஆட்சியால் சிறீலங்காவின் பிரச்சினை தீர சிறீலங்கா பொது ஜன முன்னணி ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்க முடியுமா?

சி.கு:கூட்டு முன்னணிக்குள்ளேயே ஆளாளுக்கு அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கவே அவர்களுக்கு நேரம் சரியாக உள்ளது.

# புலிகளுக்குத்தடை: சிறீலங்காவுக்கு அமெரிக்கா ஆலோசனை வழங்கியது?

சிறீலங்கா அரசாங்கம் புலிகளை தடைசெய்ய கடந்தவாரம் ஆலோசனை ஒன்றை நடத்தியதற்கு பின்னணியில் அமெரிக்கா இருந்துள்ளதாக கொழும்பில் உள்ள அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் புலிகளின் செயற்பாட்டை தடை செய்யுமாறு சிறீலங்கா அரசு கோரியதற்கு, சிறீலங்காவில் அவர்களை தடைசெய்தால் தமது நாட்டில் அவர்களை தாங்கள் தடை செய்வதாக வாஷிங்டனிலுள்ள உயரதிகாரிகள் கொடுத்த உறுதி மொழியின் அடிப்படையிலேயே புலிகளை தடைசெய்ய சந்திரிகா அரசு ஆலோசித்ததாக கொழும்புப் பத்திரிகைகள்செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியா, அமெரிக்காவின் அணு ஆயுத தடை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டை போட்டதன் காரணமாக ஏற்கனவே பாகிஸ்தானில் உள்ள தமது நிலைகளோடு, சிறீலங்காவிலும் புதிதாக தமது நிலைகளை உருவாக்கி இந்தியாவை உளவறிவதற்கும் இராணுவ ரீதியாக நிர்ப்பந்திப்பதற்கும், அமெரிக்கா, சந்திரிகா அரசாங்கத்திற்கு ஆதரவும், ஆயுத உதவியும் வழங்க முன்வந்திருப்பதாகவும், அதற்கு பிரதிபலனாக இந்தியாவின் எதிர்க் கரையான புத்தளத்தில் வொய்ஸ் ஒப் அமெரிக்க வானொலி நிலையம் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும், திருகோணமலை கடற் பிராந்தியத்தில் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் தரித்து நிற்பதற்கும் சிறீலங்கா அரசாங்கம் ஒப்புதல் வழங்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும் கொழும்பிலுள்ள ஒரு அரசியல் ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.-6

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | | | | 7 | | |
| | | | | 8 | | | |
| | | 9 | 10 | | | ■ | |
| | 11 | 12 | | | 13 | | |
| | | | 14 | ■ | | 15 | |
| | ■ | 16 | | | 17 | ■ | ■ |
| 18 | | | | | | | 19 |

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

..................................................

*போட்டியில் கலந்துகொள்பவர்கள் உங்கள் பதில்களை 23–09–96க்கு முன்பாக கடித உறையில் குறுக்கெழுத்துப் போட்டி – 6 எனக் குறிப்பிட்டு இப் பகுதியையும் இணைத்து அனுப்ப வேண்டும். [ஆ.ர்.]*

### குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம்.6

**இடமிருந்து வலம் ⊃**

1. பலவீனத்தால் இங்கு மழலைகளைப் பலி கொண்டது பேரினவாதம்.(6)
7. ஈழத் தமிழனின் அந்தஸ்து இப்படி? (3)
8. சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டியவர்.(4)
10. இதைக் காத்தல் நலம் தரும்!(3) குழம்பியுள்ளது.
12. காடு (3)
13. கடற்கோள்களால் அழிந்த கண்டம் இது (3) குழம்பியுள்ளது.
16. மீன்; கண்ணுக்கு உவமையாகும் (3)
18. கல்லாலான கருவி(3) குழம்பியுள்ளது.

**மேலிருந்து கீழ் ∪**

2. ஓர் விளையாட்டு (3)
3. பாம்பின் இனம்; ஆயுதம் (3)
4. இதை விதைத்தால் அறுவடை நிச்சயம் (2)
5. இந்துக்கள் பூஜை செய்யாத இந்து ஆலயம் (6)
6. தமிழர் திருநாள். (6)
12. வேல் ஈந்த உணவு இது. (4)

**வலமிருந்து இடம் ⊂**

14. ஆண்டிகள் கூடினாலும் இதைக் கட்டுவார்கள். (3)
15. காயம். (2)
19. பாண்டவர் தோற்றது. அறிவுக்கான விளையாட்டு. (6)

**கீழிருந்து மேல் ∩**

9. மன்னார் இதற்குப் பெயர் போனது. (3)
11. பண்டைய ஆயுதம் (3) குழம்பியுள்ளது.
17. தோல் வாத்தியம் (4) குழம்பியுள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.-5


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஓ | 2 யா | த | 3 அ | லை | 4 க | ள் | ■ |
| லை | னை | ■ | ங் | 5 பா | டா | க | 6 நூ |
| ■ | டு | 7 ஏ | கு | சு | ர | லி | ல் |
| 8 க | ம் | த | 9 ச | ர | ம் | பு | நி |
| ட | 10 ச | ட | ம் | வ | பு | ம் | லை |
| க | ன் | 11 மா | ■ | 12 பூ | 13 செ | ரு | ய |
| ம் | ரி | 14 உ | ண் | டி | ன் | 15 க | ம் |
| ■ | 16 ப | ல் | லி | ■ | னை | 17 தி | ■ |

*குறுக்கெழுத்துப் போட்டி இல.5 இல் கலந்து கொண்ட போட்டியாளர்களில் ஒருவர் மட்டுமே சரியான பதில் எழுதியிருக்கிறார். அவருக்கு ஆறு மாதங்களுக்கு 'பாலம்' சஞ்சிகை அனுப்பி வைக்கப்படுகின்றது.*

திரு. நடராஜா சந்திரகுமார்
5330 Zurzach, Swiss.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆயரின் பிரான்ஸ் வருகை



யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரின் பிரான்ஸ் வருகையை முன்னிட்டு, அன்னாருக்கு ஓர் இராப்போசன விருந்தளித்து கௌரவிக்க அனைத்து கத்தோலிக்க அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஏற்பாடுகள் செய்துள்ளன. எனவே இவ் விருந்தில் கலந்துகொண்டு உங்கள் வருகையை உறுதிப்படுத்த, நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:

என். எம். ஜெயரத்தினம்
(42 87 57 11 – செயலாளர் யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – பிரான்ஸ்)

எஸ். யேசுரத்தினம்
(39 87 08 38 – தலைவர் – இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – பிரான்ஸ்)

எஸ். றொனி
(43 94 19 05 தலைவர் – மன்னார் புனித சேவியர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – பிரான்ஸ்

கே. ஜே. பாக்கியராஜா
48 39 95 42

தமிழீழத்தில் அவதியுறும் எங்கள் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுமாறும், தங்கள் அன்பளிப்புக்களை ஆயரிடம் நேரில் கையளிக்குமாறும் பங்குபற்றும் அனைவரையும் வேண்டுகிறோம்.

காலம்:
07–09–96 சனிக்கிழமை
மாலை 7.00 மணி
இடம்: 154, Rue Saint Maur,
75011 Paris.
(புனித சூசையப்பர் ஆலயத்திற்கு பின்னால் உள்ள மண்டபம்.
Metro: Belville / Goncourt

---

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்திரிகாவின்....

ளாதார் ரீதியான அழிவுகளை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுக்களால் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டதுடன் மீண்டும் தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் செல்லவும் நேரிடுகிறது.

கொழும்பில் கண்மூடித்தனமான கைது நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாமல் தடை செய்யப்பட்டுள்ளது.

மகாசிவராத்திரி தின விடுமுறையை ரத்துச் செய்ததன் மூலம் தமிழர்களை இந்த அரசாங்கம் பூரணமாக அந்நியப்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளார்.

---

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## வவுனியா....

னியாவில் நாம் படையினருடன் சமூக உறவைப் பேணியே வருகிறோம்" என்று கூறியுள்ளார்.

வவுனியா நகரத்தில் கடமையில் ஈடுபடும் சிறீலங்காப் பொலிசார், புளொட் குழுவும் புலிகளும் ஒரே மாதிரி இருப்பதால் தமக்கு அவர்களை இனம் பிரித்து காண்பது முடியாதிருப்பதால் அவர்களுக்கு இராணுவச் சீருடையும் – இராணுவ வாகனமும் வழங்கும்படியும் அது முடியாவிட்டால் அவர்களிடமுள்ள ஆயுதங்களை வாங்கிக்கொண்டு அவர்களை நிராயுதபாணிகளாகவே வவுனியா நகரத்துக்குள் நடமாட அனுமதிக்க வேண்டும் எனவும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

## வவுனியா ஐக்கிய நலன்புரிச் சங்கம்

நடாத்தும் வருடாந்த

## பொதுக்கூட்டம் - ஒன்றுகூடல் - கலைநிகழ்ச்சி

**காலம்: 14–09–1996 சனிக்கிழமை**

**நேரம்: பிற்பகல் 2மணி முதல் இரவு 12 மணி வரை**

**நிகழ்விடம்: AGICA மண்டபம்**

177, Rue de Charonne, 75011 Paris.
(Métro: Alex / Dumas ou Charonne)

**முக்கிய குறிப்பு:** பொதுக்கூட்டம் மாலை 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் இந்நிகழ்ச்சிகளில் கலந்து தங்கள் பங்களிப்பைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**நுழைவு, இராப்போசனம், கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் இலவசம்**

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய வளர்ச்சி நிதிக்காக நடாத்தும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நேரம் மாலை 7.00 மணி. இதனைத் தொடர்ந்து இராப்போசனம், கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

*15ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட சீட்டிழுப்பு 14ம் திகதி நடைபெறும் என்பது குறிப்பிடத் தக்கது.*

---

## மரண அறிவித்தல்



மறைவு
13.08.1996

### திருமதி செல்லம்மா செல்லத்துரை

அராலி வடக்கு வட்டுக்கோட்டையை சேர்ந்த திருமதி செல்லம்மா செல்வத்துரை அவர்கள் 13.08.96 செவ்வாய்கிழமையன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலம் சென்ற இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் பாக்கியநாதன் (பிரான்ஸ்) நிர்மலகாந்தன் (பிரான்ஸ்) அவர்களின் வளர்ப்புத் தாயுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.பாக்கியநாதன் / க.நிர்மலநாதன்
1, Rue des Champs Elyseses, Gentilly, France
தொ.பே.46631611

---

## மரண அறிவித்தல்

பயிராய்
27.01.1969



விதையாய்
04.08.1996

### வடிவேலு சிவநாதன் (உத்தமன்)

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வடிவேலு சிவநாதன் (உத்தமன்) அவர்கள் 04.08.96 அன்று சிறீலங்கா இராணுவத்துடனான சமரில் வீரமரணமடைந்துள்ளார்.

இவர் வடிவேலு பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மோகனின் சகோதரரும், மற்றும் ரஞ்சன் (சுவிஸ்), ஜெகன் (கொலண்ட்), ரகு (சுவிஸ்), சாந்தி (ஜேர்மனி), சத்தி (கொலண்ட்), குகன் (ஜேர்மனி) கரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நளா, மனோ, ராசாத்தி, சுகன்யா, சங்கர் ஆகியோரின் நேசத்துக்குரிய மைத்துனரும், பழனியின் மருமகனும் நிதர்ஷனின் ஆசை மாமனாரும், சந்தோஷ், நிரோஷ் ஆகியோரின் விருப்பத்துக்குரிய சித்தப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: சகோதரன் ரஞ்சன் (CHUR - SWISS)
தொலைபேசி இல: 081 32 82 405

---

## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தாயின் மடியில்:
15.09.1959



ஆண்டவன் அழைப்பில்:
07.09.1995

### சவரிமுத்து யோகநாதன் (பாக்கியராஜா)

ஒரு தாய் வயிற்றிலே ஒன்றாக பிறந்த எங்கள்
அண்ணா உன் பாசத்தை காட்டி அன்புதனை பொழிந்து
எம்மை வாழ வைத்தாய்
காலம் செய்த கோலம் உங்களை எம்மிடம் இருந்து
பிரித்து விட்ட மாயம் என்ன?
நீங்கள் எம்மை விட்டு சென்ற நாளில் இருந்து
தூங்கவில்லை எங்கள் கண்கள்
எங்கெங்கோ உனைத்தேடி அலைகிறேம் ஆனால்
அண்ணா உனை காணவில்லை
பாசத்தின் பிணைப்பால் எங்களை எல்லாம் ஆளாக்கி விட்டு
எமை விட்டுச் சென்றதென்ன?
எங்கள் அண்ணா எத்தனை ஆண்டுகள் என்றாலும்
மறந்திடுமா உன் நினைவு – ஓராண்டு
காலமாக வாடுகின்றோம் உனைப்பிரிந்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

*அன்புடன் சகோதரிகள்*

---

## ஈழமுரசு சந்தா விபரம்

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

| | | |
|---|---|---|
| 6 மாதம் → 250 பிரெஞ்சு பிராங் | ☐ |
| 12 மாதம் → 500 பிரெஞ்சு பிராங் | ☐ |

பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

| | |
|---|---|
| 6 மாதம் → 260 பிரெஞ்சு பிராங் | ☐ |
| 12 மாதம் → 520 பிரெஞ்சு பிராங் | ☐ |

காசுக்கட்டளை, காசோலையை, 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"EELAMURASU" 22, Rue Perdonnet, 75010 Paris.
TEL: 40 37 63 63 / FAX: 40 37 64 64

---

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கந்தசாமி (சாவி)

பிறப்பு: 06.02.1967 இறப்பு: 30.08.1996

யாழ். அளவெட்டி தெற்கு 10 பனைபடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மகன் கந்தசாமி (சாவி) Wartburg Str-27, Castrop Rauxal, Germany

இல் 30.08.96 அன்று காலமானார். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: தந்தை

மேலதிகத் தகவல்களுக்கு:
Tel - 02305 - 23135 / 77624 / 20633

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 40 37 63 63
Fax: 40 37 64 64

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை
Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 35 10
Fax: 42 59 35 00
K.T.C. Jewels
193, Rue du Fg. S<sup>t</sup>.Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 42 05 41 36



குமார்ஸ்
Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet
Poissonniers
Tél: 42 59 11 52
Fax: 42 59 35 00

# அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஐ.தே.க. பாராளுமன்றத்தில் முன்னறிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு சிறீலங்காவின் எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கான முன்னறிவித்தல் கடந்த வாரம் சிறீலங்கா பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ரொனி டி மெல், விஜயபால மெண்டிஸ், ஜோன் அமரதுங்க, சுசில் முனசிங்க ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் சீமேந்துக் கம்பனியை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்பதற்கு 23.03.95ல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தை மாற்றுவதற்கு அமைச்சர் ஒருவருக்கும், அதிகாரி ஒருவருக்கும் 3 கோடி ரூபா இலஞ்சமாகக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த விவகாரத்தை சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 19-01-1996ல் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இந்த விவகாரம் அப்போது பத்திரிகைகளில் வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விடயத்தை முதலில் தெரியாத்தனமாக அம்பலப்படுத்திய கதிர்காமரே மேலிடத்தில் நிர்ப்பந்தத்தால் பின்னர் அதையிட்டு மௌனம் சாதித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்த விவகாரம் சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எடுக்கத் தவறிவிட்டதாலேயே பாராளுமன்றம் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை இழந்துவிட்டதை வெளிக்காட்டவே இத்தீர்மானம் கொண்டுவரப்பட இருப்பதாக ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது.

## வவுனியா நகரம் வழமைக்குத் திரும்பியது

கடந்தவாரம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள வவுனியா நகரத்தில் நடைபெற்ற கிரனைட் தாக்குதலையடுத்து பெரும் பதட்டத்துக்குள்ளாகியிருந்த வவுனியா நகரம் தற்போது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 5 வருடங்களுக்குப் பின் முதற்தடவையாக வவுனியா நகரத்திற்குள் புகுந்து புலிகளின் சிறு தாக்குதல் அணி ஒன்று தாக்குதல் நடத்தியதாகவும் - இதில் 7 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என கடைசியாக வெளியான கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. இத்தாக்குதலில் வவுனியா நகரத்திலுள்ள கொப்பேக் கடுவாவின் சிலையின் தலை உடைந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஒரு PLOT குழு உறுப்பினர் கொல்லப்பட்டு விட்டார். இவர் பொலிசாராலேயே கொல்லப்பட்டுவிட்டார் என்றும் படைகளுக்கும் புளொட்டுக்கும் மோதல் என்றும் தகவல்கள் வெளியானதை அடுத்து வவுனியாவில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு தகவல் தெரிவித்த புளொட் குழுவின் பேச்சாளர் கிருபைராஜா பொலிசாருக்கும் புலிகளுக்கும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது - தற்செயலாக அங்கே சென்ற எமது வாகனம் தாக்கப்பட்டதால் எமது உறுப்பினர் இறந்துவிட்டார். அவர் பொலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தாரா புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தாரா என்பது தெரியவில்லை. படையினருக்கும் எமக்கும் மோதல் கிடையாது. வவு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சந்திரிகாவின் இரண்டு வருட ஆட்சி இரத்தக்கறை படிந்த மோசமான ஆட்சி

"திருமதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரண்டுவருட ஆட்சியானது சிறீலங்காவின் வரலாற்றைப் பொறுத்தவரை இரத்தக்கறை படிந்த மோசமான ஆட்சியாகும்" என்று கொழும்புத் தமிழர் நடவடிக்கைக் குழு குற்றம்சாட்டியுள்ளது.

இக்குழுவின் தலைவர் டாக்டர் கே. வேலாயுதபிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையில் இதற்கு முன் இருந்த அரசாங்கத்தின் காலத்தைப் போல இந்த அரசாங்கத்தின் இரண்டு வருட காலத்திலும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும், ஆயிரத்துக்கும் அதிகமானோர் அங்கவீனர்களாக்கப்பட்டும் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலம் இந்த அரசாங்கம் பாரியளவில் அகதிகள் பிரச்சனையை உருவாக்கியுள்ளது. வட பகுதியிலுள்ள தமிழ் மக்களின் அவலமும் பாதிப்பும் நன்கறியப்பட்டவையே. சர்வதேச சமூகம் கூட இதனை அறிந்துள்ளது. யாவற்றுக்கும் மேலாக இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு, உடை, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை அங்கு அனுப்பிவைப்பதிலும் அரசு கஞ்சத்தனம் காட்டுகிறது.

இந்த அரசு கட்டடங்களைத் தகர்த்தும், தமிழ் மக்களின் விவசாய நிலங்களை நாசாமக்கியும் பொரு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஓட்டமாவடியில் தாக்குதல்

கிழக்கு மாகாணம் - வாழைச்சேனைக்கு அருகிலுள்ள ஓட்டமாவடியில் 30-08-96 வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற கிரனைட் தாக்குதலில் பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நால்வர் காயமடைந்துள்ளனர்.

ஓட்டமாவடி சந்தைக்கு முன்பாக நின்றிருந்த இனந்தெரியாத இளைஞர் ஒருவர் கிரனைட்டை வீசிவிட்டு தப்பிச் சென்ற இச்சம்பவத்தில் முஸ்லீம் இளைஞரான பொலீஸ்காரரே கொல்லப்பட்டதாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## கொழும்பில் இடியப்பத்தின் விலையும் அதிகரித்தது

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் - கோதுமை மாவின் விலையை அதிகரித்ததால் - கொழும்பிலுள்ள சைவ உணவுக் கடைகள் ஒரு இடியப்பத்தின் விலையை 1 ரூபாவிலிருந்து 1 ரூபா 25 சதமாக உயர்த்தியுள்ளன.

சில இடங்களில் தோசை வடை என்பவற்றின் விலை 50 சதத்தால் அதிகரித்துள்ளது. அரிசி வெங்காயம், உருளைக்கிழங்கு என்பவற்றின் விலையும் கடந்தவாரம் அதிகரித்துள்ளது.

மீனின் விலை கிலோவுக்கு 20 ரூபா குறைந்திருக்கும் அதேநேரம் செத்தல் மிளகாயின் விலை 5 ரூபாவால் அதிகரித்துள்ளது.

பாணின் விலை 7 ரூபா 50 சதமாக அதிகரித்துள்ள நிலையில் பல பேக்கரிகளில் 450 கிராம் (1 இறாத்தல்) இருக்க வேண்டிய பாணை 300 தொடக்கம் 400 கிராம் அளவில் தயாரித்து விற்பனை செய்து வருவதாக புகார்கள் கிளம்பியுள்ளன.

## நில அளவையாளர்கள் பாதயாத்திரை

நில அளவை முறைகளில் மாற்றம் செய்ய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்ததைக் கண்டித்து சிறீலங்காவிலுள்ள நில அளவையாளர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தம் கடந்த 31-08-96 சனிக்கிழமையுடன் 90 நாட்களை எட்டியுள்ளது. இதனையொட்டி சனியன்று காலை பம்பலப்பிட்டியிலுள்ள தமது அலுவலகத்திலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் நில அளவையாளர்கள் கதிர்காமத்தை நோக்கிய நீண்ட பாதயாத்திரையை ஆரம்பித்தனர்.

இந்தப் பாதயாத்திரை எதிர்வரும் 10-09-96 செவ்வாய்க்கிழமையன்று கதிர்காமத்தில் நடைபெறும் விசேட பூசையுடன் முடிவுறும் என்று மேற்படி சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் வீடியோ, ஓடியோ கசட், கொம்பக் டிஸ்க் மற்றும் புடவை வகைகள், மளிகைச் சாமான்களுடன் கடல் உணவுகள், மரக்கறிகள் போன்ற உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
S.K.TRADING
Gasometer Street 31,
8005 Zurich,
Switzerland
Tel: 01-2724336
077-782201
Fax: 01-2732377

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org